
நீலா
மாலா
குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

### உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

### Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**


The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# நீலா மாலா



குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

விற்பனை உரிமை:

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை-1.

வெளியீட்டோர் :

குழந்தைப் புத்தக நிலையம்
சென்னை-17

விலை ரூ. 6/-

---

| | | |
|---|---|---|
| Book's Title | : | NEELA MAALA (Novel for Children) |
| Author | : | AL. VALLIAPPA |
| Illustrator | : | RAMANI |
| Language | : | TAMIL |
| Paper | : | 11·6 Kg. |
| Printing Point | : | 12 Point |
| Size | : | 18·5 × 12·5 c.m. |
| Pages | : | 194 |
| Edition | : | First Edition, August, 1977 |
| Price | : | Rs. 6/- |
| Publisher | : | KULANDAI PUTHAKA NILAYAM Madras-17 |
| Sole Distributor | : | PAARI NILAYAM Madras-1 |
| Printer | : | Jeevan Press, Madras-5 |

பல்கலை வித்தகர் மீ. ப. சோமு அவர்களின்

# அணிந்துரை

"இந்தப் பத்திரிகையில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனையே; சம்பவங்களும் கற்பனையே" என்று ஒரு வாக்குறுதியை நம்முடைய பத்திரிகைகளில் 'பளிச்' சென்று தெரிகிற ஓர் இடத்தில் போடுகிறார்கள் அல்லவா? அந்தக் காலத்தில் எல்லாம் கதைகள் மட்டும் அல்லாமல், பத்திரிகையில் வெளிவருகிற எல்லாவற்றுக்கு மாக மொத்தமாகச் சேர்த்து அவை யாவும் கற்பனையே என்று வாக்குறுதி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் ராஜாஜி என்னிடம் கேட்டார்கள்: "இது என்ன இப்படி ஓர் அறிவிப்புப் போடுகிறீர்கள்? உங்களுடைய அரசியல் கட்டுரைகள் தலையங்கங்களுக்கும் இந்த வாக்குறுதி பொருந் தாதா?" என்று.

நான் கல்கி பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பில் இருந்த சமயம் அது. இதைத் தொடர்ந்து அந்த அறிவிப்பில் எப்படி மாறுதல் செய்யலாம் என்று யோசித்தோம். பிறகு, கற்பனைக் கதைகளுக்கு மட்டும் பொருந்துகிற முறையில் இந்த அறிவிப்பை உரிய மாறுதலோடு வெளியிடத் தொடங் கினோம்.

இந்த நிகழ்ச்சி எனக்கு இப்போது இந்த நூலைப் படிக்கும் போது நினைவுக்கு வருகிறது. நண்பர் அழ. வள்ளியப்பா எழுதியுள்ள 'நீலா மாலா'வை முழுமையாகப் படித்து முடித் ததும், "இந்தக் கதையில் வரும் பெயர்கள் யாவும் கற் பனையே; சம்பவங்களும் கற்பனையே" என்று சொல்வதற்குப் பதிலாக, "இந்தக் கதையில் வரும் பெயர்களில் பெரும் பாலானவை கற்பனையே; சில பெயர்கள் மட்டும் உண்மைப் பெயர்களே; சம்பவங்களும் பெரும்பாலும் கற்பனையே; சில மட்டும் உண்மை நிகழ்ச்சிகளே" என்று அந்த அறிவிப்பில் ஒரு மாறுதல் செய்து சொல்லலாம் என்று தோன்றுகிறது.

நீலா மாலா கதை வாழ்க்கையோடு ஒட்டிய கற்பனை என்பதோடு கூட, நமது சமுதாய வாழ்வில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகளும், நமது வாழ்வில் நம்மோடு வாழ்ந்து மறைந்த சில பெரியோர்களும், இன்றைக்கும் நம்மோடு வாழ்ந்து வருகிற சில பெரியோர்களும் இந்தக் கதையில் இடம் பெறு கிறார்கள். வள்ளியப்பா அந்தக் கதாபாத்திரங்களையெல்லாம், கற்பனைப் பாத்திரங்களோடு இணைத்து வளையவிட்டிருக்கிறார்.

நிகழ்ச்சிகளிலும் கற்பனையையும், செய்திகளையும் பின்னி ஓட விட்டிருக்கிறார். இது இந்த நூலின் ஒரு பெரிய சிறப்பாகும். அந்தச் சிறப்பின் காரணமாக இதைப் படிக்கும் சிறுவர் சிறுமியருக்கு, அன்றாட நடைமுறை நிகழ்ச்சிகளில் ஏற்படு கிற ஆர்வமும், அக்கறையும் கதைக் கற்பனையைப் படிக்கும் போதும் ஏற்படுகிறது. சிறுவர்களுக்காகக் கதைகள் எழுதும் போது, அந்த எழுத்து முறையில் கையாளுவதற்கு உகந்த ஒரு நல்ல உத்தி இது. இந்த உத்தியை வள்ளியப்பா அருமை யாகக் கையாண்டு, கதையின் நிகழ்ச்சிகளை, 'அதற்குப் பிறகு என்ன நடந்தது?' என்று ஒவ்வொரு அத்தியாயத்தின் முடி விலும் ஆவல் உண்டாகும் வகையில், தொடராக எழுதிச் சென்றிருக்கிறார். ஆகையால், புத்தகத்தைக் கையில் எடுத் ததும், அப்படியே மேலே மேலே படித்துக்கொண்டு போகும் படி தூண்டுகிறது, நிகழ்ச்சிகளின் அடுக்கு வரிசை.

வள்ளியப்பா அவர்களின் குழந்தைக் கவிதைகள் நாடு முழுதும் புகழ்பெற்ற சேய் நலச் செல்வங்கள். அவற்றைப் போலவே இந்த உரை நடைக் கதையும் குழந்தைகளுக்கு நல்ல எண்ணங்களும், உயர்ந்த குறிக்கோளும், அறிவுப் பசியும், தாய், தந்தை, ஆசிரியர் ஆகியோரிடம் மதிப்பும் ஏற்படுத்தக்கூடிய விதத்தில் தூய முறையில் எழுதப்பட்டி ருக்கிறது. எளிய நடையில், பேச்சுத் தமிழில் இந்தக் கதை அமைந்திருப்பதால், பாடப் புத்தகங்களைப் படிப்பது போல் இல்லாமல் பத்திரிகைகளைப் படிப்பதுபோல் எண்ணிச் சிறு வரும் சிறுமியரும் இந்த நூலை ஆவலோடு படிப்பார்கள்.

அமைதியும், உறவு மனப்பான்மையும், இனிய அன்பும், சோர்வின்றி உழைக்கும் மனப்பாங்கும் நிரம்ப அமைந்த நண்பர் வள்ளியப்பா. நல்ல குழந்தை இலக்கியத்திற்கும், குழந்தைகளின் நல்வாழ்வுக்கும் நூல்கள் எழுதியும், சங்கங்கள் அமைத்தும், இன்னும் பல வகையிலும் ஒப்பற்ற ஊக்கத் தோடு தொண்டு செய்துவருகிற என் இனிய நண்பர் வள்ளி யப்பா அவர்கள், இது போன்று இன்னும் பல நூல்கள் எழுதித் தமிழிலக்கியத்திற்கு மேலும் மேலும் தொண்டாற்ற வேண்டுமென்று பெரிதும் விரும்புகிறேன். அதற்கு குழந் தைப் பெருமானாகிய முருகப் பெருமான் துணை செய்ய வேண்டும் என்பதே என் ஆசை.

*3327, அண்ணாநகர்*
*சென்னை-600040*
*1—8—77*

மீ. ப. சோமசுந்தரம்

# ஆசிரியர் முன்னுரை

சிறுவருக்காக வெளிவரும் ஒரு சிறந்த பத்திரிகை 'கோகுலம்'. அப்பத்திரிகையில் 1976ஆம் ஆண்டு 'நீலா மாலா' என்னும் இக் கதையை எட்டு மாதங்கள் தொடர்ந்து எழுதி வந்தேன். பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் படித்து மகிழ்ந்த கதை, இப்போது புத்தக வடிவம் பெற்றிருக்கிறது.

நீலா சின்னஞ் சிறு கிராமத்தைச் சேர்ந்த ஓர் ஏழைச் சிறுமி. மாலா, சென்னையிலுள்ள புகழ் பெற்ற ஒரு டாக்டரின் மகள். இருவரும் வேற்றுமையின்றிப் பழகுகின்றனர். இணைபிரியாத தோழிகளாகின்றனர். இருவரின் அன்பினுல் பல நன்மைகள் விளைகின்றன. அவர்களது நட்பினுல் பல அற்புதங்கள் நிகழ்கின்றன.

கதையில் வரும் நீலாவும் மாலாவும் நேரு பரிசு பெற்று, சோவியத் நாடு சென்று திரும்புகின்றனர். என் இனிய நண்பரும், சிறந்த கவிஞருமாகிய அமரர் நாக முத்தையா அவர்களின் மகள் செல்வி திலகவதி, 1971ஆம் ஆண்டு நேரு பரிசு பெற்று சோவியத் நாடு சென்று வந்தார். அவரிடம் இப் பரிசைப் பற்றியும், பயணத்தைப் பற்றியும் நேரிலே பல விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். சில புத்தகங்கள் மூலமாகவும் 'ஆர்த்தெக்' முகாம் பற்றித் தெரிந்து கொண்டேன். கேட்டதும் படித்ததும் எனக்கு மிகவும் பயன் பட்டன.

விமானத்தில் வரும்போது நீலாவின் வலது கண்ணுக்கு விபத்து ஏற்பட்டுப் பார்வையை அவள் இழக்கிருள். இழந்த பார்வையை ஒரு மாதத்தில் மீண்டும் பெற்றுவிடுகிருள். இறந்த ஒருவரின்

# ஆசிரியர் முன்னுரை

சிறுவருக்காக வெளிவரும் ஒரு சிறந்த பத்திரிகை 'கோகுலம்'. அப்பத்திரிகையில் 1976ஆம் ஆண்டு 'நீலா மாலா' என்னும் இக் கதையை எட்டு மாதங்கள் தொடர்ந்து எழுதி வந்தேன். பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் படித்து மகிழ்ந்த கதை, இப்போது புத்தக வடிவம் பெற்றிருக்கிறது.

நீலா சின்னஞ் சிறு கிராமத்தைச் சேர்ந்த ஓர் ஏழைச் சிறுமி. மாலா, சென்னையிலுள்ள புகழ் பெற்ற ஒரு டாக்டரின் மகள். இருவரும் வேற்றுமையின்றிப் பழகுகின்றனர். இணைபிரியாத தோழிகளாகின்றனர். இருவரின் அன்பினால் பல நன்மைகள் விளைகின்றன. அவர்களது நட்பினால் பல அற்புதங்கள் நிகழ்கின்றன.

கதையில் வரும் நீலாவும் மாலாவும் நேரு பரிசு பெற்று, சோவியத் நாடு சென்று திரும்புகின்றனர். என் இனிய நண்பரும், சிறந்த கவிஞருமாகிய அமரர் நாக முத்தையா அவர்களின் மகள் செல்வி திலகவதி, 1971ஆம் ஆண்டு நேரு பரிசு பெற்று சோவியத் நாடு சென்று வந்தார். அவரிடம் இப் பரிசைப் பற்றியும், பயணத்தைப் பற்றியும் நேரிலே பல விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். சில புத்தகங்கள் மூலமாகவும் 'ஆர்த்தெக்' முகாம் பற்றித் தெரிந்து கொண்டேன். கேட்டதும் படித்ததும் எனக்கு மிகவும் பயன் பட்டன.

விமானத்தில் வரும்போது நீலாவின் வலது கண்ணுக்கு விபத்து ஏற்பட்டுப் பார்வையை அவள் இழக்கிறாள். இழந்த பார்வையை ஒரு மாதத்தில் மீண்டும் பெற்றுவிடுகிறாள். இறந்த ஒருவரின்


# காணிக்கை

தமிழ் நாட்டின் தலைசிறந்த
ஓவியர்களில் ஒருவராய்த்
திகழ்ந்தவரும், என்னுடைய
பல புத்தகங்களுக்குச்
சிறந்த முறையில் படங்கள்
வரைந்து உதவியவருமாகிய
காலஞ் சென்ற
ஓவியர் சாகர் அவர்களுக்கு—



# பதினாறு அத்தியாயங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஏழு பரிசுகள்! | 9 |
| 2. | அம்மாவுக்கு ஆபத்தா ? | 18 |
| 3. | அப்பாவின் தியாகம் | 28 |
| 4. | மாலா வந்தாள் | 37 |
| 5. | மாலா சொன்ன கதை | 47 |
| 6. | முரளி சொன்ன ரகசியம் ! | 57 |
| 7. | மாலா வரைந்த படம்! | 67 |
| 8. | மாங்குயில் சிறுவர் சங்கம் | 78 |
| 9. | பொன்மனம் நாடகம் | 91 |
| 10. | சங்கிலியாண்டி சரண் அடைந்தான்! | 105 |
| 11, | பத்திரிகைகளின் பாராட்டு | 117 |
| 12. | சென்னையில் பொன்மனம் | 130 |
| 13. | நாடகம் திரைப் படமானது ! | 141 |
| 14. | நீலா மாலாவுக்கு நேரு பரிசு | 154 |
| 15. | சோவியத் நாட்டில் நீலா மாலா! | 166 |
| 16. | ஒளி தெரிந்தது ! | 181 |



# 1. ஏழு பரிசுகள்!

“பாட்டுப் போட்டி—முதல் பரிசு—கே. நீலா” என்றார், பரிசு பெற்றவர்கள் பட்டியலைக் கையில் வைத்திருந்த தலைமை ஆசிரியர் தணிகாசலம். உடனே மேடையில் இருந்த ஓர் ஆசிரியர் ஒரு ஃபவுண்டன் பேனாவைக் கலெக்டரிடம் கொடுத்தார்.

ஆனால், கலெக்டரிடம் பேனாவைப் பெற்றுக் கொள்ள நீலா மேடைக்கு ஓடி வரவில்லை! ஏன்? நீலா அந்தக் கூட்டத்தில் இல்லையா? இருந்தாள். சுவர் ஓரமாக நின்றுகொண்டிருந்த அவளது கவனம் எங்கோ இருந்தது. அவளது கண்கள் கூட்டத்தில் யாரையோ தேடித் தேடிப் பார்த்துக் கொண்டிருந்தன. தன் பெயரைத் தலைமை ஆசிரியர் கூப்பிட்டது அவள் காதில் விழவில்லை.

“முதல் பரிசு பெற்ற நீலா உடனே மேடைக்கு வருக” என்று மீண்டும் ஒரு முறை தலைமை ஆசிரியர் ஒலிபெருக்கியில் கூறினார்.

"நீலா, உன்னைத்தான்!"

"நீலா, என்னடி சும்மா நிற்கிறாய்?"

"உம், போய்ப் பரிசை வாங்கிக் கொள்."

—இப்படி ஒரே சமயத்தில் பல குரல்கள் பல திசைகளிலிருந்து வந்தன.

நீலாவுக்கு அப்போதுதான் சுய நினைவு வந்தது. நிலைமையைப் புரிந்து கொண்டாள். நேராக மேடைக்கு ஓடினாள்.

"இதோ நீலா வருகிறாள்" என்றார் விழாவுக்குத் தலைமை வகித்த பரமசிவம் பிள்ளை. கலெக்டர் பேனாவைப் பரிசாகக் கொடுத்தார். நீலா வணக்கம் செலுத்திப் பணிவுடன் இரு கைகளாலும் பேனாவைப் பெற்றுக் கொண்டாள். கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

* * *

"பேச்சுப் போட்டி - முதல் பரிசு—கே. நீலா"

சிறிது நேரத்தில், மறுமுறையும் நீலாவின் பெயரைப் படித்தார் தலைமை ஆசிரியர். அப்போதும் நீலா திரும்பித் திரும்பிக் கூட்டத்தைப் பார்த்துக் கொண்டே மேடைக்குச் சென்றாள். கலெக்டர் கொடுத்த 'அதிசயப் பெண்மணி' என்ற அழகான புத்தகத்தைப் பெற்றுக் கொண்டாள். மேடையிலிருந்து இறங்கும்போதும், அவள் கண்கள் ஆவலாக யாரையோ தேடின.


ஆண்டு விழா

இந்த இரண்டு போட்டிகளில் மட்டும்தானு நீலா பரிசு வாங்கினுள்? இல்லை; கட்டுரைப் போட்டி, கையெழுத்துப் போட்டி, பொது அறிவுப் போட்டி என்று ஆக மொத்தம் ஐந்து போட்டிகளில் முதல் பரிசு பெற்றுள். ஓவியப் போட்டியிலும், மாறு வேடப் போட்டியிலும் இரண்டாவது பரிசு பெற்றுள். மொத்தம் ஏழு பரிசுகள்!

அவளுடைய பெயரைச் சொல்லி அழைக்கும் ஒவ்வொரு தடவையும் கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். பரிசு பெற அவள் மேடைக்குச் செல்லும் போதும், திரும்பி வரும் போதும் பலர் அவளது கையைப் பிடித்துக் குலுக்கினர்; முதுகிலே தட்டிக் கொடுத்துப் பாராட்டுத் தெரிவித்தனர். இத்தனை பாராட்டும் ஆரவாரமும் இருந்தும் நீலாவின் முகத்தில் முழுமையான மகிழ்ச்சி இல்லை. ஏதோ ஒரு குறை அவளது நெஞ்சை அழுத்திக் கொண்டிருந்தது.

"நான் பரிசு பெறும் காட்சியை இத்தனை பேர் பார்த்துப் பாராட்டுகிறுர்களே! ஆனுல், யார் அவசியம் பார்க்கவேண்டும் என்று நான் நினைக்கிறேனே அவர்கள் பார்க்கவில்லையே!" என்று அவள் எண்ணி எண்ணி ஏங்கினுள்.

தனித் தனியாக எல்லாப் போட்டிகளுக்கும் பரிசு கொடுத்து முடிந்த பிறகு, தலைமை ஆசிரியர் ஒரு வெள்ளிக் கோப்பையைக் கொண்டுவந்து கலெக்டருக்கு முன்னுல், மேசை மேல் வைத்தார்.

“இந்தப் பூங்குடி ஒரு சிறு கிராமம். இதுவோ ஐந்தாம் வகுப்பு வரை உள்ள ஓர் ஆரம்பப் பள்ளி. ஆனாலும், இங்கு நடைபெறும் நமது பள்ளி ஆண்டு விழாவுக்கு நமது மாவட்டக் கலெக்டரே வந்திருந்து பரிசுகளை வழங்குவது நமக் கெல்லாம் பெருமையாக இருக்கிறது. நாங்கள் போட்டிகளை அறிவித்தபோது, எந்தக் குழந்தை மூன்று போட்டிகளில் முதல் பரிசு பெறுகிறதோ, அதற்கு ஒரு வெள்ளிக் கோப்பையைச் சிறப்புப் பரிசாகக் கொடுக்க ஆசைப்பட்டோம். ஆனால், ஒரே சிறுமி ஐந்து முதல் பரிசுகளையும், இரண்டு இரண்டாவது பரிசுகளையும் பெற்றிருக்கிறாள்! முந்நூறு ரூபாய் மதிப்புள்ள இந்த வெள்ளிக் கோப்பையை வாங்கி அன்பளிப்பாக நமக்குத் தந் தவர் வேறு யாருமல்ல; இன்று இவ் விழாவுக்குத் தலைமை தாங்கும் பரமசிவம் பிள்ளை அவர்களே! இந்த வெள்ளிக் கோப்பையைத் தட்டிக் கொண்டு போகவிருக்கும் சிறுமி யார் என்பது உங்களுக் குத் தெரியும்...”

தலைமை ஆசிரியர் இப்படிச் சொன்னதும், “தெரியும், தெரியும்” என்றன பல குரல்கள்.

“கே. நீலா ! கே. நீலா !” என்று பல சிறுவர் களும், சிறுமிகளும் உற்சாகப் பெருக்கில் குதித் துக்கொண்டே கூச்சலிட்டனர்.

“ஆம், இந்த வெள்ளிக் கோப்பையை நீலா வுக்கு வழங்கும்படி கலெக்டர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்” என்று கூறிவிட்டுத் தலைமை ஆசிரியர் உட்கார்ந்தார்.

கலெக்டர் கம்பீரமாக எழுந்து நின்ருர். ஒலி பெருக்கியின் முன்பு உற்சாகமாகப் பேசினுர்:

"காந்தி மகான் பெயரை இந்தப் பள்ளிக்கு வைத்திருக்கிறீர்கள். பெயருக்கு ஏற்றபடி இந்தப் பள்ளி நன்முறையில் நடந்து வருவதை நான் நன்ருக அறிவேன். குழந்தைகள் நடத்திய நாடகம், நாட்டியம் எல்லாம் எவ்வளவு சிறப்பாக இருந்தன ! ;பெரிய பட்டணங்களில்கூட இப்படி நான் கண்டதில்லே. இவை எல்லாவற்றையும்விட நான் மிக உயர்வாக நினைப்பது எது தெரியுமா? ஒரே சிறுமி ஏழு பரிசுகளைப் பெற்ருளே, அதுதான்! அந்தச் சிறுமியைப் பற்றிய விவரங்களைத் தலைமை ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். ஏழையாக இருந்தாலும் எல்லாத் துறைகளிலும் அவள் கெட்டிக்காரியாக இருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இச்சிறுமிக்கு ஊக்கம் அளித்து, உதவியும் செய்தால், எதிர் காலத்தில் இவள் மிகவும் சிறந்தவளாக, நாடு போற்றும் நல்லவளாக, ஒரு தலைவியாக விளங்கினுலும் விளங்கலாம். இந்தப் பள்ளியில் ஐந்து வகுப்பு வரையில்தான் இருக்கிறது. இந்த ஆண்டுடன் இவளது படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட வேண்டியதுதாஞ ? இங்கிருந்து நான்கு மைல் தூரத்தில் உயர்நிலேப் பள்ளி இருக்கிறது. அங்கு அனுப்பி இவளைப் படிக்க வைக்க வேண்டும். இந்த நல்ல காரியத்தைச் செய்ய இந்த ஊரில் உள்ள பணக்காரர்களில் யாரேனும் முன்வந்தால் நல்லது. அப்படி யாருமே முன் வராது

போனாலும், கவலைப்பட வேண்டாம். தலைமை ஆசிரியர் எனக்குத் தகவல் கொடுத்தால் என்னால் முடிந்ததை நிச்சயம் செய்வேன்.''

கலெக்டர் இப்படிக் கூறியதும், தலைமை வகித்த பரமசிவம் பிள்ளை கலெக்டரிடம் மெது வாக ஏதோ சொன்னார்.

உடனே கலெக்டர், "ஒரு மகிழ்ச்சியான செய்தி. தலைமை தாங்கும் பரமசிவம் பிள்ளை அவர்களே இச் சிறுமியை எஸ். எஸ். எல். சி.வரை படிகக வைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறா ராம். புத்தகங்கள், துணிமணிகள் வாங்கவும், தினமும் இங்கிருந்து பஸ்ஸில் போய் வரவும், இன்னும் படிப்பு சம்பந்தமான எல்லாச் செலவு களையும் அவரே ஏற்றுக் கொள்கிறாராம். அவரை என் சார்பிலே, உங்கள் சார்பிலே, மாணவர்கள் சார்பிலே பாராட்டுகிறேன்'' என்றார்.

உடனே அந்தப் பள்ளிக்கூடமே அதிரும்படி, கூடியிருந்தோர் பலமாகக் கை தட்டி மகிழ்ச்சி யைத் தெரிவித்தனர்.

"சரி, இப்போது வெள்ளிக் கோப்பையை நீலாவுக்கு வழங்குகிறேன் '' என்று கூறிக் கோப்பையைக் கையிலே எடுத்தார் கலெக்டர். ஆனால், நீலா மேடைக்கு வரவில்லை.

"நீலா, உடனே மேடைக்கு வரவும்'' என்றார் தலைமை ஆசிரியர்.

நீலா வரவில்லை. பல முறை அழைத்தும் நீலா வரவில்லை. நீலா அங்கே இருந்தால்தானே வருவதற்கு?

"நீலா எங்கே?", "நீலா எங்கே?" என்று ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டனர்.

ஒரே பரபரப்பு! பள்ளியின் உட்புறம் முழுதும் தேடிப் பார்த்து விட்டனர். பள்ளியின் வெளியிலும் சிலர் ஓடிச் சென்று தேடிப் பார்த்தனர். நீலாவைக் காணோம்!

அப்போது, ஓர் ஆசிரியை தலைமை ஆசிரியர் அருகிலே ஓடி வந்தார். அவரது காதுக்குள் இரகசியமாக ஏதோ சொன்னார்.

"என்ன! உண்மையாகவா?" என்று திகிலுடன் கேட்டார் தலைமை ஆசிரியர்.

"ஆம், இப்போதுதான் ஒரு பையன் சொன்னான்" என்றார் ஆசிரியை.

உடனே தலைமை ஆசிரியர் கலெக்டரிடமும், பரமசிவம் பிள்ளையிடமும் ஆசிரியை சொன்னதை மெதுவாகச் சொன்னார்.

"என்ன! மகிழ்ச்சியான இந்த நேரத்திலே இப்படி ஒரு செய்தியா?" என்று திடுக்கிட்டார் கலெக்டர்.

"பாவம், நீலா!" என்றார் பரமசிவம் பிள்ளை.


உடனே கலெக்டர், "எதிர்பாராத காரணத்தால், நீலா நேரிலே இந்தக் கோப்பையைப் பெற்றுக் கொள்ளமுடியவில்லை. தலைமை ஆசிரியரிடம்

இந்தக் கோப்பையைக் கொடுக்கிறேன். அவர் நீலாவிடம் இதைச் சேர்த்துவிடுவார்'' என்றார்.

நன்றிகூடக் கூறவில்லை. நாட்டு வாழ்த்துடன் விழா முடிந்தது.

நீலா எங்கே போனாள்?

நீலாவுக்கு என்ன நேர்ந்தது?





## 2. அம்மாவுக்கு ஆபத்தா?

விழா முடிந்ததும், கலெக்டர் தம்முடைய காரிலேயே பரமசிவம் பிள்ளையையும், தலைமை ஆசிரியர் தணிகாசலத்தையும் ஏற்றிக் கொண்டார்.

"அந்தப் பெண் வீடு எங்கே இருக்கிறது? டிரைவருக்கு வழி சொல்லுங்கள்" என்றார் கலெக்டர்.

சிறிது நேரத்தில் கலெக்டரின் கார், ஊரின் கடைசியில் இருந்த குடிசைப் பகுதிக்கு வந்தது. அப்போது இரவு மணி எட்டு இருக்கும்.

"இதோ இந்தக் குடிசைதான்" என்று கூறித் தலைமை ஆசிரியர் ஒரு குடிசையைக் காட்டினார். டிரைவர் காரை அந்தக் குடிசையின் முன்னால் நிறுத்தினார். கார் நின்றதும் எல்லாரும் வேகமாகக் கீழே இறங்கினார்கள். தலைமை ஆசிரியர் முன்னால் சென்றார்.

அந்தக் குடிசைக்குள் அரிக்கேன் விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. எந்த வித சப்தத்தையும் காணோம்.

"இன்னும் வைத்தியரது வீட்டிலிருந்து வர வில்லை போலிருக்கிறது" என்றார் கலெக்டர்.

"வைத்தியர் வீடு பக்கத்தில் இல்லை. அது இன்னொரு கோடியில் இருக்கிறது" என்றார் பரம சிவம் பிள்ளை.

அதே சமயம், குடிசைக்குள்ளேயிருந்து விளக்கைக் கையில் ஏந்தியபடி யாரோ வருவது தெரிந்தது. "யாரது?" என்று கேட்டார் தலைமை ஆசிரியர்.

திரியைத் தூண்டிவிட்டு விளக்கைத் தூக்கிப் பிடித்தது அந்த உருவம். "அடடே, தலைமை ஆசிரியரா!? இதோ எங்கள் எஜமானர். அது யார்? தெரியவில்லையே!" என்று அந்த உருவம் கேட்டது.

உடனே பரமசிவம் பிள்ளை, "யாரது மீனாட்சியா? உன்னைக் கருந்தேள் கொட்டினதாக யாரோ சொன்னார்களே?" என்று கேட்டார்.

"கருந்தேளா? என்னைக் கொட்டியதா! யார் சொன்னது?" என்றாள் மீனாட்சி அம்மாள்.

மூவரும் ஒருவரைப் பார்த்து ஒருவர் விழித்தனர்.

"அப்படியானால் எல்லாம் பொய்தானா?" என்றார் தலைமை ஆசிரியர்.

"பொய்யாக இருப்பதே நல்லது. மெய்யாக இருந்தால் பாவம், அந்தப் பெண் நீலா என்ன பாடு படுவாள்?" என்றார் கலெக்டர்.

"சரி மீனாட்சி, நீலா எங்கே? இங்கே வரவில்லையா?" என்று கேட்டார் பரமசிவம் பிள்ளை.

"பகலிலே பள்ளிக்கூடம் போனவள்தான். இன்னும் வரவில்லையே!" என்று பதில் அளித்தாள் மீனாட்சி அம்மாள்.

உடனே தலைமை ஆசிரியர், "இந்த அம்மாளைக் கருந்தேள் கொட்டி உயிருக்கே ஆபத்து ஏற்பட்டதாகவும், சத்திரத்துக்குப் பக்கத்திலே இருக்கிற தருமலிங்க வைத்தியரிடத்திலே தூக்கிப் போயிருக்கிறதாகவும் சொன்னார்களே, அதனாலே, நீலா தருமலிங்க வைத்தியர் வீட்டுக்குத்தான் ஓடியிருப்பாள். பாவம்" என்றார்.

"என்னம்மா, உங்களுக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லையே?" என்று மீனாட்சி அம்மாளைப் பார்த்துக் கேட்டார் கலெக்டர்.

"கடவுள் அருளாலே என் உடம்பு நன்றாகவே இருக்கிறது. நீலா மனசுதான் என்ன துடிதுடிக்குமோ!" என்றாள் மீனாட்சி அம்மாள்.

"சரி, நாம் காரை எடுத்துக்கொண்டு வைத்தியர் வீட்டுக்குப் போவோம். வழியிலே நீலா வருகிறாளா என்று பார்த்துக்கொண்டே போகலாம்" என்றார் கலெக்டர்.

எல்லாரும் காரின் அருகிலே சென்றார்கள். ஏறப் போகும் சமயம், "அதோ யாரோ ஓடி வருவது போல் தெரிகிறதே!" என்றார் டிரைவர்.

யாவரும் கூர்ந்து பார்த்தனர். சந்தேகமில்லை. ஓடிவருவது நீலாவேதான் !

தன் குடிசையின் முன்னல் கார் நிற்பதையும், காரைச் சுற்றிப் பெரிய மனிதர்கள் நிற்பதையும் மங்கிய நிலவு வெளிச்சத்தில் கண்டாள் நீலா. உடனே "அம்மா!" என்று கதறிக் கொண்டே குடிசையை நோக்கித் தாவினுள்.



வாசலில் நின்று கொண்டிருந்த அம்மா, "நீலாக் கண்ணு. நீ எங்கே போயிருந்தாய்? என்ன

நடந்தது?" என்று ஆவலாகக் கட்டி அணைத்துக் கொண்டு கேட்டாள்.

"அம்மா! உங்களைத் தேள் கொட்டி உயிருக்கே ஆபத்து என்று..."

"நீலா, நான் நன்றாகத்தானே இருக்கிறேன். யாரோ கதை கட்டி விட்டிருக்கிறார்கள்"

"அம்மா! நீங்கள் விழாவுக்கு வருவதாகச் சொன்னீர்களே, வந்திருந்தால் இப்படி யெல்லாம் நடந்திருக்குமா?"

"சரி, என்னதான் நடந்தது? புரியும்படி சொல்லு நீலா!"

நீலா நடந்ததைச் சொல்ல ஆரம்பித்தாள். அவள் சொன்னதைக் கலெக்டர், தலைமை ஆசிரியர், பரமசிவம் பிள்ளை, டிரைவர், இன்னும் அக்கம் பக்கத்திலே இருந்த பலரும் காது கொடுத்துக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

"அம்மா, நீங்கள் பள்ளிக்கூடத்துக்கு வருவதாகச் சொல்லிவிட்டு, வராமலே இருந்து விட்டீர்கள்: நான் ஒவ்வொரு தடவை பரிசு வாங்குகிற போதும், கூட்டத்திலே தேடித் தேடிப் பார்த்தேன். பள்ளிக்கூடத்து வாசல் பக்கம் அடிக்கடி வந்து பார்த்தேன். உங்களைக் காணோம். வெள்ளிக் கோப்பை வாங்குகிற போதாவது வந்து விடுவீர்கள் என்று எதிர்பார்த்தேன். வரவில்லை. தலைமை ஆசிரியர் பேசிக்கொண்டிருந்த சமயம் பள்ளியின் முன்னாலே வந்து, தெருவையே

பார்த்துக்கொண்டு நின்றேன். அப்போது முரளி வந்து 'உன் அம்மாவைக் கருந்தேள் கொட்டி விட்டதாம். சத்திரத்துக்குப் பக்கத்திலே இருக்கிற தருமலிங்க வைத்தியர் வீட்டுக்குத் தூக்கிப் போயிருக்கிறார்களாம். உன் அம்மா பிழைக்கிறதே கஷ்டம்தானும். யாரோ ஒரு அம்மா சொன்னார்கள்'' என்றான். அப்புறம் என்னாலே ஒரு விநாடி அங்கே இருக்க முடியுமா? உடனே வேகம் வேகமாகச் சத்திரத்துப் பக்கமாக ஓடினேன். அங்கே வைத்தியர் திண்ணையிலே உட்கார்ந்து வெற்றிலை பாக்கு போட்டுக்கொண்டிருந்தார். 'என் அம்மா வந்தார்களா?' என்று கேட்டேன். 'இல்லையே!' என்றார் வைத்தியர். எனக்கு மேலும் பயம் ஏற்பட்டுவிட்டது...''

''ஏன் நீலா பயப்படணும்? வைத்தியர்தான் நான் வரவில்லையென்று சொல்லிவிட்டாரே!''

நீலா சிரித்துக்கொண்டே, ''இப்போது நான் பயப்படவில்லை. ஆனால், அப்போது பயந்து போனேன். 'அம்மாவைத் தூக்கிக்கொண்டு போகிறபோது வழியிலே ஏதாவது ஆகியிருந்தால்...? வீட்டுக்கே திரும்பக் கொண்டு போயிருப்பார்களோ' என்று நினைத்து மிகவும் வேதனையோடு ஓடி வந்தேன். இங்கே வருகிற போது, வீட்டுக்கு முன்னாலே காரும், பெரியவர்களும் நிற்கிறதைப் பார்த்ததும் என்னவோ ஏதோ என்று பயந்து போனேன். என் அம்மா நல்லபடியாக இருக்க வேணுமென்று கடவுளை வேண்டிக் கொண்டேன்.

நல்ல வேளை, கடவுள்தான் காப்பாற்றினார்" என்றாள் நீலா.

நீலா சொன்னதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த தலைமை ஆசிரியர், "சே, இப்படியும் ஒரு விளையாட்டா? வீண் வதந்தியைக் கிளப்பி விட்டு வேடிக்கை பார்ப்பதா? ஒருவனுக்கு வேடிக்கை; எத்தனை பேருக்கு வேதனை!" என்று ஆத்திரத்துடன் கூறினார்.

"நீலா, முரளிதானே உன்னிடம் பொய் சொன்னது? என் தங்கை மகன் முரளிதானே? வரட்டும். அவனை நான் என்ன செய்கிறேன், பார்" என்று சீறினார் பரமசிவம் பிள்ளை.

"பாவம், முரளி என்ன பண்ணுவான்? அவனி டத்திலே யாரோ ஓர் அம்மா சொல்லியிருக்கிறார்கள். என்னை அவனுக்கு நன்றாகத் தெரியும் என்பதால் உடனே ஓடிப்போய் நீலாவிடம் சொல்லியிருக் கிறான். அவன் மேலே குற்றம் சொல்லக்கூடாது" என்றாள் நீலாவின் அம்மா.

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே விழா முடிந்து, நடந்து வந்தவர்கள் அங்கு வந்து சேர்ந்து விட்டனர். நீலாவின் குடி சையின் முன்பு கலெக்டரின் காரும், ஒரு சிறு கூட்டமும் நிற்பதைக் கண்ட அவர்களுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. பிறகு, அங்கிருந்த சிலரைக் கேட்டு நடந்ததைத் தெரிந்துகொண் டார்கள்.

"இதோ இவையெல்லாம் நீலா வாங்கிய பரிசுகள்! ஒவ்வொரு தடவை பரிசு வாங்கியதும் என்னிடத்திலேதான் தந்து வைத்தாள்" என்று கூறினுள், நீலாவின் தோழியான கோமளா. இரண்டு கைகளாலும் தூக்கிவந்த பரிசுகளை அவள் மீனுட்சி அம்மாளின் முன்னுல் வைத்தாள்.

அரிக்கேன் விளக்கில் அவைகளைப் பார்த்தாள் மீனுட்சி அம்மாள். அப்போது, கலெக்டர் தம்முடைய கார் டிரைவரிடம், "காரை இப்படிக் குடிசைக்கு முன்னுல் கொண்டுவந்து நிறுத்தி, முன் விளக்குகளைப் போடு" என்றுர். அவ்வாறே கார் நிறுத்தப்பட்டது. காரின் பிரகாசமான வெளிச்சத்தில் பரிசுப் பொருள்கள் பளிச் சென்று தெரிந்தன. கண் குளிரக் கண்டாள் மீனுட்சி அம்மாள்.

ஃபவுண்டன் பேனு, புத்தகப் பெட்டி, பிளாஸ்டிக் வாளி, பூக்கூடை, புத்தகம், எவர்சில்வர் தட்டு, வர்ணப்பெட்டி! அவை ஒவ்வொன்றையும் கையில் எடுத்துப் பார்த்தாள் மீனுட்சி அம்மாள். அப்போது அவள் முகத்தில் சொல்ல முடியாத மகிழ்ச்சி பொங்கியது. நீலா முகத்தில் அந்த மகிழ்ச்சி இரண்டு மடங்காகப் பிரதிபலித்தது.

"அம்மா! இவர்கள்தான் நமது மாவட்டக் கலெக்டர். இவர்கள் கையாலேதான் இந்தப் பரிசுகளையெல்லாம் வாங்கினேன்." என்றுள் நீலா.

மீனுட்சி அம்மாள் கலெக்டரைக் கையெடுத்துக் கும்பிட்டாள்.

"அம்மா! உண்மையிலேயே நீங்கள் பாக்கியம் செய்தவர்கள். உங்களுடைய பெண் படிப்பிலே, பண்பிலே சிறந்தவளாக இருக்கிறாள். இவளை நீங்கள் நன்றாகப் படிக்க வைக்க வேண்டும். பரமசிவம் பிள்ளை வேண்டிய உதவியைச் செய்வதாகச் சொல்லி யிருக்கிறார். நிச்சயம் அவர் சொன்னபடி செய்வார். இந்தப் பெண்ணின் படிப்பு சம்பந்தமாக என்னாலே முடிந்த உதவிகளை நானும் செய்வேன்" என்றார் கலெக்டர்.

உடனே மீனாட்சி அம்மாள், "இவளுடைய அப்பா எத்தனையோ பேருக்கு உதவியிருக்கிறார். கடைசியிலேகூட ஒரு குழந்தைக்காக அவர் தம் உயிரையே கொடுத்தார். தருமம் தலை காக்கும் என்று சொல்வார்கள். அவர் செய்த உதவியும் தியாகமும்தான் இப்படி உங்களைப் போன்ற நல்லவர்கள் உருவத்தில் வந்திருக்கிறது...எங்களாலே உங்களுக்கு எவ்வளவோ சிரமம்..." என்று நன்றியோடு கூறினாள்.


"மிஸ்டர் தணிகாசலம்! அந்த வெள்ளிக் கோப்பையை இந்த இருட்டிலே கொடுக்க வேண்டாம். நாளைக் காலையிலே கொண்டுவந்து நீலா விடத்திலே, என் சார்பிலே கொடுத்துவிடுங்கள்" என்று கூறி கலெக்டர் எல்லாரிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டுவிட்டார்.

நீலாவின் அப்பா ஒரு குழந்தைக்காக உயிரைக் கொடுத்தார் என்பது அந்தப் பகுதியிலே உள்ள

எல்லாருக்கும் நன்ருகத் தெரியும். அது நடந்த மறுநாளே—அதாவது எட்டு ஆண்டுகளுக்கு முன்பாக—அந்தச் செய்தி எல்லாப் பத்திரிகைகளிலும் கொட்டை எழுத்துக்களில் வெளிவந்தது.

அந்தச் செய்தி என்ன?





# 3. அப்பாவின் தியாகம்

நீலாவுக்கு அப்போது இரண்டு வயது இருக்கும். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பார்கள். அந்தச் சின்ன வயதிலே நீலா மிகவும் கெட்டிக்காரியாக இருந்தாள்; எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பாள்; எதையும் கூர்ந்து பார்ப்பாள்; வீட்டுக்கு யார் வந்தாலும், அவர்களுடன் சிரித்து விளையாடுவாள்; மழலை மொழியில் பேசுவாள்; அப்பா, அம்மா சொல்லிக் கொடுக்கும் பாடல்களை அபிநயத்துடன் ஆனந்தமாகப் பாடுவாள்; ரேடியோ பாடும்போது கவனமாகக் கேட்பாள்; கைதட்டி ரசிப்பாள்; சில சமயங்களில் மகிழ்ச்சி அதிகமாகிவிடும். இசைக்கு ஏற்றபடி ஆட ஆரம்பித்து விடுவாள்! அவளது ஆட்டத்தைக் கண்டு எல்லாரும் ஆனந்தம் அடைவார்கள்.

"மீனுட்சி, நம் நீலாவைப் பார். எவ்வளவு நன்ருகப் பாடுகிருள்! எவ்வளவு ஜோராக ஆடுகிருள்! ஒரு தடவை சொல்லிக் கொடுத்தால்

போதும்; அப்படியே திருப்பிச் செய்கிருள்! இவளை நாம் நன்ருகப் படிக்கவைத்து முன்னுக்குக் கொண்டு வரவேண்டும்'' என்று அடிக்கடி நீலாவின் அப்பா குமாரசாமி கூறுவார்.

அப்போதெல்லாம் நீலா குடிசையில் வசிக்கவில்லை. ஒரு பெரிய ஓட்டு வீட்டிலே அப்பா அம்மாவுடன் வசதியாக வாழ்ந்துவந்தாள். நீலாவின் அப்பா குமாரசாமிக்கு உள்ளூரிலேயே நிறைய நிலங்கள் இருந்தன. ஒரு பெரிய தென்னந் தோப்பும் இருந்தது.

குமாரசாமி காலையில் எழுந்ததும், வயலுக்குப் போவார். தோட்டத்தைச் சுற்றிப் பார்ப்பார். மற்ற நேரங்களில் அந்தக் கிராமத்தில் உள்ளவர்களுக்கு உதவி ஒத்தாசை செய்வார். யார் வீட்டிலாவது சண்டை என்ருல், அங்கே போய்ச் சமாதானம் செய்வார். தவறு செய்கிறவர்களுக்கு நல்ல புத்திமதிகள் கூறித் திருத்துவார். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் நீலாவுடன் கொஞ்சிப் பேசிக் குழந்தை போல் விளையாடுவார்.

பூங்குடியில் ஆண்டுதோறும் மாரியம்மன் கோயில் திருவிழா சிறப்பாக நடைபெறும். கிராமத்து மக்கள் எல்லாரும் சேர்ந்து அந்த விழாவை நடத்துவார்கள். விழாச் செலவுக்காகப் பண வசூல் செய்வது, விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்வது எல்லாவற்றையும் முன்ருல் நின்று நடத்துவார் குமாரசாமி.

அந்த ஆண்டு, திருவிழா நடப்பதற்கு இன்னும் இரண்டு நாட்களே இருந்தன. விழா வேலையாகப் பூங்குடிக்கு நான்கு மைல் தூரத்திலுள்ள அமரபுரத்துக்குச் சென்றிருந்த குமாரசாமி, அன்று பகல் இரண்டு மணிக்குத் திரும்பி வந்தார்.

பஸ்ஸிலிருந்து அவர் இறங்கும் சமயம்,

"தீ...ஐயோ ! தீ ! தீ !"

"ஐயோ ! அம்மா"

என்று பல குரல்கள் ஒரே சமயத்தில் கேட்டன. சத்தம் வந்த திசையில் பார்த்தார் குமாரசாமி. சிறிது தூரத்திலிருந்த அரிஜனக் குடியிருப்பில் தீப் பிடித்து எரிந்து கொண்டிருந்த காட்சியைக் கண்டார். உடனே, அருகில் இருந்தவர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு ஓடினார். குடிசைக்குள் இருந்தவர்கள் தூக்க முடிந்த சாமான்களை யெல்லாம் தூக்கிக்கொண்டு வெளியில் ஓடி வந்தார்கள். பல ஆண்களும் பெண்களும் அருகில் இருந்த பெரிய கிணற்றில் தண்ணீரை இறைத்துப் பானைகளில் கொண்டுவந்து கொட்டினார்கள். ஆனால், தீ அணையவில்லை. கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. காற்றும் கலந்து கொண்டதால், தீ வெகு விரைவிலே பக்கத்துக் குடிசைகளுக்கும் பரவியது.

பரபரப்பு, கூச்சல், குழப்பம்—இத்தனைக்கும் இடையே, " அம்மா ! அம்மா !" என்று வீரிட்டு அலறும் குரல் கேட்டது. அப்பொழுது ஒரு குடிசைக்குப் பக்கமாகச் சென்ற குமாரசாமி, " ஐயோ !

இந்தக் குடிசைக்குள் ஒரு குழந்தை" என்று உரக்கக் கூவினுர்.

தீப் பிடிப்பதற்கு முன்பு அந்தக் குழந்தையும், சரியாகக் கண் தெரியாத அதன் பாட்டியும் அந்தக் குடிசையில் இருந்தார்கள். தீப் பிடித்தவுடன் சப்தம் கேட்டுப் பாட்டி வெளியில் ஓடி வந்து விட்டாள். குழந்தை உள்ளே தூங்கிக் கொண் டிருந்தது அவளுக்குத் தெரியவில்லை. வெளியிலே விளையாடிக் கொண்டிருப்பதாக நினைத்து, அதன் பெயரைச் சொல்லி வீதியிலே கத்திக் கொண் டிருந்தாள்.

தீப்பிடித்ததும், சூடு தாக்கியதால் விழித்துக் கொண்ட குழந்தை, வீரிட்டு அலறியது. அது கதறுவதை அறிந்ததும் குமாரசாமி வேகமாக உள்ளே பாய்ந்தார். குழந்தையைத் தூக்கித் தோளிலே போட்டுக்கொண்டார். வெளியே ஓடி வருவதற்குள், வாசல் பக்கமும் தீ பரவிவிட்டது. வேறு வழியில்லை. சுற்று முற்றும் பார்த்தார். நல்ல வேளையாக அங்கு ஒரு தகரப் பீப்பாய் இருந் தது. அதற்குள் குழந்தையை வைத்து வாசல் வழியாக உருட்டி விட்டார். குழந்தை பிழைத்துக் கொண்டது!

ஆனல், குமாரசாமி......?

குமாரசாமியால் வெளியே வர முடியவில்லை! தீயிலும் புகையிலும் அவர் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தார். அப்போது, கூரையின் உச்சி யில் குறுக்கே இருந்த கனத்த மூங்கில் மரம் சடசட

வென்று முறிந்தது. முறிந்த மரம், குமாரசாமியின் தலையில் பட்டென்று விழுந்தது. பாவம், குமார சாமி! ஒரு குழந்தையின் உயிரைக் காப்பாற்றினர். ஆனால், தம் உயிரை நெருப்புக்குக் கொடுத்து விட்டார்!

குமாரசாமியின் மறைவுக்குப் பிறகு, மீனாட்சி அம்மாளின் வாழ்வில் இருள் பரவியது. அவ ளுடைய தம்பி தங்கப்பன், குமாரசாமி விட்டுச் சென்ற வீடு, நிலம், தோட்டம் முதலியவற்றைக் கவனித்துக் கொள்வதற்காக வந்தான். அவன் கெட்டவர்களுடன் கூட்டுச் சேர்ந்து, பல வழிகளில் பணத்தைப் பாழாக்கினன். மீனாட்சி அம்மாள் பெயரைச் சொல்லிப் பலரிடம் கடன் வாங்கினன். கடைசியில் எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு, ஊரைவிட்டே ஓடிவிட்டான்.

சொத்தெல்லாம் இழந்த பிறகு, ஊரின் கோடி யில் ஒரு குடிசையைக் கட்டிக்கொண்டு, நீலாவுடன் மீனாட்சி அம்மாள் வசித்து வந்தாள். எவருடைய தயவையும் அவள் எதிர்பார்க்கவில்லை. உழைத்துப் பிழைப்பது என்ற முடிவுக்கு வந்தாள். "நீலாவை அவள் அப்பா ஆசைப்பட்டது போல், நன்றாகப் படிக்கவைத்து முன்னுக்குக் கொண்டுவந்து விட வேண்டும். அதுதான் என் ஆசையும்" என்று அடிக்கடி சொல்லுவாள்.

அந்தக் கிராமத்தில் அவளுக்கு என்ன வேலை கிடைக்கும்? பரமசிவம் பிள்ளை வீட்டில் வேலைக்குச் சேர்ந்தாள். இரண்டு வேளைச் சாப்பாடும், இருபத்

தைந்து ரூபாய் சம்பளமும் கிடைத்தன. சிக்கன மாகக் குடும்பத்தை நடத்திக்கொண்டு, நீலாவையும் நன்ருகப் படிக்க வைத்தாள். நீலா முதல் வகுப்பி லிருந்து ஒவ்வொரு வகுப்பிலும் முதலாவதாகத் தேறிஞள். பல பரிசுகளும், பாராட்டுகளும் பெற்ருள். அம்மா தன் மகளை நினைத்து நினைத்துப் பெருமைப்படுவாள்.

கலெக்டரிடம் நீலா பரிசுபெற்ற காட்சியை நீலாவின் அப்பாதான் பார்க்க முடியவில்லை. அம்மா வாவது பார்த்திருக்கலாமே!

“ நீலா, எப்படியும் விழாவுக்கு வந்து, நீ பரிசு வாங்குவதைப் பார்க்க வேண்டும் என்றுதான் நினைத்தேன். ஆனால், நான் புறப்படுகிற நேரத் தில், நம் எஜமானி அம்மாளுக்கு அடிக்கடி வருமே, அந்த வியாதி வந்துவிட்டது. தலை சுற்றியது; மயக்கம் வந்தது. ஐயாவும் விழாவுக்கு வந்துவிட் டார்கள். அந்த நிலைமையிலே அந்த அம்மாளைத் தனியாக விட்டுவிட்டு வரலாமா? கடைசியில், அம்மாவுக்கு மயக்கம் தெளிந்து எழுந்தபோது, இருட்டிப் போய்விட்டது. நேராக வீட்டுக்குவந்து விட்டேன்” என்று நீலாவுக்கு அன்று இரவு சமா தானம் சொன்னாள் மீனாட்சி அம்மாள்.

முதல் நாள் ஆண்டு விழா நடந்ததால், மறு நாள் பள்ளிக்கு விடுமுறை. அன்று பிற்பகல் இரண்டு மணிக்கு நீலாவின் அம்மா வீடு திரும்பி வந்தாள். “ நீலா! உனக்கு ஒரு நல்ல செய்தி கொண்டு வந்திருக்கிறேன். நாளைக் காலையிலே

தைந்து ரூபாய் சம்பளமும் கிடைத்தன. சிக்கன மாகக் குடும்பத்தை நடத்திக்கொண்டு, நீலாவையும் நன்ருகப் படிக்க வைத்தாள். நீலா முதல் வகுப்பி லிருந்து ஒவ்வொரு வகுப்பிலும் முதலாவதாகத் தேறிஞள். பல பரிசுகளும், பாராட்டுகளும் பெற்ருள். அம்மா தன் மகளை நினைத்து நினைத்துப் பெருமைப்படுவாள்.

கலெக்டரிடம் நீலா பரிசுபெற்ற காட்சியை நீலாவின் அப்பாதான் பார்க்க முடியவில்லை. அம்மா வாவது பார்த்திருக்கலாமே!

" நீலா, எப்படியும் விழாவுக்கு வந்து, நீ பரிசு வாங்குவதைப் பார்க்க வேண்டும் என்றுதான் நினைத்தேன். ஆஞல், நான் புறப்படுகிற நேரத் தில், நம் எஜமானி அம்மாளுக்கு அடிக்கடி வருமே, அந்த வியாதி வந்துவிட்டது. தலை சுற்றியது; மயக்கம் வந்தது. ஐயாவும் விழாவுக்கு வந்துவிட் டார்கள். அந்த நிலைமையிலே அந்த அம்மாளைத் தனியாக விட்டுவிட்டு வரலாமா? கடைசியில், அம்மாவுக்கு மயக்கம் தெளிந்து எழுந்தபோது, இருட்டிப் போய்விட்டது. நேராக வீட்டுக்குவந்து விட்டேன்" என்று நீலாவுக்கு அன்று இரவு சமா தானம் சொன்ஞள் மீஞட்சி அம்மாள்.

முதல் நாள் ஆண்டு விழா நடந்ததால், மறு நாள் பள்ளிக்கு விடுமுறை. அன்று பிற்பகல் இரண்டு மணிக்கு நீலாவின் அம்மா வீடு திரும்பி வந்தாள். " நீலா! உனக்கு ஒரு நல்ல செய்தி கொண்டு வந்திருக்கிறேன். நாளைக் காலையிலே

யைத் திறந்தார். பளபளக்கும் கோப்பையை எடுத்து மீனுட்சி அம்மாளிடம் நீட்டினுர். "அம்மா, உங்கள் கையாலே நீலாவுக்குக் கொடுங்கள்" என்ருர்.

"என் கையாலே கொடுப்பதைவிட உங்கள் கையாலே கொடுப்பதுதான் பொருத்தம். அவள் இவ்வளவு கெட்டிக்காரியாக இருப்பதற்கு நீங்கள் தான் காரணம். உங்கள் கையாலே கொடுங்கள்" என்ருள் மீனுட்சி அம்மாள்.

தலைமை ஆசிரியர் நீலாவிடம் வெள்ளிக் கோப்பையைக் கொடுத்து மனமார வாழ்த்தினுர்.

மீனுட்சி அம்மாள் அந்தக் காட்சியைக் கண் குளிரக் கண்டு மகிழ்ந்தாள்.


தலைமை ஆசிரியர் போன பிறகு, நீலாவின் அம்மாவுக்கு வெள்ளிக் கோப்பை பெரிய பிரச்னை யாகப் போய்விட்டது. அந்த மதிப்பு மிக்க பொருளைப் பாதுகாப்பாக வைக்க அந்தக் குடிசையில் வசதி கிடையாதே! "நீலா, இந்த வெள்ளிக் கோப்பையை இந்தக் குடிசையிலே வைக்கக் கூடாது. திருட்டுப் போய்விடும். நம் எஜமானர் வீட்டிலே கொடுத்து வைப்போம்" என்ருள் தன் மகளிடம்.


"ஆமாம்மா, அதுதான் சரி. அவர்கள்தானே என்னை மேலே மேலே படிக்க வைக்கப் போகிருர்கள். அவர்களிடம் கொடுத்தால், பத்திரமாகப் பாதுகாப்பார்கள்."

"சரி, வா. உடனே போவோம்" என்று கூறி, கோப்பையை அட்டைப் பெட்டிக்குள் வைத்து அதை எடுத்துக்கொண்டு நீலாவுடன் புறப்பட்டாள் மீனாட்சி அம்மாள். தாயும் மகளும் தங்கள் எஜமானரான பரமசிவம் பிள்ளையின் வீட்டை நோக்கி நடந்தார்கள் வெள்ளிக் கோப்பையுடன்.

மீனாட்சி அம்மாளும், நீலாவும், பரமசிவம் பிள்ளை வீட்டு முகப்பில் இருந்த கம்பிக் கதவுகளைக் கடந்து, தோட்டத்தின் நடுவே இருந்த அந்த வீட்டுப் படிக்கட்டில் ஏறினார்கள். அப்போது வீட்டின் உட்புறம் இருந்த பரமசிவம் பிள்ளையும், அவர் மனைவி பார்வதி அம்மாளும் சண்டை போடுவது போல் இரைந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் யாரைப் பற்றிப் பேசுகிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்பது தற்செயலாகக் காதில் விழுந்தது. அதைக் கேட்டதும் மீனாட்சி அம்மாளுக்கும் நீலாவுக்கும் தூக்கிவாரிப் போட்டது.





# 4. மாலா வந்தாள்

“பார்வதி! நேற்று நடந்த பள்ளிக்கூட விழாவிலே நம்முடைய மீனாட்சி மகள் நீலா இருக்கிறாளே, அவள் எவ்வளவு பரிசுகள் வாங்கினாள், தெரியுமா? மொத்தம் ஏழு பரிசுகள்! அத்தோடே, நான் அன்பளிப்பாய்க் கொடுத்தேனே, அந்தக் கோப்பையும் அவளுக்குத்தான் கிடைத்தது!”

“எனக்கு எல்லாம் தெரியும். ஒரு வேலைக்காரப் பெண் இப்படி நன்றாகப் படித்து, நிறையப் பரிசு வாங்கி யிருக்கிறாளே!......நீலா கெட்டிக்காரக் குட்டிதான்.”

“நீ பாராட்டி என்ன? கலெக்டரே, அவளை மிகவும் பாராட்டிவிட்டார். ஆனாலும் அவள் கலெக்டர் கையாலே வெள்ளிக் கோப்பையை வாங்க முடியாமல் போய்விட்டது. உனக்கு உடம்பு சரியில்லை. அதனாலே, மீனாட்சி விழாவுக்கு வரவில்லை. மூன்றாவது பரிசு, ஆறுதல் பரிசு வாங்கினவர்களுடைய அப்பா அம்மாவெல்லாம், தங்களுடைய குழந்தைகள் பரிசு வாங்குகிற காட்சியைப் பார்க்க

வந்திருந்தார்கள். ஆனால், பாவம், மீனாட்சி உன்னைத் தனியாக விட்டுவிட்டு வரக்கூடாதென்று உன்னுடனே இருந்துவிட்டாள். ஒரே மகள் இத்தனை பரிசுகள் வாங்கியும், அந்தக் காட்சிகளைப் பார்க்கவில்லை... ”

“ மீனாட்சியைக் கருந்தேள் கொட்டியதாக யாரோ சொன்னார்களாம். அதனால், விழாவை அரை குறையாக முடித்துவிட்டு, கலெக்டரே மீனாட்சி வீட்டுக் குடிசைக்குக் காரிலே போனாராம்.”

“ நானும் தலைமை ஆசிரியரும்கூடத்தான் கலெக்டரோடு போனோம். ‘நீலாவைப் போல் நன்றாகப் படிக்கிற ஒரு பெண் மேலே மேலே படிக்க வேண்டும். அதற்கு இந்த ஊரிலே வசதியுள்ளவர்கள் உதவ வேண்டும்’ என்று கலெக்டர் விழாவிலே சொன்னார். உடனே நான் நீலாவை அமரபுரத்துக்கு அனுப்பி எஸ். எஸ்.எல்.சி. வரை படிக்க வைக்கப் போவதாகச் சொன்னேன். கலெக்டர் என்னைப் பாராட்டினார். எல்லாரும் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்.”

“ என்ன ! நீலாவை எஸ். எஸ். எல். சி. வரை நீங்கள் படிக்க வைக்கப் போகிறீர்களா !” என்று முகத்தைச் சுளித்துக்கொண்டே கேட்டாள் பார்வதி அம்மாள்.

“ ஆம். பார்வதி, பஸ் கட்டணம், புத்தகம், துணி மணி வாங்கச் செலவு கொஞ்சம்தானே வரும் ?”

“ சொல்வது மிகவும் சுலபம். பணத்தை எடுத்துச் செலவு செய்கிற போதுதான் தெரியும். மேடையிலே கலெக்டர் முன்னலே சொன்னல், எல்லாரும் கைதட்டுவார்கள் என்று சொல்லிவிட்டீர்கள். ஆறு வருஷங்களுக்கு யார் செலவு செய்வது ?”

“ ஏன், நாம்தான் செலவு செய்யப் போகிருேம்.”

“ ஆமாம், தாராளம்தான். என் தம்பி மகன் முரளி எத்தனை தடவை ஒரு வர்ணப் பெட்டிக்கு உங்களிடம் கெஞ்சினன் ? இரண்டு ரூபாய்கூட விலை இருக்காது. அதை வாங்கிக் கொடுக்க மனமில்லாதவர், ஒரு வேலைக்காரப் பெண்ணுக்காகச் செலவு செய்கிருராம் !”

பரமசிவம் பிள்ளையும் பார்வதி அம்மாளும் இப்படி இரைந்து பேசிக் கொண்டிருந்த போது தான் நீலாவும் அவள் அம்மாவும் அங்கு கோப்பையுடன் வந்தார்கள். தங்களைப் பற்றிப் பேசுகிருர்கள் என்று தெரிந்ததும், “ நீலா, ஒட்டுக் கேட்கக் கூடாது. வா, போவோம் ” என்று நீலாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளிக் கதவுக்கு வந்துவிட்டாள் அம்மா.

“ நீலாவை எப்படியாவது மேல் படிப்புப் படிக்க வைத்துவிட வேண்டும். எவ்வளவு சிரமம் வந்தாலும் சரி ” என்று முன்பே மிகவும் உறுதியாக இருந்தாள் மீனட்சி அம்மாள்.

எஸ். எஸ். எல். சி. வரை நீலாவைப் படிக்க வைப்பதாக விழாவிலே பரமசிவம் பிள்ளை அறிவித்தது, மீனுட்சி அம்மாளுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. தலையிலிருந்த ஒரு பெரிய பாரம் கீழே இறங்கியது போன்ற உணர்ச்சி ஏற்பட்டிருந்தது. ஆனால், பார்வதி அம்மாளின் பேச்சைக் கேட்டதும் அந்த மகிழ்ச்சி எங்கோ ஓடி விட்டது.

" சந்தர்ப்பம் சரியில்லை. வீட்டுக்குப் போக வேண்டியதுதான் " என்று கூறிக்கொண்டே வெளிக் கதவைக் கடந்து வீதிக்குவந்தாள் மீனுட்சி அம்மாள். நீலா கலங்கிய கண்களுடன் அம்மாவைப் பின் தொடர்ந்தாள்.

சிறிது தூரம்கூடச் சென்றிருக்க மாட்டார்கள். " நீலா ! இந்த வெள்ளிக் கோப்பையை நம் குடிசையிலா வைத்துக் கொள்வது? வேண்டாம்! சிறிது நேரம் சென்று எஜமானர் வீட்டுக்கே போவோம் " என்று கூறிவிட்டு, அடுத்த வீட்டுத் திண்ணை ஓரமாக அரை மணி நேரம் காத்திருந்தார்கள்.

பிறகு, திரும்பவும் பரமசிவம் பிள்ளை வீட்டுக்கு வந்தனர். அப்போது சண்டை இல்லை. வாக்குவாதம் இல்லை. உள்ளே சென்றதும், பரமசிவம் பிள்ளைதான் முதலில் பார்த்தார். " அடேடே, மீ னு ட் சி யா ! நீலாவும்கூட வந்திருக்கிறுளே ? என்ன பெட்டி அது......? ஓ! உன் மகள் நீலாவுக்குக் கிடைத்த வெள்ளிக் கோப்பையா?" என்று மகிழ்ச்சியோடு வரவேற்ருர்.

நீலாவையும் அவள் அம்மாவையும் பார்வதி அம்மாள் ஒரு மாதிரியாகப் பார்த்தாள். பிறகு, "மீனாட்சி, உன் பெண் கெட்டிக்காரிதான். நன்ருகப் படிக்கிருள். ஆனுலும், இந்தக் காலத்திலே ஒரு பெண் நன்ருகப் படித்து என்ன பிரயோசனம்? எஸ். எஸ். எல். சி. வரை படித்தால் போதுமா? ஏதாவது ஒரு பட்டம் வாங்கினுல்தான் மதிப்பு. பட்டம் வாங்கினுலும், இலேசிலே வேலை கிடைத்து விடுமா? வேலைக்கு நாயாய் அலைய வேணும். ஒரு வேலைக்காரியின் பெண் படித்துப் பட்டம் வாங்கி, வேலையும் பெறுவது சுலபமில்லை......அது சரி, இந்தக் கோப்பையை ஐயாவிடம் காட்டுவ தற்கா கொண்டு வந்தீர்கள்? அவர்தானே இதை 300 ரூபாய் போட்டு வாங்கினுர்? வாங்கிக்கொடுத் தவரிடத்திலேயே காட்டவேணுமா?"

"இல்லேம்மா, குடிசையிலே இதை வைக்கப் பயமாக இருந்தது. அதனுலே, இங்கே ஐயாவிடம் கொடுத்துவைக்கலாம் என்றுதான்..."

"சரி, இப்படி அதை வை. இந்தத் தரையெல்லாம் பார்த்தாயா? மெழுகி நாலு நாட்களாகிறது. நாளைக்கு என் மகளும் குழந்தைகளும் வருகிருர்கள். வீடு பளிச்சென்று சுத்தமாக இருக்க வேண்டாமா? நன்ருக மெழுகிவிட்டு வீட்டுக்குப் போ" என்று உத்தரவு போட்டாள் பார்வதி அம்மாள்.

உடனே மீனுட்சி அம்மாள் சிறிதும் தயங்க வில்லை. " இதோ, மெழுகுகிறேன் அம்மா" என்று கூறிவிட்டு வேலையை ஆரம்பித்தாள். நீலாவும் அம்மாவுக்கு உதவியாக இருந்தாள். அரை மணி நேரத்தில் வேலை முடிந்து விட்டது.

வேலை முடிந்ததும், கோப்பையைப் பரமசிவம் பிள்ளையிடம் கொடுத்து வைத்துக்கொள்ளச் சொன்னுர்கள்.

" மீனுட்சி, கோப்பை இங்கேயே பத்திரமாக இருக்கட்டும். இன்னும் நீலா எத்தனையோ கோப்பைகள், கேடயங்கள், பதக்கங்களெல்லாம் வாங்கப் போகிருள். எல்லாவற்றையும் என்னிடத்திலே தந்து வையுங்கள். பத்திரமாக வைத்திருப்பேன். நீலா பெரிய படிப்பு படித்து, பெரிய உத்தியோகம் பார்க்கத்தான் போகிருள். அப்போது, நீலாவின் வீட்டு ஹாலில், கண்ணுடி அலமாரியில் எல்லாவற்றையும் வைக்கலாம். என்ன நீலா, நான் சொல்வது சரிதானே?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார் பரமசிவம் பிள்ளை.

நீலா ஒன்றும் சொல்லவில்லை. பதிலுக்குச் சிரித்தாள். " எவ்வளவு நல்லவர் !" என்று மனசுக்குள்ளே பாராட்டினுள்.

மறுநாள் காலை நேரம். பரமசிவம் பிள்ளையின் வீடு ஒரே உற்சாகத்தில் மூழ்கியிருந்தது. சென்னையிலிருந்து அவரது மகள் நளினியும், பேத்தி மாலாவும், குட்டிப் பையன் ரவியும் வந்திருந்தார்கள்.

வந்ததும் வராததுமாக, “ தாத்தா, தாத்தா, நீலா இங்கேதானே இருக்கிருள் ?” என்று மாலா கேட்டாள்.

“ அதோ பார் நீலாவின் அம்மா. அவளிடத்திலே சொல்லி நீலாவை அழைத்து வரச் சொல்லலாம் ” என்ருர் பரமசிவம் பிள்ளை.

“ நீலா பள்ளிக்கூடம் போயிருக்கிருள். சாயங்காலம் கட்டாயம் வருவாள் ” என்ருள் மீனுட்சி அம்மாள்.

“ நீலாவுக்கு இன்னும் பரீட்சை முடியவில்லையா ? எனக்கெல்லாம் போன வாரமே முடிந்து விட்டதே !” என்ருள் மாலா.

“ நீலாவுக்கு அடுத்த வாரம்தான் பரீட்சை. அப்புறம் அவள் இங்கேயே உன்னுடனே இருப்பாள் ” என்ருள் மீனுட்சி அம்மாள்.

மாலையில் நீலாவின் வரவை ஆவலாக எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள் மாலா.

நீலா சிறிது தூரத்தில் வரும்போதே மாலா ஓடிச் சென்று அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தாள்.

குட்டிப் பையன் ரவியைப் பார்த்ததும், நீலா ஆவலாக அவனைத் தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்சினுள். ரவியின் அம்மா நளினி, “நீலா ! நீ நிறைய நிறையப் பரிசுகள் வாங்கி யிருக்கிருயாமே! அப்பா சொன்னுர்கள். இதோ பலகாரம், உட்

கார்ந்து சாப்பிடு" என்று அன்போடு கூறி, ஒரு தட்டு நிறையப் பலகாரங்களைக் கொடுத்தாள்.

"மாலா, நீ சாப்பிடவில்லையா?" என்று கேட்டாள் நீலா.

"மாலாவுக்குக் கொடுத்த பலகாரத்தை அவள் அப்படியே வைத்திருக்கிறாள். நீ வந்தவுடன் உன்னோடேதான் சாப்பிடுவாளாம்" என்றாள் மாலாவின் அம்மா.

உடனே மாலா ஓடிப் போய், தன் தட்டை எடுத்து வந்தாள். இருவரும் பேசிக்கொண்டே சாப்பிட்டார்கள். ரவிக்கு ஒரு பிஸ்கட்டைக் கொடுத்தாள் நீலா. அவன் அதை வாயில் வைத்துச் சப்பிக் கொண்டிருந்தான்.

பரீட்சை முடியும்வரை தினமும் மாலை நேரத்திலே நீலா வந்தாள். பரீட்சை முடிந்ததும், காலை முதல் மாலை வரை மாலாவுடனே பொழுதைக் கழித்தாள். பார்வதி அம்மாளின் தம்பி மகன் முரளியும் அங்கு அடிக்கடி வந்தான். ஆனால், ஏனோ அவனை மாலாவுக்குப் பிடிக்கவில்லை. அவனிடம் அதிகமாகப் பேச மாட்டாள்; ஒதுங்கி ஒதுங்கிப் போய் விடுவாள்.

நீலாவும் மாலாவும் இரண்டு சிட்டுக்கள் போல் அந்த வீட்டையும் தோட்டத்தையும் சுற்றிச் சுற்றி வருவார்கள்; குழந்தை ரவியை நீலாவும் மாலாவும் மாற்றி மாற்றித் தூக்கி வைத்துக் கொள்வார்கள்; விளையாட்டுக் காட்டுவார்கள்.

ரவி நீலாவிடம் நன்ருக ஒட்டிக் கொண்டான். அவள் குரல் கேட்டால் போதும்; தாவிக் குதித்துக் கொண்டு அவளிடம் போகத் துடிப்பான். ரவியை உட்கார வைத்துக்கொண்டு நீலா ஆடுவாள்; பாடுவாள்; அவனைத் தூக்கிக்கொண்டு தோட்டத்திலுள்ள மலர்கள், பறவைகளை யெல்லாம் வேடிக்கை காட்டுவாள். மாலா, நீலா, ரவி மூவரும் எப்போதும் உற்சாகமாகவே இருப்பார்கள். பார்ப்பவர்களுக்கு அந்தக் காட்சி இனிமையாக இருக்கும்.

ஒரு நாள் ரவியின் அம்மா நளினி, தன் அம்மாவிடம், "அம்மா, இதோ ஜன்னல் பக்கமாகத் தோட்டத்தைப் பாரம்மா. நீலா நம் ரவியிடத்திலே எவ்வளவு பிரியமாக இருக்கிருள்! அவளை விட்டு அவன் பிரியவே மாட்டேன் என்கிருன்!" என்ருள்.

"ஆமாம், குழந்தையை வைத்துக் கொள்வதற்கு ஒரு பரிசு வைத்தால், அதிலும் நீலாவுக்குத் தான் முதல் பரிசு கிடைக்கும்." என்ருள் பார்வதி அம்மாள்.


"அம்மா! இன்னும் இருபது நாட்களிலே சென்னைக்குத் திரும்ப வேண்டுமே, அப்போது நீலாவை விட்டுப் பிரிய ரவிக்குக் கஷ்டமாக இருக்கும்; இல்லையா அம்மா?"

"ரவி எதற்காகக் கஷ்டப்பட வேண்டும்? நீலாவையும் கூடவே அழைத்துப் போனுல் சரியாகி விடும்."

" ஆமாம்மா. மாலா எவ்வளவோ சிரமப்பட்டுத்தான் படிக்கிருள். ஆனாலும், வகுப்பிலே எட்டாவது ஒன்பதாவது இடத்திலேதான் இருக்கிருள். நீலாவையும் மாலாவோடு ஆரும் வகுப்பிலே சேர்த்துப் படிக்க வைத்தால்... "

" நளினி! நான் நீலாவை அங்கே அனுப்புவது, அவளைப் படிக்க வைக்கவா? இல்லை, குழந்தை ரவியை வைத்துக் கொள்ள ஒரு வேலைக்காரப் பெண் வேணுமென்று எழுதியிருந்தாயே...... அதற்காகத்தான்."





# 5. மாலா சொன்ன கதை

'நீலாவைப் பட்டணத்துக்கு வேலைக்காரப் பெண்ணாக அனுப்புகிறேன்' என்று பார்வதி அம் மாள் சொன்னதும், மாலாவின் அம்மா நளினி திடுக் கிட்டாள். "என்ன அம்மா, வேலைக்கு வேறு பெண்ணா கிடைக்காது! நீலா படிப்பிலே எவ்வளவு கெட்டிக்காரி! அவளையா வேலைக்காரியாக்குவது? அதுவும் இந்தச் சின்ன வயதிலா?'' என்று கேட் டாள்.

இந்தச் சமயம் மாலா தோட்டத்திலிருந்து ரவி யுடன் வீட்டுக்குள் வந்தாள். நீலா தன் அம்மா வுடன் வீட்டுக்குச் சென்றுவிட்டாள்.

மாலா வீட்டுக்குள் வருவதைப் பார்த்ததும் பாட்டியும் அம்மாவும் பேச்சை நிறுத்திவிட்டனர்.

"பாட்டி, பாட்டி! நான் ஒரு கதை சொல்லவா பாட்டி?'' என்று கேட்டாள் மாலா.

எப்போதும் பாட்டியையே கதை சொல்லும்படி நச்சரிக்கும் மாலா, இன்று பாட்டிக்குக் கதை சொல்லுகிறாளாம்! பாட்டிக்கு ஆச்சரியமாக இருந்தது.

"மாலா! நீயா கதை சொல்கிறாய்? சொல்லு, சொல்லு!"

"பாட்டி, ஒரே ஒரு ஊரிலே ஒரு பையன் இருந்தார்".

"என்ன! பையன் இருந்தாரா! இருந்தான் என்றுதான் சொல்லணும்"

"ஐயையோ! அவன், இவன் என்று சொல்லலாமா? தப்பு, தப்பு!"

"கதைதானே, சொல்லலாம். சொல்லு"

"சரி, அந்தப் பையன் மிகவும் கெட்டிக்காரனும். ஒவ்வொரு பாடத்திலேயும் தொண்ணூறுக்கு மேலேதான் மார்க் வாங்குவானும். எஸ் எஸ்.எல்.சி. யிலே தமிழ் நாட்டிலேயே அதிக மார்க் வாங்கியது அவன்தானும்! பத்திரிகைகளில் எல்லாம் அவன் படத்தைப் போட்டு, 'இவன் மிகவும் ஏழை; அப்பா அம்மா இல்லை. தாய்மாமன்தான் இவனை மிகுந்த சிரமப்பட்டுப் படிக்க வைத்தார்' என்றெல்லாம் எழுதியிருந்ததாம். அதைப் பார்த்த ஒரு பெரியவர் உடனே அந்தப் பையனை வரவழைத்து, அவனுக்கு வேண்டிய உதவி யெல்லாம் செய்வதாகச் சொன்னாராம்; சொன்னபடியே செய்தாராம். அந்தப் பையன் மேலும் மேலும் நன்றாகப் படித்து அவருடைய உதவியாலே டாக்டர் ஆகிவிட்டானும்!"

இப்படிச் சொன்னதும், கதையைக் கேட்டுக் கொண்டிருந்த பாட்டியும் அம்மாவும் சிரித்தார்கள்.

"என்ன பாட்டி சிரிக்கிறுய்? டாக்டரான பிறகும் 'அவன்' என்று சொன்னேனே, அதற்காகவா? சரி, இனிமேல் 'அவர்' என்றுதான் சொல்வேன். அந்த டாக்டர் முப்பத்தைந்தாவது வயதுக்குள்ளே மூளை வியாதி, நரம்பு வியாதிகளையெல்லாம் குணப் படுத்துவதிலே மிகவும் கெட்டிக்காரர் என்று பெயர் எடுத்து விட்டாராம்! 'பத்ம பூஷண்' விருதுகூடப் பெற்று விட்டாராம்!"

"அது சரி, உன் கதையிலே வருகிறவர் யாரென்று சொல்லி விடட்டுமா மாலா?"

"உம், சொல்லு பாட்டி, சொல்லு பார்க்கலாம்."

"அவர்தான் என் அருமைப் பேத்தி மாலா வினுடைய அப்பாவாம். டாக்டர் சூரியசேகர்தான் அவர் பெயராம்..." என்று சொல்லிவிட்டுப் பாட்டி சிரித்தாள். மாலாவும் அவள் அம்மாவும் கூடச் சிரித் தார்கள்.

"கண்டு பிடித்து விட்டாயே பாட்டி! என் அப்பாவுக்கு உதவி செய்து படிக்க வைத்தாரே, அவருடைய பெயர் தெரியுமா?"

"ஏன் தெரியாது? உன் அப்பாதான், உங்கள் வீட்டு, முகப்பிலும் பூசை அறையிலும் அவருடைய பெரிய படத்தை மாட்டி வைத்திருக்கிருரே! ,,கதிரேசர் இல்லம், 'கதிரேசர் மருத்துவ மனை'

'கதிரேசர் மருந்துக் கடை' என்று எடுத்ததற்கெல்லாம் உன் அப்பா அவர் பெயரைத்தானே வைத்திருக்கிறார்!"

"ஆமாம் பாட்டி, அப்பாவைப் படிக்க வைத்த கதிரேசன் செட்டியாரை, அப்பா ஒரு நாளும் மறப்பதில்லை. அப்பாவுக்கு ஓய்வு கிடைக்கிறதே அபூர்வம். அப்படி ஓய்வு கிடைக்கிற நேரத்திலே என்னிடத்திலேயும் அம்மாவிடத்திலேயும் அவரைப் படிக்க வைத்த கதிரேசன் செட்டியாரைப் பற்றி நிறையச் சொல்லுவார்."

"ஆமாம் மாலா, அவருடைய உதவி இல்லாது போனால் உன் அப்பா இவ்வளவு பேரும் புகழும் பெற்றிருக்க முடியுமா?" என்று நன்றியோடு கூறினாள் மாலாவின் அம்மா.

இப்படி இவர்கள் பின்கட்டில் பேசிக்கொண்டிருக்கும் போதே, முன் பக்கத்து ஹாலிலிருந்து பரமசிவம் பிள்ளை அங்கு வந்தார்.

"ரவிப்பயல் என்ன செய்கிறான்? பாட்டியும் பேத்தியும் என்ன பேசுகிறார்கள்?" என்று கேட்டுக்கொண்டே குழந்தை ரவியின் கன்னத்தைச் செல்லமாகத் தட்டிக் கொடுத்தார்.

மாலாவும் பாட்டியும் பேசிக் கொண்டிருந்ததை மாலாவின் அம்மா, சுருக்கமாகக் கூறினாள். அதைக் கேட்டதும், பரமசிவம் பிள்ளை முகத்தில் ஒரு பிரகாசம் தெரிந்தது. மாலாவை அவர் பகிழ்ச்

சியோடு பார்த்தார். " மாலா, கதிரேசன் செட்டி யார் ஒரு பெரிய வள்ளல்! எத்தனையோ பேருக்கு உதவி யிருக்கிறார். அவரது உதவியைப் பெற்ற வர்கள், இன்று ஆயிரக் கணக்கான பேருக்கு உதவி வருகிறார்கள். கதிரேசன் செட்டியாரைப் பார்ப்ப தற்கு முன்பு, நான்கூட ஒரு கஞ்சனாகத்தான் இருந் தேன். அவரைப் பார்த்த பிறகுதான், அவர் வாரி, வாரி வழங்குவதைக் கேட்ட பிறகுதான், எனக்கும் பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்கிற எண் ணமே வந்தது...... " என்று பரமசிவம் பிள்ளை சொல்லிக் கொண்டிருக்கும் போதே,

" அது சரி, கதிரேசன் செட்டியார் பெரிய லட்சாதிபதி. அவர் தருமம் செய்யலாம். நம்மாலே முடியுமா ?" என்றாள் பார்வதி அம்மாள்.

" பார்வதி, அவரைப் போல் நான் பெரிய பணக்காரன் இல்லை. அவரைப் போல் நம்மாலே பெரிய தருமம் செய்யவும் முடியாது. ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனாலும், கடவுள் ஓரள வுக்கு நமக்கு நன்றாகத்தானே கொடுத்திருக்கிறார்? நம் மாலே முடிந்த அளவு ஏழைகளுக்கு உதவலாம் அல்லவா?.. சரி, சரி, இப்படிப் பேசிக்கொண்டே இருந்தால் நேரமாகிறது. தாமரைக் குளத்துக்குப் பக்கத்திலே குடியிருக்கிறாரே கணக்கப் பிள்ளை, அவரைப் பார்த்துவிட்டு வருகிறேன். என்னடா ரவி, என்ன மாலா, போய் வரட்டுமா ?" என்று கூறி ரவியைச் செல்லமாகத் தட்டிக் கொடுத்து விட்டு வெளியே புறப்பட்டார் பரமசிவம் பிள்ளை.



'தாமரைக் குளம்' என்று தாத்தா சொன்னதும், "அடடே, அதை அப்படியே அரைகுறையாக விட்டு விட்டேனே! அடியோடு மறந்தே போனேன்" என்று மாலா தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

மாலா சென்னையிலிருந்து வந்தாளே, அதற்கு அடுத்த நாள் காலையிலே, தாத்தா மாலாவை அழைத்துக் கொண்டு, ஊருக்குப் பக்கத்தில் உள்ள நிலங்களைப் பார்வையிடச் சென்றார்; செல்லும் வழியில்தான் தாமரைக் குளம் இருக்கிறது.

அந்தக் குளத்திலே ஒரு பக்கத்தில் அழகாகப் பூத்திருந்த தாமரை மலர்களைக் கண்டதும், மாலா அங்கேயே நின்று விட்டாள்.

"என்ன மாலா, தாமரைப் பூ வேணுமா? இதோ பறித்துத் தருகிறேன்" என்று பரமசிவம் பிள்ளை கூறிக் குளத்திலே இறங்கினார். முழங்கால் அளவு தண்ணீரில் நின்று கொண்டு, கைக்கு எட்டிய தூரத்தில் இருந்த ஒரு தாமரைப் பூவைப் பறித்தார்; மாலாவிடம் கொடுத்தார்.

மாலா சிறிது நேரம் அந்தக் குளத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். குளத்திலிருந்த தாமரை மலர்களையும் அங்கே நீந்திய வாத்துக்களையும், கரை ஓரத்திலே கல்லிலே துணி துவைத்துக் கொண்டிருந்த இரண்டு மூன்று மனிதர்களையும் பார்த்தாள். பிறகு, குளத்தைச் சுற்றி இருந்த

மரங்களைப் பார்த்தாள். அப்புறம் சிறிது தூரத்தில் இருந்த மலைகளைப் பார்த்தாள். வானத்திலே கூட்டமாகப் பறந்து சென்ற பறவைகளையும் பார்த்தாள். அவள் எங்கு எங்கு பார்த்தாளோ அங்கெல்லாம் அவளுடைய தாத்தாவும் பார்த்தார்.

மாலா பார்த்த காட்சி, அவள் மனத்திலே நன்ருகப் பதிந்து விட்டது. அந்தக் காட்சியை ஒரு படமாக வரைய வேண்டும் என்பது அவளது ஆசை. அவளுக்குச் சுமாராகப் படம் போட வரும். சென்னையிலே பொழுது போகாதபோது படம் வரைந்து கொண்டிருப்பாள்.

அன்று காலைப் பலகாரம் சாப்பிட்ட பின், தாமரைக் குளத்தை ஓர் அழகான படமாக வரைவதற்கு உட்கார்ந்தாள். மத்தியானம் வரை வரைந்தாள். அவளுக்குத் திருப்தியாக அது அமையவில்லை. தொடர்ந்து மூன்று நான்கு நாட்கள் காலை நேரத்தில் படம் வரைந்தாள். ஆனுலும், நீலாவிடம் அதைப் பற்றி அவள் சொல்லவே இல்லை. ஊரை விட்டுப் போகும்போது அந்தப் படத்தை நீலாவுக்குப் பரிசாகக்கொடுத்து ஆச்சரியப்பட வைக்கவேண்டும் என்று நினைத்தாள். நீலாவுக்குப் பரீட்சை முடிந்த பிறகு, நீலாவுடனே நீண்ட நேரம் இருந்து வந்தாள். அவளுடன் பேசுவதிலும் விளையாடுவதிலுமே நேரத்தைப் போக்கிஞள். மாடி அறையிலிருந்த மேஜைக்குள் அரைகுறையாக அவள் வரைந்து வைத்திருந்த படத்தை அடியோடு மறந்து

விட்டாள். அதன் நினைவு இப்போதுதான் வந்தது.

கணக்கப்பிள்ளை வீட்டுக்குச் செல்லும் தாத்தாவை வழியனுப்பிவிட்டு மாடிக்குச் சென்று படத்தைப் பூர்த்தி செய்ய நினைத்தாள்... . அப்போது "மாலா ?" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். முரளி வந்து கொண்டிருந்தான்.

"என்னையா கூப்பிட்டாய்?" என்று கேட்டாள் மாலா.

"ஆமாம் மாலா ! உன்னிடத்திலே ஒரு முக்கியமான விஷயம் சொல்லப் போகிறேன். மிக மிக முக்கியமான விஷயம்'"

"அப்படி என்ன மிக மிக முக்கியமான விஷயம் ? உம், சீக்கிரம் சொல்லு."

"அது மிகவும் ரகசியமான விஷயம். ரகசியமான விஷயத்தை இங்கே சொல்லலாமா ? தோட்டத்துக்கு வா. அங்கே சொல்லுகிறேன்."


"முரளி! எனக்கு 'ரகசியம்' என்றாலே பிடிக்காது. எதையும் மனசுக்குள்ளே மறைத்து வைக்கிறதும் பிடிக்காது..."

"மாலா, உனக்கு அந்த ரகசியம் தெரியவேண்டுமா, வேண்டாமா ? வேண்டுமானால், தோட்டத்துக்கு வா. இல்லாத போனால், பேசாமல் போ."

மாலாவுக்கு அரைகுறையாக உள்ள சித்திரத்தை முடிக்க வேண்டும் என்ற ஆவல் இருந்தது. அதே சமயம், முரளி ஏதோ ரகசியம் என்கிருனே, அது என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையும் இருந்தது. சிறிதுநேரம் ஏதோ யோசனை செய்தாள். பிறகு, ''முரளி, வா. தோட்டத்துக்குப் போகலாம். மாமரத்தடியிலே உட்கார்ந்து ரகசியம் பேசலாம்'' என்ருள் மாலா.

முரளிக்கு ஆனந்தம். மாலா முன்ஞல் சென்ருள். முரளி பின் தொடர்ந்தான்.





# 6. முரளி சொன்ன ரகசியம்!

முன்னல் சென்ற மாலா மாமரத்தை அடைந் தாள். அங்கிருந்த கல்லிலே உட்கார்ந்தாள். முரளி அருகில் வந்து நின்றுகொண்டு சுற்று முற்றும் பார்த்தான்.

" முரளி, அது என்ன ரகசியம்?" என்று பேச்சை ஆரம்பித்தாள் மாலா.

" நமது வீட்டுக்கு வருகிருளே, வேலேக்காரி மகள் நீலா, அவளேப் பற்றி உனக்குச் சரியாகத் தெரியாது. நல்லவளேப் போல் நடிப்பாள்; சிரித் துச் சிரித்துப் பேசுவாள். அவள் பெரிய ஆள்..."

" என்ன! பெரிய ஆளா! பத்தாவது வயசிலே ஐந்தாவது படிக்கிற நீலா பெரிய ஆளா? பதினேந்தாவது வயசிலே நாலாவது படிக்கிற நீ பெரிய ஆளா? சந்தேகமே இல்லே. நீதான் பெரிய ஆள்... "

" மாலா, விளேயாடாதே. நான் சொல்வதைக் கேள். எல்லாரும் நினேக்கிற மாதிரி நீலா படிப்

பிலே பெரிய புலி இல்லே. அவளுடைய அப்பா ஒரு குழந்தையைக் காப்பாற்றப் போய், அங்கேயே செத்துப் போனர். அது உனக்கும் தெரிந்திருக்கும். அதனாலே அவர் பெரிய தியாகி ஆகிவிட்டார். அவருடைய பெயரைச் சொல்லிச் சொல்லி, நீலாவும் அவள் அம்மாவும் ஊரை ஏமாற்றுகிறார்கள்."

"ஊரை ஏமாற்றுகிறார்களா !"

"ஆமாம், நீலாவுடைய அம்மா ஒரு பெரிய தந்திரக்காரி! அவள் ஹெட்மாஸ்டரிடத்திலே போய், 'எங்க வீட்டுக்காரர் உயிரோடு இருந்தால், நீலாவை நன்றாகப் படிக்கவைத்து முன்னுக்குக் கொண்டுவந்திருப்பார். நானோ ஒரு பெண். என்றால் என்ன செய்ய முடியும் ? நீங்கள்தான் எப்படியாவது நீலாவை முன்னுக்குக் கொண்டு வர வேண்டும்' என்று கெஞ்சினாள்; கண்ணீர் விட்டாள். ஹெட்மாஸ்டருக்கு மிகவும் இளகிய மனசு. அவர் எல்லா ஆசிரியர்களிடமும் சொல்லிவைத்திருக்கிறார். வருஷா வருஷம் எல்லா ஆசிரியர்களும் மார்க்கை வாரி வாரி அவளுக்குக் கொடுக்கிறார்கள். அதனாலேதான் ஆறு பரிசு, ஏழு பரிசு என்று வாங்கினாள். இல்லாத போனால், அவளாவது, பரிசு வாங்குகிறதாவது . "

"அடடே, அப்படியா சமாச்சாரம் ! எனக்கு இதெல்லாம் தெரியாதே !"

"அதனாலேதானே நான் விளக்கமாகச் சொல்கிறேன். போன தடவை நீ வந்திருந்த போது. நீ உன் கிளாஸிலே எட்டாவது ராங்கிலே இருக்கிறதாக

உன் அம்மா சொன்னூர்கள். 'நம் மாலா எட்டாவது ராங்கிலே இருக்கிற போது, இந்த வேலைக்காரி மகள் முதல் ராங்கிலே இருக்கிறதா? பரிசு மேலே பரிசு வாங்குவதா? அதுவும் கலெக்டர் கையாலே வாங்குவதா?' என்று ஆத்திரப்பட்டேன். அதனூலேதான் வெள்ளிக் கோப்பை வாங்குகிற சமயம் பார்த்து, ஒரு கதை கட்டி விட்டேன்."

"கதையா! அது என்ன கதை? சொல்லு முரளி. கதை கேட்பதென்ருல் எனக்கு மிகவும் பிடிக்கும்."

"வெள்ளிக் கோப்பையைக் கொடுப்பதற்குக் கொஞ்ச நேரம் முன்னூலே நீலா விடத்திலே போனேன். 'உன் அம்மாவுக்குக் கருந் தேள் கொட்டி உயிருக்கே ஆபத்தாம். தருமலிங்க வைத்தியர் வீட்டுக்குத் தூக்கிப் போயிருக்கிருர்களாம். ஒரு அம்மா சொன்னூர்கள்' என்று புளுகினேன். அப்புறமும் அவள் அங்கே நிற்பாளா? தலைதெறிக்கத் தருமலிங்க வைத்தியர் வீட்டுப் பக்கம் ஓடிவிட்டாள். நான் உடனே ஒரு டீச்சரிடம் போய், யாரோ ஓர் அம்மா சொன்னதாக அதே கதையைச் சொன்னேன். டீச்சர் ஓடிப் போய் ஹெட்மாஸ்டரிடத்திலே சொன்னூர்கள். ஹெட்மாஸ்டர் கலெக்டரிடத்திலே சொன்னூர். வெள்ளிக் கோப்பையைக் கொடுக்காமலே விழா முடிந்து விட்டது! எப்படி என் திட்டம்?"

"அபாரம், அபாரம். நீ ஒவ்வொரு வகுப்பிலேயும் இரண்டு வருஷம், மூன்று வருஷம் என்று இருக்

கிறதனுலே, உன் தலையிலே களி மண்தான் இருக்கும் என்று நினைத்தேன். ஆனுல், உனக்கும் மூளை இருக்கிறது. அது வேலையும் செய்கிறது என்று இப்பொழுதுதான் தெரிந்தது . ஆமாம், உன் மூளை நல்ல வழியிலே வேலையே செய்யாதோ ? இப்படி மற்றவர்களுக்குத் தொல்லை கொடுக்கத்தானு அந்த மூளையைச் செலவிட வேண்டும் ?''

" என்ன மாலா, இப்படிப் பேசுகிருய் ? நான் நல்ல காரியத்திற்குத்தானே என் மூளையை உபயோகித்தேன் ?''

" நீ செய்ததா நல்ல காரியம் ? உனக்குப் பொருமை அதிகம். அந்தப் பொருமையிலே நீ எவ்வளவு பெரிய கெடுதலைச் செய்திருக்கிருய் ? நீலா எவ்வளவு நல்லவள் ; எவ்வளவு கெட்டிக்காரி என்பதெல்லாம் எனக்குத் தெரியும். தாத்தாவுக்கும் தெரியும். என் அம்மாவுக்கும் தெரியும் ''

இப்படி மாலா சொல்லிக் கொண்டிருக்கும் போதே, "சபாஷ்'' என்ற குரல் பின்னுலிருந்து கேட்டது.

இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். மாமரத்தின் பின்னுல் மறைந்திருந்த பரமசிவம் பிள்ளை, அவர்களின் எதிரிலே வந்து நின்ருர். கணக்கப் பிள்ளை வீட்டுக்குப் போகும்போது, மூக்குக் கண்ணுடியை மறந்து விட்டார். சிறிது தூரம் சென்ற பிறகுதான் கண்ணுடி நினைவு வந்தது. கணக்கப் பிள்ளை வீட்டில் ஏதாவது படிக்க வேண்டியது, எழுத வேண்டியது வந்தால்,

கண்ணாடி தேவைப்படுமே என்றுதான் திரும்பி வந்தார். அறையிலிருந்து ஜன்னல் வழியாகப் பார்த்தார். தோட்டத்திலே மாலாவிடம் முரளி பேசிக் கொண்டிருந்ததைக் கண்டார். அங்கே நீலாவைக் காணோம். முரளி ஏதாவது கோள் சொல்லி மாலாவுக்கும் நீலாவுக்கும் சண்டை மூட்டினாலும் மூட்டிவிடுவான் என்று நினைத்தார். அதனால், கொல்லைப்புற வழியாகச் செடிகளுக்குப் பின்னால் மறைந்து மறைந்து மாமரத்தின் பின் பக்கமாக வந்து நின்றார். மறைவாக நின்று கொண்டு அவர்கள் பேசியதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார்.

'சபாஷ்' என்று கூறிக்கொண்டு அங்கு வந்த பரமசிவம் பிள்ளையைக் கண்டதும், முரளி ஓடத் தொடங்கினான். "டேய் முரளி, நில். ஓடாதே!" என்று பலமாக அதட்டினார் பரமசிவம் பிள்ளை. முரளி அரண்டுபோய் அங்கேயே நின்றான். அவன் கால்களும் கைகளும் 'கிடுகிடு' என்று நடுங்கின.

"டேய், அயோக்கியப் பயலே! நீதான் சரியாகப் படிக்கவில்லை. நன்றாகப் படிக்கிறவர்களையும் ஏன் கெடுக்க நினைக்கிறாய்? உனக்கு நல்ல எண்ணம் இல்லை. அதனாலேதான் நீ உருப்படாமல் போனாய். அன்றைக்கே நினைத்தேன். நான் நினைத்தது சரியாகப் போய்விட்டது. கலெக்டர் கலந்து கொண்ட ஒரு விழாவிலே இப்படி ஒரு பொய் சொல்லி, அந்த விழாவையே நடுவில் நிறுத்தி விட்டாயே, இது கலெக்டருக்குத் தெரிந்



திருந்தால், உன் கதி என்ன ஆகியிருக்கும்! அவர் கூட வந்த போலீஸ்காரர்களிடத்திலே, உன்னை ஒப்படைத்திருப்பார். அவர்கள் உன்னை அமரபுரம் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போயிருப்பார்கள். எங்களுக்கெல்லாம் அவமானமாகப் போயிருக்கும். அதனாலேதான் நான் இதைப் பற்றிப் பேசாமலே இருந்து விட்டேன். டேய் முரளி, உன் கெட்ட குணம் வளர்ந்துகொண்டே போகிறது. உன்னைத் திருத்தவே முடியாது. ஆனால், ஒரு விஷயத்திலே நான் கண்டிப்பாக இருக்கப் போகிறேன். இன்றையிலிருந்து நீ இந்த வீட்டுப் படி ஏறக்கூடாது...போடா, வெளியே!" என்று கூறி, அவன் பிடரியிலே கையை வைத்து வேகமாகத் தள்ளினார்.

உடனே மாலா குறுக்கே ஓடி வந்தாள். "தாத்தா! முரளி தெரியாமல் தப்புப் பண்ணிவிட்டான். இனிமேல் இப்படிச் செய்ய மாட்டான். இந்தத் தடவை மன்னித்து விடுங்கள், தாத்தா!" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

"டேய் முரளி, அன்றைக்கு நீலாவின் அம்மா ஏன் விழாவிற்கு வரவில்லை? உன் அத்தைக்கு உடம்பு சரியில்லாததால், உன் அத்தையைத் தனியாக விட்டுவர அவளுக்கு மனசில்லை. கூடவே இருந்திருக்கிறாள். விழாவிற்கு வராதது மட்டும் இல்லை. அவள் மகள் பரிசு மேலே பரிசு வாங்கினாளே, அதை யெல்லாம் அவள் பார்த்தாளா? அவள் மகளைப் பலரும் பாராட்டிப் பேசினார்களே,

அதை யெல்லாம் அவள் கேட்டாளா ? உன் அத்தைக்கு உதவி செய்யப்போக, நீ அவளுக்கும் அவள் மகள் நீலாவுக்கும் எவ்வளவு தொல்லைகள் கொடுத்து விட்டாய் ?''

" மாமா ! நான் இதுவரை பண்ணினதெல்லாம் தப்புதான். இனி, நான் தப்புப் பண்ண மாட்டேன்; பொய் பேசமாட்டேன். என்னை மன்னித்துவிடுங் கள் மாமா !'' என்று கூறிப் பரமசிவம் பிள்ளையின் காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினன் முரளி. அப்போது அவன் கண்களிலிருந்து தாரை தாரை யாக நீர் வழிந்தது.

அப்போது மாலாவைப் பார்த்தார் பரமசிவம் பிள்ளை. அவள் கண்களும் கலங்கி யிருந்தன.

" சரி, முரளி ! இனி ஒரு தடவை நீ தப்பு செய்தால், உன் தோலை உரித்துவிடுவேன். ஒழுங் காகப் படித்து, முன்னேறுகிற வழியைப் பார் '' என்று கூறிவிட்டு, "மாலா, மூக்குக் கண்ணுடியை மறந்துபோனேன். எடுக்க வந்தேன். போய் வரட் டுமா ?'' என்று கூறிப் புறப்பட்டு விட்டார் பரம சிவம் பிள்ளை.

பரமசிவம் பிள்ளை தலை மறைந்ததும், முரளி மாலாவைப் பார்த்தான். அவன் பார்வை மிகவும் கெஞ்சுவது போல இருந்தது. " மாலா ! நான் செய்தது எல்லாம் தப்புதான். அன்றைக்குக் கதை கட்டிவிட்டது, கலெக்டருக்குத் தெரிந்திருந்தால், மாமா சொன்ன மாதிரி போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போயிருப்பார்கள். நல்ல வேளை...தப்பி

னேன்...மாலா, இந்த நேரத்திலிருந்து நான் பழைய முரளியில்லை ; புது முரளி ! ஆமாம், புது முரளி ! சத்தியமாகச் சொல்கிறேன் " என்று உணர்ச்சி பொங்கக் கூறினன்.

" முரளி, நீ திருந்தினல் உனக்கும் நல்லது ; மற்றவர்களுக்கும் நல்லது ; எல்லாருக்குமே நல்லது. நீ நீலாவோடு போட்டி போடு. படிப்பிலே போட்டி போடு ; விளையாட்டிலே போட்டி போடு. ஆனல், வீணுகப் பொருமைப் படாதே."

"சரி, மாலா !" என்று அடக்கமாகப் பதில் சொன்னன் முரளி.

" அப்போது, " மாலா ! மாலா !" என்று கூவிக் கொண்டே அங்கே வந்தாள் நீலா. அவள் கையிலே அழகிய வர்ணப் பெட்டி இருந்தது.

" நீலா ! நான் படம் போடுவது உனக்கு எப்படித் தெரியும் ? நான் சொல்லவே யில்லையே ! 'கலர் பாக்ஸ்' கொண்டு வந்திருக்கிருயே !" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் மாலா.

" அடே, நீ படம்கூடப் போடுவாயா ?"

"சுமாராகப் போடுவேன். இந்த ஊர்க் கடைசியில் இருக்கிறதே தாமரைக் குளம், அதை இந்த ஊருக்கு வந்த புதிதிலே வரைந்து பார்த்தேன். சேர்ந்தாற் போல் நாலைந்து நாட்கள் காலை நேரத்திலே வரைந்தேன். அப்புறம் மறந்தே போனேன்?"


"அப்படியா ! அந்தப் படத்தைப் பார்க்கலாமா ?"

" நீலா ! உனக்காகத்தான் நான் அதை வரைந்தேன். மாடியிலே மேஜை அறையிலே வைத்திருக்கிறேன். வா, மாடிக்குப் போகலாம்."

" சரி, நான் இந்த வர்ணப் பெட்டியைக் கொண்டு வந்தது யாருக்காகத் தெரியுமா ? முரளிக்காகத்தான்" என்றாள் நீலா.

முரளி திடுக்கிட்டான்.





# 7. மாலா வரைந்த படம்!

"என்ன நீலா, நீ வர்ணப் பெட்டியைக் கொண்டு வந்தது எனக்காகவா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் முரளி.

"ஆமாம் முரளி! உனக்காகவேதான் கொண்டு வந்தேன். நீ உன் மாமாவிடம் வர்ணப் பெட்டி வாங்கித் தரச்சொல்லிப் பல தடவை கேட்டாயாம். என் அம்மா சொன்னார்கள். 'பாவம், நம் முரளிக்கு இதைக் கொடு. நீதான் நிறையப் பரிசு வைத்திருக்கிறாயே' என்று சொல்லி, என் அம்மா இதை எடுத்துக் கொடுத்தார்கள்" என்று கூறி வர்ணப் பெட்டியை முரளியிடம் நீட்டினாள் நீலா.

முரளி அதை வாங்குவதற்குத் தயங்கினான்.

"முரளி! வாங்கிக்கொள். அன்போடு கொடுப்பதை வேண்டாமென்று சொல்லக் கூடாதாம். என் அம்மா அடிக்கடி சொல்லுவார்கள்" என்றாள் மாலா.

முரளி, வர்ணப் பெட்டியைத் தயக்கத்தோடு கையில் வாங்கினான். அப்போது அவன் கைகள் கூசின. கண்களிலிருந்து நீர் வழிந்தது.

"ஏன் முரளி, அழுகிருய்?" என்று ஒரே சமயத்தில் மாலாவும் நீலாவும் கேட்டார்கள்.

"நீலா ! உன் அம்மா எவ்வளவு நல்லவர்கள் ! அவர்களைக் கருந்தேள் கொட்டியதாக..." அதற்கு மேல் அவளுல் பேச முடியவில்லை. தொண்டை அடைத்தது.

"முரளி, இது வரையில் நடந்த கெட்டதையெல்லாம் மறந்து விடுவோம் ; நல்லதை மட்டும் நினைவு வைத்துக் கொள்வோம்...வாருங்கள், மாடிக்குப் போவோம்" என்று நீலாவையும் முரளியையும் மாலா மாடிக்கு அழைத்துச் சென்ருள். மேஜை அறையைத் திறந்தாள். உள்ளேயிருந்த படத்தை எடுத்துக் காட்டினுள்.

"அடடே, படம் எவ்வளவு அழகாக இருக்கிறது ! மிகமிக நன்ருக வரைந்திருக்கிருயே!" என்று வியப்போடு கூறினுள் நீலா.

"ஏதோ எனக்குத் தெரிந்தபடி வரைந்திருக்கிறேன். நீலா, நீ என்னுடைய நல்ல சிநேகிதி. நல்ல சிநேகிதி என்ன செய்யவேணும்? தப்பு ஏதாவது இருந்தால் அதை எடுத்துச் சொல்லித் திருத்த வேணும்"

"ஓஹோ! அப்படியா? மாலா, தாமரைக் குளம், அதைச் சுற்றியிருக்கிற மரங்கள், கொஞ்ச தூரத்தில் தெரிகிற மலை, மேலே பறக்கிற பறவைகள்— எல்லாவற்றையும் நன்ருகத்தான் வரைந்திருக்கிருய். ஆனல்..."



"என்ன ஆனால்...? சொல்லு, நீலா. சும்மா சொல்லு."

"ஒரே ஒரு சின்னத் திருத்தம் செய்தால், இயற்கையாக இருக்கும் "

"இதோ, உடனே திருத்தி விடுகிறேன்.... சொல்லு நீலா !"

"எங்களூர்த் தாமரைக் குளத்திலே வாத்துக்களைத்தானே நீ பார்த்திருப்பாய்? ஆனால், படத்திலே வாத்துக்களைக் காணோம்! அன்னங்களைப் போட்டிருக்கிறாயே! இரண்டு வெள்ளை அன்னங்கள். ஒரு கறுப்பு அன்னம். பொருத்தமாக இல்லையே!"

"நீலா! குளத்திலே அன்னங்கள் இருந்தால் அழகாயிருக்குமே என்றுதான் அப்படி போட்டேன்"

"அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் பொருத்தமாக இல்லையே!"

"ஆமாம் நீலா, தப்புத்தான். நான் கண்ணாலே கண்டதைத்தானே படமாக எழுதுகிறேன்? எதற்காக இந்த அன்னங்களெல்லாம்? இதோ பார். வாத்துக்களாக மாற்றி விடுகிறேன்" என்று கூறி அன்னங்களிலே மாலா சில திருத்தங்களைச் செய்தாள். சில கோடுகளை ரப்பரால் அழித்தாள்: உடனே, அன்னங்கள் இருந்த இடத்தில் வாத்துக்கள் தெரிந்தன !

"அபாரம் ! அபாரம் !" என்று துள்ளிக் குதித்தான் முரளி. "எது அபாரம்? நீலாவின் யோசனை தானே ?" என்று கேட்டாள் மாலா.

"மாலா, நீ செய்ததுதான் அபாரம். ஒரு நிமி ஷத்திலே அன்னங்களையெல்லாம் வாத்துக்களாக மாற்றிவிட்டாயே! இப்போது, இந்தப் படத்தை யார் பார்த்தாலும், பூங்குடியிலுள்ள தாமரைக் குளம் என்று சொல்லிவிடுவார்கள். நேருக்கு நேரா கப் பார்க்கிற மாதிரியே இருக்கிறது" என்று மன மாரப் பாராட்டினுள் நீலா.

"இதற்கு வர்ணம் கொடுத்தால் இன்னும் அழகாக இருக்கும்" என்றுன், முரளி.

"எனக்கு நல்லபடியாக வர்ணம் கொடுக்கத் தெரியாதே! நீ கொடுப்பாயா முரளி?" என்று கேட் டாள் மாலா.

"எனக்குப் படம் போட வராது. ஆனுல், நன் ருக வர்ணம் கொடுப்பேன். என் புத்தகத்திலே இருக் கிற படங்கள் எல்லாமே வர்ணப் படங்களாகத் தான் இருக்கும்! எல்லாவற்றுக்கும் வர்ணம் கொடுத் திருக்கிறேன். ஒரு நாள் 'டிராயிங் மாஸ்டர்' அந்தப் படங்களையெல்லாம் பார்த்துவிட்டு, 'நன்ருக வர் ணம் கொடுத்திருக்கிருய்! இது ஒன்றிலாவது திறமை இருக்கிறதே' என்று பாராட்டினுர்; முது கிலே தட்டிக் கொடுத்தார்."

"அடடே, அப்படியா!... சரி, நீ இந்தப் படத் துக்கு வர்ணம் கொடு. வர்ணப் பெட்டிதான் கை யிலே இருக்கிறதே! என்ருள் மாலா.

உடனே முரளி, அந்தப் படத்துக்கு வர்ணம் தீட்டினுன். சிறிது நேரத்தில் அந்தப் படம்

மிகவும் அழகாக அமைந்துவிட்டது. "முரளி, எவ்வளவு அழகாக, வர்ணம் கொடுத்திருக்கிறாய்!" என்று மகிழ்ச்சியுடன் கூறினாள் மாலா.

"மிகவும் நன்றாக இருக்கிறது. இவ்வளவு திறமை முரளியிடம் இருக்கிறதே!" என்று வியந்தாள் நீலா.

"நான் படம் வரைந்தேன். நீலா பொருத்தமாக ஒரு திருத்தம் சொன்னாள். முரளி அற்புதமாக வர்ணம் கொடுத்தான். படம் அபாரமாக அமைந்து விட்டது. இதிலிருந்து என்ன தெரிகிறது?" என்று கேட்டாள் மாலா.

"ஒற்றுமையே உயர்வு தரும்" என்றாள் நீலா.

"சேர்ந்து வாழ்வதே சிறந்த வாழ்வு" என்றான் முரளி.

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்றாள் மாலா.

"ஆம், சந்தேகமே இல்லை" என்ற குரல் கேட்டு மூவருமே திரும்பிப் பார்த்தார்கள்.

மாலாவின் பாட்டி பார்வதி அம்மாள் அங்கே நின்று கொண்டிருந்தாள். அவள் அருகிலே மாலாவின் அம்மா நளினியும் நின்றாள். அவர்களைக் கண்டதும், நீலா திடுமென்று எழுந்தாள். பயத்துடன் ஓர் ஓரத்தில் போய் ஒதுங்கி நின்றாள்.

" நாங்கள் வந்ததைக்கூடக் கவனிக்காமல், நீங்கள் மூன்று பேரும் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தீர்கள். நீங்கள் இவ்வளவு ஒற்றுமையாக இருக்கிறதைப் பார்க்க எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது, தெரியுமா? முரளி கூடத் திருந்தி விட்டானே!......மாலா, தோட்டத்திலே நடந்ததையெல்லாம் உன் தாத்தா என்னிடத்திலேயும், நளினியிடத்திலேயும் சொல்லிவிட்டுத்தான் கணக்கப் பிள்ளை வீட்டுக்குப் போனார்."

" பாட்டி, முரளி மனசுகூடத் திருந்திவிட்டது, இல்லையா?" என்று கேட்டாள் மாலா.

" முரளி மனசுகூடத் திருந்தி விட்டது என்கிறாயே, அப்படியானால், இன்னொரு மனசுதான் திருந்தவில்லை என்கிறாயா? அந்த மனசும் இப்போது திருந்திவிட்டது. அது யார் மனசு? சொல்லு மாலா "

" யார் மனசு? தெரியவில்லையே!" என்றாள் மாலா.

உடனே பார்வதி அம்மாள் சொன்னாள் :

" உன் பாட்டி மனசுதான். இத்தனை வருஷத்திலே நீலாவும், அவள் அம்மாவும் நம்மைப் பற்றி ஏதாவது கெடுதலாகப் பேசியிருக்கிறார்களா? நமக்கு ஏதாவது கெடுதல் செய்திருக்கிறார்களா? நினைத்து நினைத்துப் பார்த்தேன். அவர்கள் எதுவும் கெடுதலாகக்கூட நினைத்திருக்க மாட்டார்கள். அவர்கள் மேலே எந்தத் தப்பும் சொல்ல

முடியாது. அவர்கள் ஏழையாகப் போனதனுலே நான்தான் அவர்களை இளப்பமாக நினைத்து விட்டேன்" என்று பாட்டி கூறிக் கொண்டிருக்கும் போதே, மாலாவின் அம்மா நளினி குறுக்கிட்டாள்:

"அம்மா! கதிரேசன் செட்டியாரிடத்திலே மாலாவினுடைய அப்பா எவ்வளவு விசுவாசமாக இருக்கிருர்! அதேபோல உங்களிட த்திலும், அப்பா விட த்திலும் நீலாவும், அவள் அம்மாவும் விசுவாச மாக இருக்கிருர்கள். மாலாவின் அப்பா ஒவ்வோ ராண்டும் எத்தனையோ ஏழை மாணவர்களுக்குப் புத்தகம், துணி, ரொக்கமாகப் பணம் எல்லாம் கொடுத்து வருகிருர்கள். நீ லா வு ம் பட்டணத் துக்கு வந்தால், அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி யாக இருக்கும்."

"ஆமாம் பாட்டி, நீலாவை நாங்கள் திரும்பிப் போகிறபோது அழைத்துப் போகட்டுமா?" என்று குழைவாகக் கேட்டாள் மாலா.

"நீங்கள் எல்லாரும் ஒரே கட்சியில் இருக் கிறீர்கள். நான் ஒருத்தி மட்டும் எதிர்க்கட்சியிலே இருக்கலாமா? உங்களோடே சேர வேண்டியது தான். சரி, உங்கள் விருப்பப்படியே நீலாவை அழைத்துப் போங்கள்"

"பாட்டி, நீலா சென்னைக்கு வருவது பிள்ளையை வைத்துக் கொள்ளவா? அல்லது படிக்கவா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் மாலா.

"போடி, குறும்புக்காரி!" என்று கூறிவிட்டு "நீலா, இங்கே வா. ஏன் இப்படி ஓரமாக நிற்கிருய்?" என்ருள் பார்வதி அம்மாள்.

உடனே மாலா ஓடிப் போய் நீலாவின் கையைப் பிடித்து இழுத்து வந்தாள். பார்வதி அம்மாள் மாலாவையும் நீலாவையும் அன்போடு அணைத்துக் கொண்டாள்.

"அம்மா! நானும் என் அம்மாவும் ஏழையாக இருந்தாலும், எங்கள் மேலே இவ்வளவு பிரியம் வைத்திருக்கிறீர்களே! என் அம்மா அடிக்கடி சொல்லுவார்கள். 'உன் அப்பா செய்த உதவியும் தியாகமும் வீண்போகாது. நல்லவர்கள் உருவத்திலே வந்து நமக்கு எப்போதும் உதவும்' என்று சொல்லுவார்கள். அந்த நல்லவர்கள் நீங்கள்தான்" என்று நன்றியுடன் கூறினுள் நீலா. அப்போது அவள் கண்களில் நீர் நிறைந்தது.

"மாலா, உனக்கு முந்தாம்நாள் உன் தாத்தா வாங்கி வந்தாரே ஒரு பாட்டுப் புத்தகம், அதிலேயிருந்து ஒரு பாட்டை உன் அம்மா கொஞ்ச நேரத்துக்கு முன்ஞலேதான் படித்துக் காட்டினுள். மாடு செத்தால், அதன் தோலாலே செருப்புத் தைக்கலாம். ஆடு செத்தால், அதன் உரோமத்தாலே கம்பளி செய்யலாம். யானை செத்தால், அதன் தந்தத்தாலே சீப்பு, பொம்மையெல்லாம் செய்யலாம். பாம்பு செத்தால்கூட அதன் தோலாலே மணிபர்ஸ் செய்யலாம்; பெல்ட் செய்யலாம்.

ஆனால்,

செத்த மனிதன் உடலிலே
செய்ய என்ன உள்ளதோ?

செருப்புக் கூடத் தைத்திடத்
தீண்டு வாரும் இல்லையே !

ஆகையால்,

இருக்கும் போதே பிறருக்கு
இயன்ற வரையில் உதவுவோம்.

இப்படி ஒரு பாட்டு அந்தப் புத்தகத்திலே இருக்கிறது. அதைக் கேட்டதிலேயிருந்து, என் மனசே மாறிவிட்டது. எனக்கோ அடிக்கடி தலை சுற்றல், மயக்கம் எல்லாம் வருகிறது. நாளைக்கே நான் திடீரென்று போனாலும் போய்விடுவேன் ..."


பார்வதி அம்மாள் இப்படிச் சொன்னதும், நீலா "அம்மா!இப்படியெல்லாம் சொல்லாதீர்கள்" என்று துடிதுடித்துக் கொண்டே, பார்வதி அம்மாளின் வாயைத் தன் சிறு கையால் பொத்தினாள்.


"இல்லை நீலா! என்னாலே யாருக்கு என்ன பிரயோசனம்? உயிரோடு இருக்கிறபோதே, உதவ வேண்டியவர்களுக்கு உதவாமல் போனேன்."

"பாட்டி, நீதான் நீலாவைச் சென்னைக்குக் கூட்டிப் போகச் சொல்லிவிட்டாயே! நீதான் நல்ல பாட்டி. இன்றைக்கே நான் என் அப்பாவுக்குக் கடிதம் எழுதப் போகிறேன். நீலாவும் எங்களோடே வரப்போவதைத் தெரிவிக்கப் போகிறேன்."

"மாலா, உன் அப்பாவுக்குக் கடிதமா எழுதப் போகிறாய்? வேண்டாம்" என்றாள் மாலாவின் அம்மா நளினி.

"என்ன! வேண்டாமா! என்ன அம்மா இது! இந்த நல்ல செய்தியைத் தெரிவிக்க வேண்டாமா?" என்று அதிர்ச்சியுடன் கேட்டாள் மாலா.





# 8. மாங்குயில் சிறுவர் சங்கம்

'அப்பாவுக்கு ஒரு நல்ல செய்தியைத் தெரிவிக்கத்தானே கடிதம் .எழுத வேண்டும் என்றேன். ஆனால், அம்மா வேண்டாம் என்கிறாளே!'' என்ற கேள்விக் குறியுடன் அம்மாவின் முகத்தைப் பார்த்தாள் மாலா.

அம்மா சிரித்துக்கொண்டே, ''மாலா! நாம் சென்னையிலிருந்து புறப்படும்போது, ரயில் நிலையத்தில் உன் அப்பா என்ன சொன்னார்கள்? ஞாபகம் இருக்கிறதா?'' என்று கேட்டாள்.

''ஓ! ஞாபகம் இருக்கிறதே. 'வாரத்துக்கு ஒரு முறை கடிதம் போடுங்கள். பத்து நாளைக்கு ஒரு தடவையாவது டிரங் கால் போட்டுப் பேசுங்கள்—என்று அப்பா சொன்னது நன்றாக ஞாபகம் இருக்கிறது''

''நாம் வந்தது முதல் இதுவரை ஒருதடவையாவது போனிலே பேசினோமா? இல்லையே! அதனாலேதான் கடிதம் எழுத வேண்டாமென்று

சொன்னேன். நாளைக் காலையிலே நாம் அமரபுரத் துக்குப் போய், அங்கேயிருக்கிற போஸ்ட் ஆபீஸி லிருந்து உன் அப்பாவுக்கு போன் பண்ணுவோம். நீலா நம்மோடு வருகிற செய்தியைச் சொல்லு வோம். உன் அப்பா மிகவும் மகிழ்ச்சி அடைவார்."

"ஆமாம் அம்மா, அதுதான் சரி. கூடவே நீலாவையும் அமரபுரத்திற்கு அழைத்துச் செல்வோமா?"

மாலா அம்மாவிடம் இப்படிக் கேட்டதும்' "மாலா, மாலா, நானும் உங்களோடு வரட்டுமா?" என்று ஆசையோடு கேட்டான் முரளி.

"பாவம், முரளியையும் அழைத்துச் செல் லுங்கள். இருக்கவே இருக்கிறது, நம் வீட்டு வில் வண்டியும், மயிலைக் காளைகளும்" என்றாள் பார்வதி அம்மாள்.

மறு நாள் காலை பலகாரம் சாப்பிட்டதும், மாலா, நீலா, முரளி, மாலாவின் அம்மா நளினி, குட்டிப் பையன் ரவி எல்லாரும் அமரபுரத்துக்கு மயிலைக் காளைகள் பூட்டிய வில் வண்டியில் புறப் பட்டனர். தபால் நிலையத்திலிருந்து டாக்டர் சூரியசேகருடன் போனில் பேசினார்கள்.

டாக்டருடன் முதலில் பேசியது மாலாவின் அம்மாதான். குடும்ப விஷயமாகச் சிறிது நேரம் பேசிவிட்டு, நீலாவைப் பற்றியும் அவளை மேல் படிப்புக்காகச் சென்னைக்கு அழைத்து வருவது பற்றியும் சொன்னாள். பிறகு மாலா பேசினாள்.

அவள் நீலாவைப் பற்றிக் கூறும்போது, நீலா விடம் ரவி எவ்வளவு பிரியமாக இருக்கிருன் என் பதையும் சொன்னுள். பிறகு, "அப்பா! இதோ நீலா பேசணுமாம். அவளோடு பேசுங்கள் அப்பா" என்று கூறிச் 'சட்'டென்று நீலாவிடம் ரிசீவரைக் கொடுத்தாள்.

நீலா அதற்கு முன்ஞல் டெலிபோனில் பேசி யதே இல்லை. அவளுக்கு என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்றே தெரியவில்லை. அப் போது "ஹலோ! ஹலோ! நீலாவா? மாலா வோடு அவசியம் நீ இங்கே வரவேண்டும்" என்று டாக்டர் கூறுவது கேட்டது.

"ஆகட்டும், டாக்டர்!" என்று நீலா சொன் ஞளே தவிர, வேறு எதுவும் அவளால் பேச முடியவில்லை.

போனில் பேசி முடித்ததும் எல்லாரும் வண்டி யில் வீடு திரும்பினர்.

வண்டியில் வரும்போது, "மாலா, நீயும் நீலா வும் பட்டணம் போன பிறகு எனக்குப் பொழுதே போகாது....... கெட்ட பையன்களோடு சேர்ந்தால், வம்பு அளக்கலாம்; ஊரைச் சுற்றலாம். பொழுது போய்விடும். ஆனுல், இனிமேல் இப்படி உங்க ளோடு பழகின பிறகு, நான் கெட்ட பையன் களோடு சேருவேனு? ஒரு நாளும் சேரமாட்டேன்.... சரி, அப்படியானுல் எனக்கு எப்படித்தான் பொழுது

போகும்? அதுதான் தெரியவில்லை'' என்று ஏக்கத்துடன் கூறினான் முரளி.

உடனே மாலா, ''முரளி! நாங்கள் இருக்கிற அண்ணா நகரிலே 'கவிமணி குழந்தைகள் சங்கம்' என்று ஒரு சங்கம் இருக்கிறது. அங்கே என்னைப் போல் குழந்தைகள் எல்லாம் அடிக்கடி கூடுவோம். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் யாராவது ஓர் எழுத்தாளர் வந்து கதை சொல்லுவார். நாங்களும் கதை சொல்லுவோம்; பாட்டுப் பாடுவோம்; நாடகம் கூடப் போடுவோம். அதுமாதிரி ஒரு சங்கத்தைப் பூங்குடியிலும் நாம் ஆரம்பித்தால் என்ன?'' என்று கேட்டாள்.

''ஆஹா! ஆஹா! அருமையான யோசனை!'' என்று கூறிக்கொண்டே குதித்து எழுந்தான் முரளி. மறுவிநாடி, 'டங்'கென்ற சத்தம் கேட்டது. வண்டியில் உட்கார்ந்திருக்கிறோம் என்பதை மறந்து முரளி எழுந்ததால், அவன் தலை வண்டியின் மேல் பாகத்தில் உள்ள சட்டத்தில் பலமாக மோதிவிட்டது! அதைக் கண்டு எல்லாரும் வயிறு குலுங்கச் சிரித்தனர். நெல்லிக்காய் அளவு அவனது உச்சந்தலை புடைத்திருப்பதைக் கண்ட பிறகுதான் அவர்களது சிரிப்பு அடங்கியது.

''பாவம்'' என்று மாலாவின் அம்மா புடைத்த இடத்தைத் தடவிக் கொடுத்தாள். ஆனாலும் முரளி அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. ''வீட்டுக்குப்போய் மருந்து போட்டால் சரியாகிவிடும்'' என்று சமாதானம் கூறிக்கொண்டான். பிறகு

"மாலா! நீ சொன்னது நல்ல யோசனை! ஊருக்குப் போனவுடனே சங்கத்தை ஆரம்பித்துவிடுவோம்" என்றான்.

"ஆமாம் மாலா! உன்னைப் போல் நகரத்திலே இருக்கிற குழந்தைகள் விடுமுறையிலே கிராமத்துக்கு வந்துவிடுகிறார்கள். கிராமத்திலே இருக்கிற ஏழைக் குழந்தைகள் எங்கே போவார்கள்? ஒரு சங்கம் ஏற்படுத்தி அதை நல்லபடியாக நடத்தினால் பொழுது வீணாய்ப் போகாது. வாழ்க்கைக்கு உதவியாகவும் இருக்கும்" என்று சொன்னாள் மாலாவின் அம்மா.

"நீலா, முரளி, என் அம்மா சொன்னதைக் கேட்டீர்களா? நாம் வீட்டுக்குப் போனவுடனே இந்த யோசனையைத் தாத்தாவிடத்திலே சொல்லுவோம். தாத்தா இந்த மாதிரி நல்ல காரியத்துக்கு நிச்சயம் உதவி, ஒத்தாசை பண்ணுவார்" என்றாள் மாலா.

"எங்கள் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியரிடமும் சொல்லுவோம். அவரும் நல்ல நல்ல ஆலோசனைகளைச் சொல்லுவார்" என்றாள் நீலா.

வீட்டை அடைந்ததும், முதல் வேலையாகச் சங்கம் தொடங்குவதைப் பற்றித் தாத்தாவிடம் சொன்னாள் மாலா.

"மாலா, ரேடியோவிலே வாரா வாரம் ஏதாவது ஒரு குழந்தைச் சங்கம் நாடகம், பாட்டு, கதையெல்லாம் நடத்தும்போது, நம் ஊரிலும் இப்படி ஒரு

சங்கம் இருந்தால் நன்ருயிருக்குமே என்று நினைப்பேன். நம் வீட்டுத் தோட்டத்திலே நெல் மூட்டைகளை அடுக்கி வைக்க இரண்டு அறைகள் கட்டி வைத்திருக்கிருேமே, அந்த அறைகளை உங்கள் சங்கத்துக்குத் தந்துவிடுகிறேன். இப்பொழுதுதான் தேவைக்கு மேலே அரிசி வைத்திருந்தால், சட்டப்படி குற்றமாயிற்றே!'' என்ருர் பரமசிவம் பிள்ளை.

''தாத்தா! நானும் நீலாவும் சென்னைக்குப் போவதற்குள்ளே சங்கத்தை ஆரம்பித்துவிட வேண்டும்'' என்ருள் மாலா.

''சரி, நம் ஹெட்மாஸ்டரிடத்திலே சொல்லி அமரபுரத்திலே, குழந்தைகளுக்கு வேண்டிய புத்தகங்களை வாங்கி வரச் சொல்லுவோம். அவர் நல்ல நல்ல புத்தகங்களாகப் பார்த்து வாங்குவார். மேலும், பிள்ளைகள் விளையாட காரம் போர்ட், செஸ் இன்னும் வேண்டியதையெல்லாம் வாங்கி வரச் சொல்லுவோம்'' என்ருர் பரமசிவம் பிள்ளை.

''எங்கள் தாத்தா தங்கத் தாத்தா'' என்று அவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள் மாலா.

உடனே மாலாவின் பாட்டி பார்வதி அம்மாள், ''நாளை மறுநாள்கூட நல்ல நாள்தான். முகூர்த்த நாள். அன்றைக்கே உங்கள் சங்கத்தை ஆரம்பிக்கலாமே! எத்தனை பேர் வருவார்கள் என்று முன் கூட்டியே சொன்னுல் எல்லாருக்கும் இனிப்பு, காரம், காப்பியோடு விருந்து வைத்துவிடுவோம்'' என்று முக மலர்ச்சியோடு கூறினுள்.

பாட்டி சொன்ன நாளில் சங்கம் தொடங்கியது. பரமசிவம்பிள்ளையின் வீட்டுத் தோட்டத்தில் உள்ள மாமரத்தடியில், அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சுமார் ஐம்பது குழந்தைகள் கூடியிருந்தார்கள். பரமசிவம் பிள்ளையும், தலைமை ஆசிரியரும் சில பெரியவர்களும் அங்கு வந்திருந்தார்கள்.

மாலா இறைவணக்கம் பாடினாள். நீலா தலைமை ஆசிரியரைத் தலைமை தாங்கி நடத்தித் தருமாறு கேட்டுக் கொண்டாள். தலைமை ஆசிரியர் பேசும் போது, "குழந்தைகளே! உங்கள் சங்கத்தின் துவக்க விழாவை இன்னும் பத்துப் பதினைந்து நாட்களில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் போகிறோம். இப்போது நடப்பது சங்கத்தை அமைப்பதற்கான ஒரு கூட்டம்தான். முதலில் உங்கள் சங்கத்துக்கு ஒரு பெயர் வைக்க வேண்டும். என்ன பெயர் வைக்கலாம்?" என்று கேட்டார்.

ஒவ்வொருவரும் ஒரு பெயரைச் சொன்னார்கள். அப்போது செல்வி என்ற பெண் எழுந்து, "தயவு செய்து சப்தம் போடாமல், சற்று கவனமாகக் கேளுங்கள். 'கூ, கூ' என்று இனிமையாக ஒரு குயில் கூவுகிறதே, கேட்கிறதா?" என்றாள். எல்லாரும் உயரே பார்த்தார்கள்; உற்றுக் கேட்டார்கள்.

"ஆம், கேட்கிறது" என்றார்கள்.

“ மாமரத்திலிருந்து அந்தக் குயில் கூவுவதால் ‘ மாங்குயில் சிறுவர் சங்கம் ’ என்று பெயர் வைக்கலாம்” என்ருள்.

“ நல்ல பெயர் ”, “ அழகான பெயர் ” என்று எல்லாரும் ஆமோதித்தனர்.

‘ சரி, நம் சங்கத்துக்கு ‘ மாங்குயில் சிறுவர் சங்கம் ’ என்று பெயர் வைத்து விட்டோம். இனி, சங்கத்துக்குத் தலைவர், செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர் ஆகியோரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் ” என்ருர் தலைமை ஆசிரியர்.

தலைமை ஆசிரியரையே சங்கத்தின் தலைவராக இருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். முரளியைச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தார்கள். செல்விதான் பொருளாளர். கிராமத்தின் எட்டுப் பகுதிகளுக்கும் எட்டுச் சிறுவர்களைச் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தார்கள். பிறகு, லட்டு, வடை, காப்பியுடன் அமைப்புக் கூட்டம் இனிது முடிந்தது.

அன்று இரவு மாலா, நீலா, முரளி மூவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, “ நீலா, நாம் ஊருக்குப் போவதற்குள் நம் சங்கத் துவக்க விழாவை ஜாம் ஜாமென்று நடத்திவிட வேண்டும். துவக்க விழாவில் நாமெல்லாம் சேர்ந்து ஒரு நாடகம் நடத்திஞல் எவ்வளவு நன்ருக இருக்கும்!” என்று ஆசையோடு கூறிஞள் மாலா

“ நாடகமா? யார் எழுதிய நாடகத்தை நடத்துவது?” என்று கேட்டான் முரளி.

"நாடகத்தை நாமே தயாரித்தால்...?" என்றாள் நீலா.

"நாமே தயாரிப்பதா!" என்றான் முரளி.

"நாம் ஒவ்வொருவரும் இரவு படுக்கப் போகும் போது யோசனை பண்ணிக் கொண்டே படுப்போம். ஏதாவது நல்ல யோசனை தோன்றும். அதை வைத்து ஒரு நல்ல நாடகம் தயாரித்து விடலாம்" என்றாள் நீலா.

"படுத்தவுடனே எனக்கு யோசனை வராது. தூக்கம்தான் வரும்." என்றான் முரளி.

"சரி, நீ நன்றாகத் தூங்கு. அப்படித் தூங்கும் போது ஒரு கனவு கண்டு, அதிலே ஏதாவது நல்ல காட்சி தெரிந்தால், காலையிலே சொல்லு. அதையே நாடகமாக்கி விடலாம்" என்றாள் மாலா.

அடுத்த நாள் காலையில் நீலா வந்தாள். வந்தவுடனேயே, "மாலா, நான் இரவு வெகு நேரம் யோசனை பண்ணினேன். நான் எப்போதோ படித்த ஒரு குட்டிக் கதை ஞாபகத்துக்கு வந்தது. அது ஈசாப் சொன்ன கதை. அதற்குக் கண் காது வைத்து ஒரு பெரிய கதையாக ஆக்கிவிடலாம். ஜோராக இருக்கும் அந்தத் திருடன் கதை." என்றாள்.

"என்ன! திருடன் கதையா? அப்படியானால் எனக்கு மிகவும் பிடிக்குமே!" என்றான் முரளி.

"அந்தத் திருடன் சின்னப் பையனாக இருக் கிறபோது, பள்ளிக்கூடத்திலே யிருந்து சிலேட்,

பென்சில், புத்தகம்—இப்படி எதையாவது திருடிக் கொண்டு வருவானும். அவனுக்கு அப்பா இல்லே. அம்மா அவனுக்கு அளவுக்கு மீறிச் செல்லம் கொடுத்தாளாம். அதனுலே அவன் செய்வது தப்பு என்று எடுத்துச் சொல்லிக் கண்டிக்காமல், அவன் போக்கிலேயே விட்டுவிட்டாளாம். கொஞ்ச நாட்களானதும், அவனுக்குத் திருட்டுப் பட்டம் கொடுத்து அவனைப் பள்ளியை விட்டே விரட்டி விட்டார்களாம். பிறகு, அம்மா சொல்லேக் கேட்காமல், அவன் தீவிரமாகத் திருட்டுத் தொழிலிலே இறங்கி விட்டானும். அவனைவிட வேகமாக அவனுடைய திருட்டுப் புத்தி வளர்ந்ததாம். அப்புறம் ......"

"அப்புறம் என்ன?" என்று ஆவலாகக் கேட்டான், முரளி.

"அவன் பக்காத் திருடனுகி, பல இடங்களிலே கொள்ளே அடித்தான்; பலரைக் கொலே பண்ணினன். கடைசியிலே, அவன் ஒரு சிறுமியாலே திருந்தி, நல்லவனுகி விட்டான்."

"நீலா, நீலா, அந்தச் சிறுமி யார்?" என்று ஆவலாகக் கேட்டான் முரளி.

"ஐயையோ, அதை இப்போது சொல்லமாட்டேன்" என்று சிரித்துக் கொண்டே சொன்னுள் நீலா.

"நீலா, இந்தத் திருடன் கதையை நாடகமாக்கினுல் நன்ருக இருக்குமே!" என்ருள் மாலா.

"நான் மொத்தக் கதையையும் எழுதிக் கொண்டு வந்து காட்டுகிறேன். நன்ருக இருந்தால் சேர்க்க வேண்டியதைச் சேர்த்து, நீக்கவேண்டியதை நீக்கி......"

இப்படி நீலா சொல்லிக் கொண்டிருக்கும் போதே, "சரி, நீ மாடிக்கு வா. அங்கே உட்கார்ந்து எழுது. நாங்கள் தொந்தரவு செய்யமாட்டோம்" என்று கூறி நீலாவின் கையைப் பிடித்து மாடிக்கு அழைத்துச் சென்ருள் மாலா. முரளியும் கூடவே சென்ருன்.

நீலா சாப்பிடும் நேரம் தவிர, மற்ற நேரமெல்லாம் யோசித்து யோசித்து எப்படியோ கதையை முடித்து விட்டாள். இரவிலே மாலாவுக்கும் முரளிக்கும் அந்தக் கதையைப் படித்துக் காட்டிஞள்.

"ஆஹா! ஆஹா! அபாரம், அபாரம்!" என்ருன் முரளி.

"நீலா, கதை மிக நன்ருக இருக்கிறது. இதை நாடகமாக்கி, நம் சங்கக் குழந்தைகள் நடித்தால் எல்லாரும் பாராட்டுவார்கள்" என்ருள் மாலா.

"சரி, இதை நாடகமாக எழுத வேண்டுமே!" என்ருள் நீலா.

"உங்கள் தலைமை ஆசிரியரிடம் கேட்கலாமா?" என்ருள் மாலா.

"மாலா, சென்னையிலே எத்தனையோ நாடகங்களை நீ பார்த்திருப்பாயே! நீயும் சில நாடகங்

களிலே நடித்ததாகக்கூடச் சொன்னுயே. நீயே இதை நாடகமாக எழுதிப் பாரேன்" என்ருள் நீலா.

மறுநாள் காலை பரமசிவம் பிள்ளை வீட்டுக்குள் நீலா நுழைந்ததும், மாலா நீளமான நோட்டுப் புத்தகம் ஒன்றை அவளிடம் நீட்டினுள்.

அதன் முகப்பில் இருந்த படத்தை நீலா பார்த்ததும், "அடடே, கதையில் வருகிற திருடனை நேரிலே பார்த்த மாதிரி வரைந்திருக்கிருயே! பணக்கார வீட்டிலே திருட வந்த அவன் கையிலே டார்ச் விளக்கு இருக்கிறது. அந்த விளக்கு வெளிச்சத்திலே ஒரு சிறுமி! அடடா! எவ்வளவு நன்ருக வரைந்திருக்கிருய்!" என்று பாராட்டிக் கொண்டே உள்ளே புரட்டினுள்.

சில பக்கங்களை மாலா எழுதியிருந்தாள். உள்ளேயும் சில படங்கள் இருந்தன. அவள் எழுதியிருந்ததை நீலா படித்தாள். முதல் காட்சியே மிகவும் நன்ருக இருந்தது. "மூன்று காட்சிகள் எழுதிவிட்டாயே! மிச்சத்தையும் இன்றே எழுதி விடு. நாடகம் பிரமாதமாக இருக்கும். சந்தேகமே இல்லை" என்ருள் நீலா.

"ஏதோ எனக்குத் தெரிந்தபடி கிறுக்கியிருக்கிறேன். உங்கள் ஹெட்மாஸ்டரிடத்திலே காட்டுவோம். நன்ருக இருப்பதாக அவர் சொன்னுல், நாடகமாகப் போடுவோம்" என்று அடக்கத்துடன் கூறினுள் மாலா.


அன்று இரவு வெகு நேரம்வரை உட்கார்ந்து நாடகம் முழுவதையும் எழுதி முடித்து விட்டாள் மாலா. பொருத்தமாகச் சில படங்களையும் போட்டாள். முரளி அந்தப் படங்களுக்கு அழகாக வர்ணம் கொடுத்தான்.

மறுநாள் தலைமை ஆசிரியரிடம் மாலா, நீலா, முரளி மூவரும் நாடகத்தை எடுத்துச் சென்று காட்டினர். நாடகத்தைப் படிக்கப் படிக்கத் தலைமை ஆசிரியருக்கு மகிழ்ச்சியாக இருந்தது. வியப்பாகவும் இருந்தது. " மாலா! மிக அருமையாக இருக்கிறது இவ்வளவு தூரம் ஒரு சிறு பெண் எழுதுவாள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை" என்றார்.

" சார், சார், நீலா எழுதிய கதையைத்தான் நான் நாடகமாக எழுதினேன். என் ஐடியா எதுவுமே இல்லை, சார் !"

" நீலா, நீ மிக அழகாகக் கதை எழுதியிருக்கிறாய். மாலா அதை மிக அழகாக நாடகமாக்கியிருக்கிறாள் . ...ஒரு சில இடங்களில் கொஞ்சம் திருத்தினால் இன்னும் பிரமாதமாகிவிடும். யாரும் குறை சொல்ல முடியாது. நான் இன்று இரவே திருத்தி வைக்கிறேன் " என்றார் தலைமை ஆசிரியர்.

அந்த நாடகம் அந்த வட்டாரத்திலேயே பெரிய பரபரப்பை உண்டாக்கப் போகிறது என்பது அப்போது அந்தத் தலைமை ஆசிரியருக்கோ முரளி, அல்லது நீலா, மாலா ஆகியோருக்கோ தெரியாது !



# 9. பொன் மனம் நாடகம்

"நீலா! நீலா!"

குரல் கேட்டு நீலா குடிசைக்குள்ளிருந்து ஓடி வந்தாள். எதிரே மாலாவும் முரளியும் நிற்பதைக் கண்டதும், "என்ன மாலா! உன் பாட்டி வீட்டுக்குத்தான் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். அதற்குள்ளே நீங்கள் வந்துவிட்டீர்களே!" என்றாள்.

"நாம் கொடுத்த நாடகத்தை இரவே திருத்தி வைப்பதாக ஹெட்மாஸ்டர் சொன்னாரே, இந்நேரம் திருத்தி வைத்திருப்பார், இல்லையா? அவர் வீடு இங்கிருந்து பக்கம் தானே! அதனாலேதான் நாங்கள் இங்கே வந்துவிட்டோம். வா, போகலாம்" என்றாள் மாலா.

மூவரும் புறப்பட்டுத் தலைமை ஆசிரியர் வீடு நோக்கிச் சென்றனர். அப்போது அவர் துண்டை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு வெளியே புறப்பட இருந்தார். நீலா, மாலா, முரளி மூவரையும் கண்டதும், "அடடே! நீங்களே வந்துவிட்டீர்

களா? நான் பரமசிவம் பிள்ளை வீட்டிற்குத்தான் புறப்பட்டுக் கொண்டிருந்தேன்'' என்றார்.

“சார், நாடகம் எப்படி சார் இருக்கிறது?'' என்று தயக்கத்துடன் கேட்டாள் மாலா.

“அதெல்லாம் இப்போது எதுவும் சொல்ல மாட்டேன். எல்லாரும் நேராக உன் தாத்தா வீட்டுக்குப் போவோம். அங்கே போய்ப் பேசலாம்'' என்று கூறி, நாடகத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். அவர் கூடவே மூவரும் சென்றார்கள்.

பரமசிவம் பிள்ளையின் வீட்டுக்குள் நுழைந்ததும், பார்வதி அம்மாளைத்தான் அவர்கள் முதலில் கண்டார்கள். உடனே தலைமை ஆசிரியர், “அம்மா, உங்கள் மாலாவும் நீலாவும் சேர்ந்து ஒரு நாடகம் தயாரித்திருக்கிறார்கள்: அடடா! அடடா! அடடா!'' என்று ஒரேயடியாகப் புகழ்ந்தார்.

“அப்படியா!'' என்று ஆனந்தம் பொங்கக் கேட்டாள் பார்வதி அம்மாள்.

“அப்படியானால் இந்த நாடகத்தைப் பிரமாதமாக நடத்திவிட வேண்டியதுதான்'' என்று கூறிக்கொண்டே அங்கு வந்தார் பரமசிவம் பிள்ளை.

அன்று மாலையே மாங்குயில் சிறுவர் சங்கச் செயற்குழு மாமரத்தடியில் கூடியது. நாடகத்தில் யார் யாரை எந்த எந்தப் பாத்திரத்தில் நடிக்கச் செய்தால் நாடகம் சிறப்பாக இருக்கும் என்று ஆலோசனை செய்தார்கள்.

"சார்! இந்த நாடகத்திலே நான் திருடனுக நடிக்கட்டுமா சார்?" என்று கூட்டத்துக்குத் தலைமை வகித்த தலைமை ஆசிரியரைக் கேட்டான் முரளி.

"சார், பொன்னியாக நடிப்பதற்கு நான் ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன் நீங்கள் சரியென்று சொன்னால்..." என்று மாலா கூறுவதற்குள்,

"யார் அந்தப் பெண்?" என்று தலைமை ஆசிரியர், நீலா, முரளி மூவரும் ஒரே சமயத்தில் கேட்டனர்.

"நம் நீலாதான்" என்று சிரித்துக்கொண்டே கூறினாள் மாலா.

"நல்ல வேளை! வேறு யாரையாவது சொல்லப் போகிறாயோ என்று நினைத்தேன்" என்றார் தலைமை ஆசிரியர்.

"எந்த வேஷம் கொடுத்தாலும், என்ன வேலை சொன்னாலும், என்னாலே முடிந்த வரையில் செய்கிறேன்" என்று அடக்கமாகப் பதிலளித்தாள் நீலா.

"நாடகத்துக்கு என்ன பெயர் வைக்கலாம்?" என்று கேட்டார் தலைமை ஆசிரியர்.

" 'திருந்திய திருடன்' என்று பெயர் வைக்கலாம் சார்" என்றான் மணி.

“அவ்வளவு நன்ருக இல்லையே! செல்வி, நீ ஒரு பெயர் சொல்லம்மா. சங்கத்துக்கு அழகான பெயர் வைத்தவளல்லவா நீ” என்ருர் தலைமை ஆசிரியர்.

அவள் யோசித்து யோசித்துப் பார்த்தாள். நல்ல பெயராகத் தோன்றவில்லை.

“ ‘பொன் மனம்’ என்று பெயர் வைக்கலாமா, சார்?” என்று கேட்டாள் நீலா.

“ஆ! நல்ல பெயர்! பொன் மனம்! பொன்னைக் கொள்ளையிட வந்தவன், செல்வந்தரின் பொன் மனத்தை அறிந்துதானே திருந்துகிருன்! அதனுல் ‘பொன் மனம்’ மிகவும் பொருத்தமான பெயர். இதையே வைத்து விடலாமா?” என்று மற்றக் குழந்தைகளைப் பார்த்துக் கேட்டார், தலைமை ஆசிரியர்.

“சரி சார். அப்படியே வைத்து விடலாம்” என்று எல்லாரும் ஆமோதித்தார்கள்.

“சரி, ‘பொன் மனம்’ நாடகத்தில் உடனே பத்துப் பிரதிகள் எடுத்து, நடிக்கப் போகிற ஒவ்வொருவரிடமும் ஒரு பிரதியைக் கொடுக்கலாம். ஒவ்வொருவரும் அவரவர் பேசவேண்டியதை இரண்டு நாளைக்குள் மனப்பாடம் செய்துவிட வேண்டும். நான் இன்றிரவு தஞ்சாவூர் போகிறேன். நாளை மறுநாள் திரும்பி விடுவேன்” என்ருர் தலைமை ஆசிரியர்.

பள்ளிக்கூடத்தில் ஆண்டுக்கு ஒரு முறை நாடகம் நடக்கும். அந்த நாடகங்களில் முரளிக்குச் சிறு சிறு வேஷம்தான் கொடுப்பார்கள். ஆனாலும் நாடகம் சம்பந்தமாக எந்த வேலை கொடுத்தாலும் ஆர்வத்தோடு செய்வான். அதனால் அவனுக்கு டைரக்ஷன், ஒப்பனை, காட்சி அமைப்பு, ஒலி ஒளி அமைப்பு எல்லாவற்றிலும் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். அந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு மற்றக் குழந்தைகளுக்கு அவன் எப்படி எப்படி நடிக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தான்.

மூன்றும் நாள் காலையில், நாடக ஒத்திகை மாமரத்தடியில் நடந்து கொண்டிருந்தது. பரம சிவம் பிள்ளையும் மற்றக் குழந்தைகளும் அதைப் பார்த்துச் சுவைத்துக் கொண்டிருந்தார்கள். அப் போது தஞ்சாவூர் போயிருந்த தலைமை ஆசிரியர் அங்கே வந்தார். உடனே ஒத்திகையை நிறுத்தி விட்டு, "வணக்கம் சார், வணக்கம் சார்" என்று எல்லாரும் கைகூப்பி வரவேற்றார்கள். உடனே அவர், "ஏன் ஒத்திகையை நிறுத்தி விட்டீர்கள்? உம், நடத்துங்கள்" என்றார்.

தொடர்ந்து ஒத்திகை நடந்தது. குழந்தைகள் திக்கவில்லை; திணறவில்லை. நன்றாக மனப்பாடம் செய்திருந்ததால் அழகாகப் பேசினார்கள்; கூச்ச மில்லாமல் உணர்ச்சியோடு நடித்தார்கள்.

"இவ்வளவு நன்றாகச் செய்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. இதெல்லாம் உங்

களது அளவில்லாத ஆர்வத்தையே காட்டுகிறது,'' என்று மகிழ்ச்சியோடு கூறினர் தலைமை ஆசிரியர்.

''சார்! இவ்வளவு தூரம் எங்களுக்கு நடிக்கக் கற்றுக் கொடுத்ததே முரளிதான் சார்'' என்ருள் நீலா.

''அப்படியா! சரி, 'கதை—நீலா, நாடக அமைப்பு —மாலா, டைரக்ஷன்—முரளி' என்று விளம்பரப் படுத்த வேண்டியதுதான்'' என்ருர் தலைமை ஆசிரியர்.

உடனே மற்றக் குழந்தைகள் எல்லாரும் ''ஆமாம் சார், அப்படியே செய்துவிடலாம்'' என்று குதித்துக்கொண்டே கூறினர்கள்.

ஐந்தாம் நாள் ஒத்திகை நடந்தபோது, பரமசிவம் பிள்ளை தலைமை ஆசிரியரிடம், ''சார்! இந்த நாடகத்தை இந்த மாமரத்தடியிலே மேடை போட்டு நடத்த வேண்டுமென்றுதானே நினைத் தோம்? அது கூடாது. பிள்ளைகளெல்லாம் இவ் வளவு அருமையாக நடிக்கும்போது, இந்தச் சின்ன இடத்திலே நடத்துவது சரியில்லை. மாரியம்மன் கோயில் முன்னலே இருக்கிறதே திறந்தவெளி அரங்கம், அங்கேதான் இதை நடத்த வேண்டும்'' என்ருர்.

''நல்ல யோசனைதான். ஆனல், இருநூறு, முந்நூறு செலவாகுமே!''

''ஐந்நூறு ரூபாய் செலவாகட்டுமே! நான் தரு கிறேன். இப்படி ஒரு நல்ல நாடகத்தை நம் ஊர்

ஜனங்கள் மட்டுமில்லே; சுற்றுப்புறத்து ஊர் ஜனங்களும் வந்து பார்த்து மகிழவேண்டும்.''

உடனே அங்கிருந்த குழந்தைகள் கைதட்டி அந்த யோசனையை வரவேற்றனர்.

''அப்படியானுல், நாம் உடனே அமரபுரம் போய், நாடகம் நடத்துவதற்குப் போலீஸ் அனுமதி வாங்க வேண்டும். மைக், லேட், மேக்-அப் எல்லாவற்றுக்கும் ஏற்பாடு செய்யவேண்டும். வேதமுனி கம்பெனியிலே சொல்லி நாடக சீன்களையும் கொண்டுவரச் சொல்லவேண்டும்'' என்ருர் தலைமை ஆசிரியர்.

''சார், நாம் இருவரும் நாளையே புறப்பட்டுச் சென்று எல்லா ஏற்பாடுகளையும் செய்து விடுவோம்......ஆமாம், நாடகத்தை எந்தத் தேதியில் வைத்துக் கொள்ளலாம்?'' என்று கேட்டார் பரமசிவம் பிள்ளை. அவருக்கு அளவு கடந்த உற்சாகம். அந்த உற்சாகத்தில் அவர் இருபது வயது இளைஞரைப் போலத் தோன்றிஞர்.

''நாங்கள் புறப்படுவதற்கு இரண்டு நாட்கள் முன்னுலே வைத்துக் கொண்டால் நல்லது'' என்ருள் மாலா.

''சரி, நீங்கள் அடுத்த மாதம்—அதாவது ஜுன் 10-ஆம் தேதி தானே புறப்படுகிறீர்கள்? 8-ஆம் தேதி வெள்ளிக்கிழமை நாடகத்தை நடத்தி விடலாமா?'' என்று கேட்டார் பரமசிவம் பிள்ளை.

"வெள்ளிக்கிழமை பொருத்தமான நாள். அது மட்டுமில்லே. அதற்கு முதல் நாள்—வியாழக் கிழமை அமரபுரத்திலே சந்தை கூடும். அங்கே விளம்பரம் செய்தால், நிறையப் பேர் நாடகம் பார்க்க வருவார்கள்" என்றுர் தலேமை ஆசிரியர்.

நாடகத்துக்கான ஏற்பாடுகளெல்லாம் மும்முரமாக நடந்தன.

நாடகத்துக்கு அனுமதி வாங்கப் போனபோது சப்-இன்ஸ்பெக்டர் சதாசிவம், "நீங்கள் நடத்தப் போகிற நாடகத்திலே ஒரு பிரதி கொண்டு வந்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

தலேமை ஆசிரியர் தயாராகக் கையில் வைத்திருந்த ஒரு பிரதியை அவரிடம் கொடுத்தார். "நாளேக் காலேயில் யாரையாவது அனுப்புங்கள். அதற்குள் கதையைப் படித்துப் பார்க்கிறேம். ஆட்சேபகரமான விஷயம் எதுவும் இல்லேயென்றல் உடனே அனுமதி கொடுத்து விடுவோம்" என்றுர் சப்-இன்ஸ்பெக்டர்.

மறுநாள் காலேயில் தலேமை ஆசிரியரே சப்-இன்ஸ்பெக்டரைப் பார்க்கச் சென்றுர். அவரைப் பார்த்ததும், "நாடகம் மிக நன்ருக இருக்கிறது. இவ்வளவு நன்ருக எழுதிய உங்களே எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லே" என்றுர் அவர்.

"அடடே, இதை எழுதியவன் நான் அல்ல. நீலா என்ற சிறுமி கதை எழுதினுள். மாலா என்ற

சிறுமி அதை நாடகமாக்கினுள். உங்கள் பாராட்டை அந்தச் சிறுமிகளிடம் சொல்லுகிறேன்."

"அப்படியா! சரி, அன்று நாடகம் நடத்தும் இடத்துக்கு நாலைந்து போலீஸ்காரர்களை அனுப்பி வைக்கிறேன். ஜனங்களை ஒழுங்காக உட்கார வைக்க, அமைதி காக்க அவர்கள் உதவுவார்கள்."

"மிகவும் நன்றி. நாடகம் பார்க்க நீங்களும் அவசியம் வரவேண்டும். நீங்கள் வந்தால் குழந்தைகளுக்கு மகிழ்ச்சியாக இருக்கும்."

"வரப் பார்க்கிறேன். நாடகம் வெற்றி பெற என் நல்வாழ்த்துக்கள்." என்று கூறி, சப்-இன்ஸ்பெக்டர் சதாசிவம், தலைமை ஆசிரியரின் கையைப் பிடித்துக் குலுக்கி விடை கொடுத்தார்.

பெரிய பெரிய தட்டிகளிலும் அட்டைகளிலும் நாடக விளம்பரங்களை எழுதினுர்கள். மாலாவுக்குத் துணையாகப் பள்ளிக்கூட டிராயிங் மாஸ்டரையும் தலைமை ஆசிரியர் அனுப்பி வைத்திருந்தார். இருவரும் அழகாக விளம்பரங்களை எழுதினுர்கள். முரளி கவர்ச்சியாக வர்ணம் தீட்டினுன். பல வண்ணங்களில் தயாரான அந்த விளம்பரத் தட்டிகளும் அட்டைகளும் பூங்குடியிலும் சுற்றுப்புற ஊர்களிலும் உள்ள மரங்களிலும், பஸ் ஸ்டாண்ட், கடை வீதி போன்ற இடங்களிலும் காட்சி அளித்தன.

அமரபுரத்தில் சந்தை கூடும் இடத்தின் முகப்பிலே இருந்த விளம்பரத்தைப் பார்க்காமல் யாரும் உள்ளே போக முடியாது! நண்பர்களுடன் சைக்

கிளில் ஏறி ஊர் ஊராகச் சென்று இப்படியெல்லாம் விளம்பரப் படுத்தியவன் முரளி'தான்! தலைமை ஆசிரியர் சொன்னது போல், 'கதை-நீலா, நாடக அமைப்பு-மாலா, டைரக்ஷன்-முரளி' என்று எல்லா அட்டைகளிலும் விளம்பரப் படுத்தப்பட்டது.

சிறுவர்களே இந்த நாடகத்தை நடத்து கிறார்கள் என்பதைக் கேட்டுச் சுற்றுப்புறத்து ஊர்களிலுள்ள குழந்தைக ளெல்லாம் தங்கள் பெற்றோருடன் நாடகம் பார்க்க வந்துவிட்டார்கள். அவ்வளவு பெரிய கூட்டத்தை மாரியம்மன் கோவில் திருவிழாவில்—அதுவும் ஒன்பதாம் திரு விழாவில்தான்—காணலாம்.

நாடகம் தொடங்கியது. ஒவ்வொரு காட்சி யையும் கூடியிருந்தோர் மிகவும் சுவைத்தார்கள்; பாராட்டினார்கள்; பலமுறை கைதட்டி மகிழ்ச்சி யைத் தெரிவித்தார்கள்.

நாடகத்தில் பதினோரு காட்சிகள் முடிந்து விட்டன. இதோ பன்னிரண்டாவது காட்சி.

மேடையில் ஒரு பங்களாவின் ஒரு பகுதி தெரி கிறது. அங்கே மங்கலாகத் தெரியும் விளக்கு ஒளியில், ஓர் உருவம் அடிமேல் அடிவைத்துப் பூனைபோல் நடந்து வருகிறது. சுற்றுமுற்றும் பார்க்கிறது. கட்டிலில் படுத்திருக்கும் வீட்டுக் காரரைக் கண்டதும், அருகிலே செல்கிறது. தலை யணைக்கு அடியிலே மெதுவாகக் கையைக் கொடுத் துத் தடவிப் பார்க்கிறது. ஒன்றும் அகப்பட வில்லை. அப்போது வீட்டுக்காரர் விழித்துக் கொள்

கிறார். "திருடன்! திருடன்!" என்று கூச்சலிடு கிறார்.

"ஏய், வாயை மூடு. பேசாமல் பெட்டிச் சாவி யைக் கொடு. இல்லை, இதோ பார்..." என்று கையி லிருக்கும் கூர்மையான கத்தியைக் காட்டுகிறான், அந்தத் திருடன்.

"பெட்டிச் சாவி என்னிடம் இல்லையே!" என் கிறார் வீட்டுக்காரர்.

"ஏய், பொய்யா சொல்கிறாய்? இதோ உண் மையைக் கக்க வைக்கிறேன், பார்" என்று கூறி அவரது நெஞ்சுக்கு நேராகத் திருடன் கத்தியைக் காட்டுகிறான். "எங்கே பெட்டிச் சாவி?" என்று மீண்டும் மிரட்டுகிறான்.

"இதோ பெட்டிச் சாவி. அவரை ஒன்றும் செய்யாதே!" என்று கூறிக்கொண்டே அடுத்த அறையிலிருந்து ஒரு சிறுமி ஓடிவருகிறாள்.

'அனாதையான என்னைச் சொந்த மகளைப் போல வளர்த்து வருகிறார் இந்த உத்தமர். இவரைக் கொன்று திரும்பவும் என்னை அனாதை ஆக்கி விடாதே!" என்று கெஞ்சுகிறாள் அச்சிறுமி.

அவள் குரலைக் கேட்ட திருடன் திடுக்கிடு கிறான். தன் பைக்குள்ளிருந்த டார்ச் விளக்கை எடுத்து அவள் முகத்துக்கு நேராகப் பிடிக்கிறான். விளக்கு வெளிச்சத்தில் அவளைப் பார்த்ததும், "ஆ! என் பொன்னியா! பொன்னம்மா!" என்று கூறிக் கையிலிருந்த டார்ச்சையும், கத்தியையும் கீழே

போட்டுவிட்டுச் சிறுமியின் அருகே ஓடுகிறுன். அவளை அப்படியே கட்டி அணைத்து, இரு கன்னங்களிலும் மாறிமாறி முத்தம் கொடுககிறுன்.

அப்போது வீட்டுக்காரர் சுவிட்சைப் போடுகிறுர். விளக்கு பளிச்சென்று எரிகிறது. வெளிச்சத்தில், தன் முகத்தைக் காட்டவே திருடனுக்கு வெட்கமாக இருக்கிறது. தலையைக் கீழே தொங்கப் போட்டுக்கொண்டு, முகத்தை மூடிக் கொள்கிறுன்.

"அப்பா! இன்னும் இந்தத் தொழிலை விடவில்லையா? இந்தத் திருட்டுத் தொழிலால்தானே நான் என் அம்மாவைப் பறிகொடுத்தேன்!" என்று கண் கலங்க அச்சிறுமி கூறுகிறுள்.

"என்ன! உன் அம்மாவைப் பறி கொடுத்து விட்டாயா?" என்று பதற்றத்துடன் நிமிர்ந்து பார்த்துக் கேட்கிறுன் திருடன்.

"ஆமாம், இரண்டு வருஷத்துக்கு முன்னுலே, உங்களைப் போலீஸ்காரர்கள் பிடித்துப் போனுர்களே, அதற்கப்புறம் அம்மா அதே கவலையிலே நோயாய்ப் படுத்து விட்டார்கள். இதோ நீங்கள் கொல்லப் போனீர்களே, இவர்கள் கட்டி வைத்த தரும ஆஸ்பத்திரியிலேதான் அம்மா பத்து நாள் படுக்கையிலே இருந்தார்கள். எவ்வளவோ மருந்து கொடுத்தும், எவ்வளவோ கவனமாகப் பார்த்தும் அம்மா பிழைக்கவில்லை. செத்துப் போனுர்கள். பெரிய டாக்டரம்மாவுக்கு என மேலே மிகவும் பிரியம். நான் அநாதையாகப் போன விவரத்தை டாக்டரம்மா இவர்களிடத்திலே சொன்னுர்கள்.

இவர்கள் உடனே என்னை இங்கே அழைத்துவந்து சொந்த மகள் மாதிரியே வளர்க்கிறார்கள். பெட்டிச் சாவியைக்கூட என்னை நம்பித் தந்து வைத்திருக்கிறார்கள். இதோ சாவி. உம், பிடியுங்கள்."

இதைக்கேட்டதும் திருடனின் கண்களில் பொல பொலவென்று கண்ணீர் வழிகிறது. திடீரென்று வீட்டுக்காரரின் காலில் அவன் விழுகிறான். பிறகு, "ஐயா, என்னை மன்னித்து விடுங்கள். இனிமேல் நான் திருடமாட்டேன்; ஊரை ஏமாற்றமாட்டேன்; உழைத்துப் பிழைப்பேன். என் பெண்ணைக் காப்பாற்றின உங்கள் வீட்டிலேயே நான் கொள்ளையடிக்க வந்தேனே! உங்களைக் கொல்வதாக மிரட்டினேனே! உங்கள் பொன் மனதை அறியாமல் உங்கள் வீட்டிலே பொன் திருட வந்துவிட்டேன். உங்கள் பொன் மனம் என்னைத் திருத்தி விட்டது. என் பொன்னியும் என்னை திருத்தி விட்டாள். நான் அடியோடு திருந்தி விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்று அவர் காலடியில் உட்கார்ந்தபடியே அழுகிறான். அவன் சிந்தும் கண்ணீர் அவரது பாதத்தைக் கழுவுகிறது.

உள்ளத்தை உருக்கும் இக்காட்சியை மெய் மறந்து மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போது, திடீரென்று எங்கிருந்தோ ஒரு சாமியார் மேடைக்கு ஓடி வந்தார். சடை முடியும், நீண்ட தாடியும், காவி உடையும் அணிந்திருந்த அவர் தம்முடைய தாடியைப் பிடித்து இழுத்தார். அது தனியாக வந்து விட்டது! சடை முடியையும் தனியாகக்

கழற்றினர். இரண்டையும் தூக்கி எறிந்துவிட்டு மேடையிலே நின்ற அவரை, எல்லாரும் உற்றுப் பார்த்தார்கள். நல்ல உயரம், பயில்வான் போல உறுதியான உடல், முறுக்கு மீசை, பரட்டைத் தலை, இவற்றுடன் அவனைக் கண்டதும் மக்கள் திடுக்கிட்டனர்.

"நான் தான் சங்கிலியாண்டி!" என்றான் அவன்.

"ஆ! சங்கிலியாண்டியா!"

"ஐயோ! பொல்லாத கொள்ளைக்காரனல்லவா!"


"பெரிய கொலைகாரன்!"

"இவன் ஜெயிலிலிருந்து தப்பி ஓடிவிட்டதாகப் பேப்பரிலே வந்ததே!"

"இங்கே எப்படி வந்தான்? ஏன் வந்தான்?"

இதுமாதிரிப் பலரும் திகிலுடன் கூச்சலிட்டார்கள். மேடைக்கு அருகிலிருந்த பலர், அலறியடித்துக் கொண்டு, 'தப்பித்தோம்; பிழைத்தோம்' என்று ஓடலானார்கள்.

ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது. அடுத்து என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ என்ற பயத்துடன் எல்லாரும் இருந்த இடத்தைவிட்டு எழுந்து நின்றனர்.



# 10. சங்கிலியாண்டி சரண் அடைந்தான்!

நாடகம் பார்க்க வந்தவர்கள் நடு நடுங்கி நின்ற போது, சங்கிலியாண்டி தலை குனிந்து எல்லாருக்கும் வணக்கம் செலுத்தினான். பிறகு, ஒலி பெருக்கியின் முன்னால் வந்து நின்றுகொண்டு பேசினான்: “என்னைப் பார்த்து யாரும் பயப்பட வேண்டாம். கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி வரை, நான் கொள்ளைக்காரனாகத்தான் இருந்தேன்; கொலைகாரனாகத்தான் இருந்தேன். இப்போது இந்த நாடகத்தைப் பார்த்த பிறகு, என் மனசு அடியோடு மாறிவிட்டது.”

சங்கிலியாண்டியின் பேச்சை ஒருவருமே நம்பவில்லை.

“உங்களுக்கு நம்பிக்கை வராது. ஆனால், சத்தியமாகச் சொல்கிறேன். இந்த ஊர் மாரியம்மனுக்குப் பொதுவாகச் சொல்கிறேன். நான் பழைய சங்கிலியாண்டி இல்லை. இந்தப் பிள்ளைகள் போட்ட நாடகம் என்னைத் திருத்தி விட்டது”

ஒரு பிரபல கொள்ளேக்காரன், பொல்லாத கொலேகாரன், சிறுவர்களின் நாடகத்தைப் பார்த்துத் திருந்தி விடுவாஞ? அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லே.

"தயவு பண்ணி எல்லாரும் உட்காருங்கள். நான் சொல்லப் போகிறதைப் பெரிய மனசு பண்ணிக் கேளுங்கள்" என்ருன் திருடன்.

அப்போதும் சத்தம் அடங்கவில்லே. மக்கள் உட்காரவும் இல்லே. உடனே பரமசிவம் பிள்ளேயும், தலேமை ஆசிரியர் தணிகாசலமும் மேடைக்கு வந்தார்கள். பாதுகாப்புக்காக வந்த போலீஸ்காரர்களும் மேடையை நோக்கிச் சென்ருர்கள். மூலேக்கு ஒருவராக உஷாராக நின்று கொண்டார்கள்.

"தயவு செய்து உட்காருங்கள். சங்கிலியாண்டி ஏதோ சொல்லப் போகிருனும். என்னதான் சொல்கிருன் என்று பார்ப்போமே!" என்ருர் பரமசிவம் பிள்ளே.

"ஆமாம், அமைதியாக உட்காருங்கள்" என்ருர் தலேமை ஆசிரியர் தணிகாசலமும்.

பிறகுதான் எல்லாரும் அமைதியாக உட்கார்ந்தார்கள். சங்கிலியாண்டி என்ன சொல்லப் போகிருன் என்று ஆவலுடன் எதிர்பார்த்தார்கள்.

"இந்த வட்டாரத்திலே என் பெயர் எல்லாருக்கும் தெரிந்திருக்கும். எல்லாரும் நல்ல பெயர் எடுக்கப் பாடுபடுவார்கள். நானே கொலேகாரன்,

கொள்ளைக்காரன் என்று பெயர் எடுத்து விட்டேன். பத்து வருஷமாகப் போலீஸ்காரர்களுக்கு அகப் படாமலே இருந்த நான், போன வருஷம் சரியாக மாட்டிக்கொண்டேன். எனக்கு ஆயுள்தண்டனை கொடுத்தார்கள். ஆனால், ஆறு மாதத்திற்கு முன்னாலே ஜெயிலிலிருந்து தப்பி ஓடி வந்துவிட் டேன். பிறகு என்ன என்னவோ வேஷமெல்லாம் போட்டுக்கொண்டு ஊர் ஊராகச் சுத்தினேன். ஆனால், திருட்டுத் தொழிலை மட்டும் விடவில்லை. இங்கே நாடகம் நடக்கிறதைக் கேள்விப்பட்டுச் சாமியார் வேஷத்திலே இங்கு வந்தேன். கூட்டத் தோடு கூட்டமாக ஒரு மூலையில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தேன். நாடகத்திலே வந்த சில காட்சிகளைப் பார்த்து அப்படியே உருகிப் போனேன். என் இரும்பு மனசை இளக வைத்து விட்டது இந்தக் குழந்தைகள் போட்ட நாடகம்.''

சங்கிலியாண்டி இதைச் சொன்னபோது, அவன் தொண்டை அடைத்தது. கண்கள் கலங்கின

''போன மாதம் நான் ஒரு வீட்டுக்குத் திருடப் போனேன். பீரோவை உடைத்துப் பணப் பெட்டியை எடுக்கப் போன சமயம், வீட்டுக்காரர் விழித்துக்கொண்டார். 'ஐயோ! திருடன்! திருடன்!' என்று கத்தினார். உடனே நான் பிச்சுவாக் கத்தியை அவருடைய நெஞ்சுக்கு நேரே கொண்டு போனேன். அப்போது ஏழு வயதான அவருடைய பெண் ஓடி வந்து, 'ஐயோ, அப்பாவை எதுவும்

செய்திடாதே. என் அம்மா செத்துப் பத்து நாள் கூட ஆகவில்லை. அப்பாவையும் கொன்று விடாதே' என்று கதறிக் கதறி அழுதது. நான் அதை எவ்வளவோ மிரட்டிப் பார்த்தேன். அது சத்தம் போடுவதை நிறுத்தவில்லை. ஆத்திரத்திலே அந்தச் சின்னப் பெண்ணை நான்....நான்... நான்.... என் கத்தியாலே கொஞ்சம்கூட ஈவு இரக்கம் இல்லாமல் குத்திக் கொன்றுவிட்டுப் பணப் பெட்டியோடு தப்பி வந்துவிட்டேன். ஒரு பாவமும் அறியாத அந்தச் சிறுமியைக் கொன்றதற்குக் கடவுள் என்னை நன்ருகத் தண்டித்து விட்டார்."

சங்கிலியாண்டி சற்று நிறுத்தினுன்; கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டான்; பிறகு தொடர்ந்தான்:

"மறு நாள் குடுகுடுப்பைக்காரன் வேஷத்திலே சங்கரம்பட்டிக்குப் போனேன். நான் ஜெயிலுக்குப் போனபோது, அந்த ஊரிலேதான் என் சம்சாரமும், என் ஒரே மகள் மீனுவும் ஒரு வீட்டிலே இருந்தார்கள். ஆனுல், நான் போனபோது அந்த வீட்டில் யாருமே இல்லை. அக்கம் பக்கத்திலே விசாரித்துப் பார்த்தேன். என் ஏழு வயது மகள் மீனு பத்து நாட்களாய்க் காய்ச்சலாய்க் கிடந்தாளாம். சாப்பாட்டுக்கே வழியில்லாமல் என் சம்சாரம் தவித்துக் கொண்டு இருந்தாளாம். பெண்ணுக்கு மருந்து வாங்க அவள் எங்கே போவாள்? காய்ச்சல் அதிகமாகி என் மீனு—என் அருமை மகள் மீனு .. கண்ணை மூடி விட்டாளாம்...நான் ஒரு சிறுமியைக்

கொலே பண்ணினேன். அதற்குப் பதிலாக என் மகளேப் பறிகொடுத்து விட்டேன்...என் மகளே மட்டும் பறிகொடுக்கவில்லே. கூடவே, என் சம் சாரத்தையும் பறிகொடுத்து விட்டேன். மகள் இறந்த துக்கம் தாங்காமல் அவளும் நஞ்சைத் தின்று செத்துப் போய் விட்டாளாம்...பாவம், தன் புருஷன் கொள்ளேக்காரனுக, கொலேகாரனுக இருந்தால், எந்தப் பெண்பிள்ளேயாலே நாலு பேருக்கு நடுவே நிம்மதியாக, கௌரவமாக வாழ முடியும்? என் குடும்பமே அழிந்து போய்விட்டது! பெற்ற குழந்தையையும் கட்டின மனேவியையும் கடைசி நிமிஷத்திலேகூடப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லே. நான் எத்தனேயோ பேரை அழ வைத் தேன். அலற வைத்தேன்; குத்திக் காயப்படுத்தி னேன்; கொலே பண்ணினேன். கடவுள் கொடுத்த கையும் காலும் நன்ருக இருந்தும், நான் உழைத்துப் பிழைக்கவில்லே. ஊரைக் கொள்ளேயடித்துப் பிழைத்தேன் .. ஏராளமான பணத்தைக் கொள்ளே யடித்தேன். ஆனுல், நான் கொள்ளேயடித்த பணத்திலே ஒரு காசுகூட, சாகக் கிடந்த என் மகளுக்கு மருந்து வாங்கப் பிரயோசனப்படவில்லே. ஐயோ ...!''

தலேமயிரைப் பிடித்துக்கொண்டு சங்கிலி யாண்டி அழுதான். தாரை தாரையாக அவன் கண்களிலிருந்து நீர் வழிந்தது. துக்கம் தொண் டையை அடைக்க, அவன் மேலும் சொன்னுன்:

"இந்த நாடகம் என்னைத் திருத்தி விட்டது. என்னைத் திருத்தவே இந்த நாடகத்தைப் போட்ட மாதிரி இருந்தது. இதிலே வந்த பொன்னி, நான் குத்திக் கொன்றேனே அந்தப் பெண், என் மகள் மீனு மூன்று பேரும் மாறி மாறி என் முன்னாலே வந்து, 'நீயும் ஒரு அப்பனா? நீயும் ஒரு அப்பனா?' என்று கேட்கிற மாதிரி இருக்கிறது. நான் இன்றைக்கே இந்தத் திருட்டுத் தொழிலுக்கு முழுக்குப் போட்டு விட்டேன். ஜெயிலிலேயிருந்து தப்பித்து வந்த நான், திரும்பவும் ஜெயிலுக்கே



போகப் போகிறேன். ஐயா, போலீஸ்காரர்களே, இதோ நான் சரண்அடைந்து விட்டேன். என்னைக் கைது செய்யுங்கள்.''

சங்கிலியாண்டி இப்படிக் கூறிக் கொண்டிருக்கும் போதே மேடையின் ஓர் ஓரமாக ஒரு ஜீப் வந்து நின்றது. அதிலிருந்து போலீஸ் அதிகாரி இறங்கினார். நாடகம்தான் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது என்று அவர் நினைத்தார். அவர் ஜீப்பிலிருந்து இறங்குவதைக் கண்டதும், தலைமை ஆசிரியர், "அதோ சப்-இன்ஸ்பெக்டர் சதாசிவமே வந்துவிட்டார்?'' என்று கூறிக்கொண்டே மேடையிலிருந்து இறங்கி அவர் அருகே ஓடினார். நடந்ததைச் சுருக்கமாகச் சொல்லி அவரை மேடைக்கு அழைத்து வந்தார்.

சப்-இன்ஸ்பெக்டர் சதாசிவத்தை மேடையில் கண்டதும், சங்கிலியாண்டி அவருக்கு வணக்கம் செலுத்திவிட்டு, இரு கைகளையும் அவர் முன் நீட்டினான்.

உடனே சப்-இன்ஸ்பெக்டர் அங்கிருந்த போலீஸ்காரர்களை அழைத்தார். அவர்கள் சங்கிலியாண்டியின் இரு கைகளிலும் விலங்கை மாட்டினார்கள். அப்போது சப்-இன்ஸ்பெக்டர், "எங்கே, நாடகத்தில் நடித்த குழந்தைகள் ?'' என்று கேட்டார்.

"அதோ வருகிறார்கள்'' என்றார் பரமசிவம் பிள்ளை. நீலா, மாலா, முரளி இன்னும் நாடகத்

தில் நடித்த குழந்தைகள் எல்லாரும் எங்கிருந்தோ மேடையை நோக்கித் துள்ளிக் குதித்துக்கொண்டே வேகமாக வந்தார்கள்.

அப்போது பரமசிவம் பிள்ளை, "சப்-இன்ஸ்பெக்டர் சார்! மேடைக்குச் சங்கிலியாண்டி வந்ததும் எல்லாரும் பயந்து போனோம். ஒரு வேளை, இந்த நாடகம் தன்னைத்தான் குத்திக் காட்டுகிறது என்று அவன் நினைத்துவிட்டால்.... ? ஒரு பாவமும் அறியாத இந்தக் குழந்தைகளை அவன் என்ன செய்வானோ என்று பயந்து விட்டேன். ஸ்கூல் டிராயிங் மாஸ்டரிடத்திலே சொல்லிக் குழந்தைகளையெல்லாம் பின்பக்கமாக அழைத்துப்போக ஏற்பாடு செய்தேன். சிறிது தூரத்திலே என் தங்கை வீடு இருக்கிறது. அங்கேதான் இவர்கள் எல்லாம் இருந்தார்கள். உண்மையிலேயே சங்கிலியாண்டி திருந்தி விட்டான் என்று தெரிந்தவுடனே, ஆள் அனுப்பி அழைத்துவரச் சொன்னேன். அதற்குள்ளே நீங்களும் வந்து சேர்ந்து விட்டீர்கள்."

சப்-இன்ஸ்பெக்டர் சதாசிவம் குழந்தைகள் மத்தியிலே நின்று பேச ஆரம்பித்தார். ஒலி பெருக்கியில் அவரது பேச்சு கணீரென்று கேட்டது :

"பொதுமக்களே ! சங்கிலியாண்டி இங்கு தானாகச் சரண் அடைந்த நிகழ்ச்சி மிகவும் அபூர்வமானது; அதிசயமானது. இந்தச் சங்கிலியாண்டியைப் பிடிக்க எங்கள் போலீஸ் இலாகா எவ்வளவோ முயன்றது. இதற்காக நாங்கள் போகாத

ஊர் இல்லே; அலேயாத இடம் இல்லே. ஆனாலும், எப்படியோ எங்களுக்கெல்லாம் டிமிக்கி கொடுத்து வந்த சங்கிலியாண்டி இன்று தானாகவே சரண் அடைந்திருக்கிறான்! சங்கிலியாண்டி சரணடையக் காரணமாக இருந்ததே இந்த நாடகம்தான. இந்த நாடகத்தில் நடித்த அருமைக் குழந்தைகள்தான்.

"அன்றைக்கு இந்த நாடகத்தைப் படித்துப் பார்த்தபோதே, நான் மிகவும் மகிழ்ச்சி அடைந் தேன். திருடனைத் திருத்தும் இந்த நாடகம் போலீஸ் இலாகாவுக்கு உதவியாக இருக்கும் என்று கருதினேன். ஆனால், இவ்வளவு விரைவிலே பலன் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லே. நாடகத்தில் நடித்த எல்லாக் குழந்தைகளுக்கும் நான் போலீஸ் இலாகாவின் சார்பில் நன்றி சொல் கிறேன்."

"பொதுமக்கள் சார்பில் நான் நன்றி சொல் கிறேன்" என்று கூட்டத்திலிருந்த ஒருவர் உரக் கக் கூவினார்.

உடனே எல்லாரும் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்.

தொடர்ந்து பேசிய சப்-இன்ஸ்பெக்டர், "சென்ற மாதம் இந்தச் சங்கிலியாண்டி ஒரு சிறுமி யைக் கொன்று, பணத்தைக் கொள்ளேயடித்து விட்டான் என்பதை அறிந்ததும், இனி இவனே விட்டு வைக்கக்கூடாது என்று முடிவு கட்டினோம். மேல் அதிகாரிகளுக்கு எழுதினோம். சங்கிலியாண்

டியைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசு கொடுப்பதாக அறிவிக்கும்படி இன்று காலையில்தான் தகவல் வந்தது. அது சம்பந்த மாகத்தான் கலெக்டருடன் பேசிவிட்டு வந்தேன். பரிசை அறிவிப்பதற்கு முன்பே சங்கிலியாண்டி சரணாகதி அடைந்து விட்டான்! பரிசுத் தொகையை இந்தக் குழந்தைகளுக்கே அளிக்கும் படி மேல் அதிகாரிகளுக்கு நான் சிபார்சு செய்யப் போகிறேன். நிச்சயம் அளிப்பார்கள் என்று நம்பு கிறேன். இப்போது நாங்கள் சங்கிலியாண்டியை அமரபுரத்துக்குக் கொண்டு செல்கிறோம். இன்று இரவே மேல் அதிகாரிகளுக்குத் தகவல் கொடுப் போம். நாடகத்தில் நடித்த குழந்தைகளுக்கு மீண் டும் என் நல்வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன். வணக்கம்'' என்று கூறி நீலா, மாலா, முரளி ஆகியோருக்குக் கைகொடுத்துப் பாராட்டி னார். பிறகு மேடையைவிட்டுக் கீழே இறங்கினார்.

இரண்டு போலீஸ்காரர்கள் சங்கிலியாண்டி யைக் கொண்டுபோய் ஜீப்பின் பின்சீட்டில் நடுவே உட்கார வைத்து, ஆளுக்கு ஒரு பக்கமாக அமர்ந்து கொண்டார்கள். சப்-இன்ஸ்பெக்டர் சதாசிவம் முன் சீட்டில் உட்கார்ந்து கொண்டார். நாடகத்தில் நடித்த குழந்தைகள், பரமசிவம் பிள்ளை, தலைமை ஆசிரியர், பொதுமக்கள் எல்லாரும் அவர்களைக் குதூகலமாக வழியனுப்பி வைத்தார்கள். ஜீப் நக ரும்போது, விலங்கிட்ட கைகளைத் தூக்கித் தூக்கி எல்லாருக்கும் வணக்கம் செலுத்தினான் சங்கிலி யாண்டி.

ஜீப் மறைந்த பிறகு பொதுமக்கள் எல்லாரும் நீலா, மாலா, முரளி ஆகியோரை மிகவும் பாராட்டினார்கள். அப்போது அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை!

மறுநாள் காலை பரமசிவம் பிள்ளை வீட்டுக்கு முன்னால் போலீஸ் ஜீப் வந்துநின்றது. அதிலிருந்து டி.எஸ்.பி. (மாவட்டத் தலைமைப் போலீஸ் அதிகாரி) திருஞானம் இறங்கினார். அவருடன் கூட சப்-இன்ஸ்பெக்டர் சதாசிவமும், ஒரு புகைப்படக் காரரும் வந்தனர். டி.எஸ்.பி. திருஞானம் நாடகத்தில் நடித்த குழந்தைகளை வரவழைத்து, அவர்களை மிகவும் பாராட்டியதோடு, ஒவ்வொருவரைப் பற்றிய விவரங்களையும் குறித்துக் கொண்டார். பிறகு, நீலா, மாலா, முரளி மூவரையும் தனித் தனியாகவும், சேர்த்தும் புகைப்படம் எடுத்தார்கள். நாடகத்தில் நடித்த குழந்தைகள் எல்லாரையும் ஒன்றாக நிற்க வைத்தும் ஒரு படம் எடுத்தார்கள். புகைப்படம் எடுத்து முடிந்த பிறகு, சப்-இன்ஸ்பெக்டருடன் டி.எஸ்.பி. நாடகம் நடந்த இடத்துக்குச்சென்று பார்வையிட்டார்.


அன்று போலீஸ் அதிகாரிகளுக்கும் நாடகத்தில் நடித்த குழந்தைகளுக்கும் பரமசிவம் பிள்ளை வீட்டில் பலத்த விருந்து நடந்தது. குழந்தைகளைப் பாராட்ட வீடுதேடி வந்தவர்களுக்கும் விருந்துச் சாப்பாடு கிடைத்தது!

பார்வதி அம்மாள், நீலாவின் அம்மா மீனாட்சியிடம், "மீனாட்சி! நம் குழந்தைகளுக்குத் திருஷ்டி

பட்டுவிடப் போகிறது; உடனே திருஷ்டி கழிக்க வேண்டும். சமையல் கட்டிலே இருக்கிற பூசணிக் காயைக் கொண்டு வா" என்றாள். பூசணிக் காயில் சூடத்தை ஏற்றி வைத்துக் குழந்தைகளை மூன்று முறை சுற்றிவந்து, வாசலில் கொண்டு போய் உடைத்தாள்.

பிறகு, "மாலா! நீலா!" என்று இருவரையும் அருகிலே அழைத்தாள் பார்வதி அம்மாள். இரு வரையும் கட்டிப் பிடித்துக்கொண்டு பாசத்துடன் மாறி மாறிப் பார்த்தாள். அப்போது அவளது கண்களிலிருந்து அருவி போல் நீர் வழிந்தது.

"ஏன் பாட்டி, அழுகிறாய்?" என்று கவலை யோடு கேட்டாள் மாலா.





# 11. பத்திரிகைகளின் பாராட்டு!

'நீயும் நீலாவும் நாளை இரவு பட்டணத்துக்குப் போகப் போகிறீர்களே! உங்களது அருமை பெருமைகளையெல்லாம் தெரிந்து கொள்ளாமலே இத்தனை நாளும் இருந்து விட்டேன். இப்போது நன்றாகத் தெரிந்து கொண்டவுடனே, நீங்கள் என்னைவிட்டு வெகுதூரம் போகப் போகிறீர்களே'' என்று துக்கத்தோடு கூறினாள் பார்வதி அம்மாள்.

''ப்பூ, இதற்குத்தானா அழுதீர்கள்! கவலைப் படாதீர்கள் அம்மா. லீவு விடுகிறபோதெல்லாம் இவர்களை நான் இங்கே அனுப்பி வைக்கிறேன்'' என்று ஆறுதல் கூறினாள் நளினி.

அந்தச் சமயம், ''சார், தந்தி'' என்ற குரல் கேட்டது.

''என்ன, தந்தியா! யாருக்கு?'' என்று கேட்டார் பரமசிவம் பிள்ளை.

''உங்களுக்குத்தான்'' என்று கூறித் தந்தியை நீட்டினார், தந்திச் சேவகர்.

"என்ன தந்தி?" என்று எல்லாரும் பரபரப்புடன் கேட்டுக் கொண்டே பரமசிவம் பிள்ளையைச் சுற்றிலும் வந்து நின்றனர்.

"நல்ல செய்திதான் வந்திருக்கிறதாம். போஸ்ட் மாஸ்டர் சொன்னார்" என்றார் தந்திச் சேவகர்.

உடனே மாலாவின் அம்மா நளினி, அந்தத் தந்தியை வாங்கிப் பிரித்துப் படித்தாள்.

**"கொள்ளைக்காரனைப் பிடித்த குழந்தைகளுக்கு என் வாழ்த்துக்கள். திங்கட்கிழமை காலை எழும்பூர் வருகிறேன். — டாக்டர் சூரியசேகர்.**

"அடடே, அதற்குள் மாப்பிள்ளைக்கு விஷயம் தெரிந்து, தந்தியும் கொடுத்திருக்கிறாரே!" என்று ஆச்சரியப்பட்டார் பரமசிவம் பிள்ளை.

அதற்குள் டி. எஸ். பி. திருஞானம், "இன்று காலையில் சென்னையில் உள்ள மேல் அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்தோம். அப்போது, ஒரே ஒரு குழந்தையைத் தவிர எல்லாருமே இந்த ஊர்க் குழந்தைகள்தான் என்று சொன்னோம். 'அந்த ஒரு குழந்தை யார்?' என்று கேட்டபோது, சென்னையில் உள்ள டாக்டர் சூரியசேகருடைய குழந்தை என்று சொன்னோம். ஒரு வேளை உங்கள் மாப்பிள்ளைக்குச் சென்னையில் உள்ள அதிகாரிகள் தகவல் கொடுத்திருக்கலாம்" என்றார்.

"இருக்கலாம், இருக்கலாம். சென்னையில் இருக்கிறாரே, உதவி போலீஸ் கமிஷனர் உத்தண்டராம பிள்ளை, அவர் மாலாவின் அப்பாவுக்கு மிகவும்

வேண்டியவர். அவருடைய அம்மாவுக்கு நரம்பு வியாதி. அதைக் குணப்படுத்த இவர் அடிக்கடி அவர்கள் வீட்டுக்குப் போய் வருவார். அவர்தான் தகவல் கொடுத்திருப்பார்'' என்ருள் நளினி.

''ஏனம்மா, மூளை வியாதி, நரம்பு வியாதி நிபுணரான டாக்டர் சூரியசேகர்தான் உங்களுடைய கணவரா? கீழ்த் திசை நாடுகளிலே அவர் மிகப் பிரபலமானவர் அல்லவா ? அவர் பெண்தான் மாலா என்பதைக் கேட்க எனக்கு இரட்டிப்புச் சந்தோஷம். ஆமாம், சென்னையில் அவரது விலாசம் என்ன?'' என்று கேட்டார் டி. எஸ். பி

பரமசிவம் பிள்ளை ஒரு காகிதத்தில் விலா சத்தை எழுதிக் கொடுத்தார்.

''சென்னையில் உள்ள மேல் அதிகாரிகளுக்கு இப்போது அமரபுரம் போனவுடனே முழு விவரங் களையும் தெரிவிப்போம். ஆமாம், மாலாவுடன் கூட நீலாவும் சென்னைக்குப் போவதாக சப்-இன்ஸ் பெக்டர் சொன்ஞரே'' என்று கேட்டார் டி. எஸ். பி.

''ஆமாம். நாளை இரவு மாலாவுடன் நீலாவும் போகிருள்'' என்ருர் பரமசிவம் பிள்ளை.

''பரிசுத் தொகையான ரூபாய் ஐயாயிரத்தை யும் உடனே கிடைக்க ஏற்பாடு செய்கிறேன். கதையை எழுதிய நீலாவுக்கும், நாடகமாக்கிய மாலாவுக்கும் பரிசுத் தொகையைப் பங்கிட்டுக் கொடுக்கச் சொல்வார்கள் என்றுதான் நான் நினைக் கிறேன்.''

டி. எஸ். பி. இப்படிச் சொன்னதும், "சார், சார், கதையை எழுதியது நானாக இருந்தாலும், அதை எவ்வளவு அழகாக நாடகமாக்கியிருக்கிறாள் மாலா! எவ்வளவு அருமையாக டைரக்ட் செய்திருக்கிறான் முரளி! எவ்வளவு அற்புதமாக நடித்திருக்கிறார்கள் எங்கள் சங்கக் குழந்தைகள்! சங்கிலியாண்டி அவர்களது உருக்கமான நடிப்பைப் பார்த்ததால்தான் மனம் திருந்தினான். அதனால் எல்லாருக்கும் பொதுவாக மாங்குயில் சிறுவர் சங்கத்துக்கே பரிசைக் கொடுத்துவிடுங்கள் சார்" என்றாள் நீலா.

ஏழையாக இருந்தாலும், எவ்வளவு பரந்து விரிந்த மனம் நீலாவுக்கு இருக்கிறது என்பதை உணர்ந்து டி. எஸ். பி., சப்-இன்ஸ்பெக்டர், தலைமை ஆசிரியர் எல்லாருமே மிகவும் வியப்படைந்தார்கள். "அடே, நீலா இவ்வளவு தூரம் விட்டுக் கொடுக்கிறாளே!" என்று மூக்கின் மேல் விரலை வைத்தாள் பார்வதி அம்மாள்.

டி. எஸ். பி. திருஞானமும், சப்-இன்ஸ்பெக்டர் சதாசிவமும் விடைபெற்றுச் சென்ற பிறகும் பரமசிவம் பிள்ளை வீட்டில் கூட்டம் கலையவில்லை.

மறுநாள் மாலை, மயிலைக் காளைகள் பூட்டிய வில்வண்டி பரமசிவம் பிள்ளை வீட்டின் முன்னால் தயாராக நின்றது. அதன் பின்னால் இரண்டு வண்டிகள் நின்றன. அந்த ஊரே திரண்டு வந்துவிட்டது, வழியனுப்பி வைக்க!

வில் வண்டியில் மாலா, நீலா, முரளி, நளினி ரவி, பரமசிவம் பிள்ளை, பார்வதி அம்மாள் எல்லா ரும் ஏறிக் கொண்டார்கள். பின்னல் இருந்த ஒரு வண்டியில் தலைமை ஆசிரியருடன் மற்ற சங்கக் குழந்தைகளும், இன்னொரு வண்டியில் நீலாவின் அம்மா மீனுட்சியும், முரளியின் அம்மா முத்து லட்சுமியும் வேறு சில குழந்தைகளும் ஏறிக் கொண்டார்கள். ஊர் மக்கள் ஆரவாரத்துடன் வழியனுப்ப மூன்று வண்டிகளும் புறப்பட்டன.

அமரபுரம் ரயில் நிலையத்தை அடையும்போது மணி ஏழு ஆயிற்று. "இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது" என்ருர் தலைமை ஆசிரியர். நேரம் ஆக ஆக நீலாவுக்கு அம்மாவைப் பிரிந்து செல்ல வேண்டியிருக்கிறதே என்ற கவலை அதிகமாகியது.

அம்மாவைத் தனியாக அழைத்து, "அம்மா, நீங்கள் எனக்காகவே வாழ்கிறீர்கள். உங்களைப் பிரிந்து எப்படி அம்மா இருக்கப் போகிறேன்?" என்று கண் கலங்கக் கூறினுள்.

"நீலா, கண்ணைத் துடை. ஒரே மகளான உன்னைப் பிரிந்து இருக்க எனக்கும் மனசில்லை தான். ஆனுலும், உன் அப்பா நினைத்தது போல, நீ நன்ருகப் படித்து முன்னுக்கு வர வேண்டும் என்ருல், வேறு வழி இல்லை. மாலாவும் அவள் அம்மாவும், உன் மேல் வைத்திருக்கும் பிரியத்தைப் பார்த்தேன். நிச்சயம் தன் சொந்தப் பெண்ணைப் போலப் பார்த்துக் கொள்வார்கள். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது.புறப்படுகிறபோது அழலாமா?

கூடாது நீலா'' என்று மீனுட்சி நீலாவை அணைத்துக்கொண்டு ஆறுதல் கூறித் தேற்றினுள்.

அப்போது, ''நீலா! நீலா!'' என்று முரளி கூப்பிட்டான். உடனே, நீலா கண்ணைத் துடைத்துக் கொண்டு சென்ருள். மாங்குயில் சிறுவர் சங்கத்தை எப்படி எப்படி யெல்லாம் நடத்தலாம் என்பது பற்றித் தலைமை ஆசிரியரும் பரமசிவம் பிள்ளையும் கூறிய யோசனைகளை நீலாவும் மற்றவர்களும் கேட்டார்கள்.

ரயில் வர இன்னும் கால் மணி நேரமே இருந்தது. அப்போது, ஒரு சிறுவன் வெகு வேகமாக அவர்கள் இருந்த இடத்துக்கு ஓடி வந்தான். அவன் முரளியிடம் சென்று, தன் கையிலிருந்த ஒரு பெரிய துணிப் பையைக் கொடுத்தான். முரளி, உள்ளே யிருந்து இரண்டு ரோஜா மாலைகளை எடுத்தான். தலைமை ஆசிரியரிடம் கொடுத்து, நீலாவுக்கும் மாலாவுக்கும் போடச் சொன்னுன்.

தலைமை ஆசிரியர் ஒரு மாலையை மாலாவுக்குப் போடப் போனுர். ஆனுல் மாலா கழுத்தை நீட்டவில்லை. ''சார், சார், முதலில் நீலாவுக்குப் போடுங்கள். எல்லாவற்றுக்கும் அவள்தான் காரணம்'' என்ருள்.

''இல்லை, இல்லை. மாலாவுக்குத்தான் முதல் மாலை'' என்ருள் நீலா.

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது சப்-இன்ஸ்பெக்டர் சதாசிவம் அவர்களை வழியனுப்ப அங்கு வந்து சேர்ந்தார். உடனே, தலைமை

ஆசிரியர் தம் கையிலே ஒரு மாலையை வைத்துக் கொண்டு, சப்-இன்ஸ்பெக்டரிடம் இன்னொரு மாலை யைக் கொடுத்தார்.

"முரளி, நீ ஒன், டு, த்ரீ என்று சொல். த்ரீ என்றதும் தலைமை ஆசிரியரும் நானும் ஒரே சமயத் தில் நீலாவுக்கும் மாலாவுக்கும் மாலைகளைப் போட்டு விடுகிறோம். சரிதானா ?" என்றார் சப்-இன்ஸ் பெக்டர்.

"நல்ல யோசனை! நல்ல யோசனை!" என்று எல் லாரும் குதூகலத்துடன் ஆமோதித்தனர். நீலாவின் கழுத்திலும் மாலாவின் கழுத்திலும் ஒரே சமயத்தில் மாலைகள் விழுந்தன.

"நீலா, மாலா, நீடுழி வாழ்க!"

"மாலா, நீலா, மகிழ்வோடு வாழ்க!"

முரளி முன்னால் கூற, மற்றவர்களும் பலமாகக் கூறி வாழ்த்தினார்கள். அவர்களது வாழ்த்தொலி, ஸ்டேஷனுக்கு ரயில் வரும்வரை நிற்கவில்லை.

ரயில் வந்து நின்றதும், நீலா, மாலா, நளினி, ரவி நால்வரும் ஏறினார்கள்.

அப்போது பார்வதி அம்மாள், "நளினி, நீலாவை நன்றாகக் கவனித்துக் கொள். மாலா, நீலாவோடு போட்டி போட்டு நன்றாகப் படிக்க வேண்டும். ரவி, நீ பொல்லாத பயல். பாட்டி வீட்டுக்கு வந்து, நீலாவைக் கூட்டி போய்விட் டாயே! நீலா நன்றாக ஆடுவாள்; பாடுவாள். உன் பாடு கொண்டாட்டம்தான்" என்று கூறிக்

கொண்டே ரவியின் கன்னத்தில் மாறி மாறி முத்தம் கொடுத்தாள்.

"நீலா, யார் மனசும் கோணுதபடி நடந்து நல்ல பெண் என்ற பெயர் எடுக்க வேண்டும். வளர்க்கிறவர்கள், ஆதரிக்கிறவர்கள், பெற்றவர்கள் எல்லாருக்கும் மேலும் மேலும் பெருமை தேடித் தர வேண்டும்" என்று அன்போடு கூறினுள் நீலாவின் அம்மா.

"நீலா, மாலா, நீடூழி வாழ்க!"

"மாலா, நீலா, மகிழ்வோடு வாழ்க!"

மீண்டும் வாழ்த்தொலி வானளாவக் கேட்டது.

ரயில் நகர்ந்தது. கண் கலங்க எல்லாரும் விடை கொடுத்தார்கள்; பார்வை மறையும் மட்டும் கைகளை ஆட்டிக்கொண்டே நின்றுர்கள்.

செங்கற்பட்டு ரயில் நிலையத்தில் வண்டி நின்ற போது நன்ருக விடிந்துவிட்டது. இரவு வெகு நேரம் பேசிக் கொண்டிருந்ததால், நீலாவும் மாலாவும் நன்ருகத் தூங்கிக் கொண்டிருந்தனர். குழந்தை ரவிக்கும் நல்ல தூக்கம்.

"பேப்பர், பேப்பர், பிரபல கொள்ளைக்காரன் சங்கிலியாண்டி பிடிபட்டான்! பேப்பர், பேப்பர்" என்ற குரல் கேட்டு நளினி ஆவலோடு எட்டிப் பார்த்தாள். பேப்பர் விற்ற பையனிடம் காசைக் கொடுத்து, ஒரு பத்திரிகையை வாங்கினுள். அந்தப் பெட்டியிலிருந்த வேறு சிலரும் ஆளுக்கு ஒரு பத்திரிகை வாங்கினுர்கள்.

நளினி பத்திரிகையின் முன் பக்கத்தைப் பார்த்ததும், ''அடே, நம்முடைய மாலா, நீலா, முரளி படமெல்லாம் போட்டிருக்கிறார்களே!'' என்று அளவில்லாத ஆனந்தத்துடன் கூறினாள்.

உடனே, ''அடியே, நீலா, மாலா, எழுந்திருங்கள். இதோ உங்கள் படங்கள் எல்லாம் பத்திரிகையிலே வந்திருக்கிறது. உம், எழுந்து பாருங்கள்'' என்று அவர்களைத் தட்டி எழுப்பினாள்.

நீலாவும் மாலாவும் உடனே கண்விழித்து எழுந்தார்கள். படங்களைப் பார்த்ததும், 'நாம் காண்பது கனவா? நனவா?' என்று அவர்களுக்கு முதலில் விளங்கவில்லை. கண்களை நன்றாகக் கசக்கிக்கொண்டு பார்த்தார்கள். உண்மைதான் என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

'பிரபல கொள்ளைக்காரன் சங்கிலியாண்டி சரணடைந்தான்' என்று பத்திரிகையின் முன் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் இருந்தது. அதற்குக் கீழே, 'குழந்தைகளின் 'பொன் மனம்' நாடகம் செய்த புரட்சி' என்று சற்றுப் பெரிய எழுத்துக்களில் இருந்தது. பிறகு பூங்குடி கிராமத்தில் நடந்ததைச் செய்தியாக வெளியிட்டிருந்தார்கள்.

அப்போது, அந்தப் பெட்டியில் இருந்தவர்கள் எல்லாரும் அங்குவந்து நீலாவையும், மாலாவையும், 'அடடே, இந்தப் பெண்கள்தானா!'' என்று அதிசயத்துடன் பார்த்தார்கள். சற்று நேரத்தில், அந்த ரயிலில் இருந்தவர்கள், பிளாட்பாரத்தில் நின்ற

வர்கள் எல்லாருமே கூட்டமாக வந்து அவர்களை வியப்போடு பார்க்கத் தொடங்கினர். கூட்டம் வர வர அதிகமானதால், போலீஸார் வந்து ஒழுங்கு படுதத வேண்டிய நிலைகூட ஏற்பட்டுவிட்டது !

வண்டி மீண்டும் புறப்படும்போது, பிளாட் பாரத்தில் நின்ற முன்பின் தெரியாதவர்களெல்லாம் கூடத் தங்கள் கைகளை ஆட்டி நீலா,மாலாவை வழி அனுப்பி வைத்தார்கள்.

ரயில் புறப்பட்டுச் சிறிது நேரத்தில் ஒரு டிக்கெட் பரிசோதகர் ஐந்தாறு பொட்டலங்களுடன் அவர்கள் இருந்த இடத்துக்கு வந்தார். "பல்லைத் தேய்த்துவிட்டு இந்தப் பலகாரங்களைச் சாப் பிடுங்கள். பாவம், பட்டினியோடு இருப்பீர்கள். உங்களைப் பார்க்க வந்தவர்கள், உங்களைச் சாப் பிடக்கூட விட்டிருக்க மாட்டார்கள்" என்ருர் அவர். அவரது அன்பைக் கண்டு அவர்களது மனம் நெகிழ்ந்தது.

அவர்கள் பல்லைத் தேய்த்துப் பலகாரத்தைச் சாப்பிட்டதும், டிக்கெட் பரிசோதகரும், அப் பெட்டி யிலிருந்த மற்றவர்களும் அவர்களுடன் பேசிக் கொண்டே வந்தார்கள்.

ரவி தாம்பரம் வந்துதான் எழுந்தான். அவன் எழுந்ததும், "ரவி, இதோ பார், இது யார்?" என்று பத்திரிகையிலிருந்த நீலாவின் படத்தைக் காட்டிக் கேட்டாள் நளினி. அவன் நீலாவைப் பார்த்துச் சிரித்தான். "இது யார்?" என்று மாலா

வின் படத்தைக் காட்டி நீலா கேட்டதும், மாலா வைப் பார்த்துச் சிரித்தான் ரவி.

எழும்பூர் ஸ்டேஷனுக்குள் ரயில் நுழையும் போதே டாக்டர் சூரியசேகர் அவர்களைப் பார்த்து விட்டார். அவர்கள் இருந்த பெட்டிக்கு வேகமாக வந்தார்.

"நளினி, இதோ பார்" என்று தம் கையி லிருந்த ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் இருந்த படங் களைக் காட்டினார்.

"இதோ, இதைப் பாருங்கள்" என்று பதி லுக்குத் தன் கையில் இருந்த தமிழ்ப் பத்திரிகை யைக் காட்டினாள் நளினி.

"மாலா, உன் சிநேகிதி நீலாவை நேரில் பார்க் கிறதுக்கு முன்னால் படத்திலே பார்த்துவிட் டேன்!" என்று சிரித்துக்கொண்டே கூறிவிட்டு, "சபாஷ்!" என்று இரு சிறுமிகளையும் முதுகில் தட்டிக் கொடுத்தார். பிறகு, ரவியைக் கையில் வாங்கி அவன் கன்னங்களில் முத்தம் கொடுத்தார். எல்லாரும் வண்டியை விட்டு இறங்கி வெளியில் வந்தார்கள்.

டாக்டரின் கார் வெளியே நின்றுகொண்டிருந் தது. அதில் ஏறிக் கொண்டார்கள். அண்ணு நகரை நோக்கிக் காரை ஓட்டினார், டாக்டர்.

"பத்திரிகையிலே படம், செய்தியெல்லாம் வந் திருக்கிற விஷயம் எனக்கு முதலில் தெரியவே தெரியாது. நான் உங்களை ஸ்டேஷனுக்கு வந்து

அழைத்துவர அவசர அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். அந்தச் சமயத்திலே நம் வக்கீல் வராகமூர்த்தி இருக்கிருரே, அவர் போன் பண்ணி, "என்னப்பா, உன் பெயர், உன் மகள், பெயரெல்லாம் பேப்பரிலே வந்திருக்கிறதே! உன் மகள் படம் கூட வந்திருக்கிறது" என்று சொன்னுர். அண்ணுநகருக்குத்தான் சீக்கிரம் பேப்பர் வராதே! வருகிற வழியிலே இந்தப் பேப்பரை வாங்கிப் பார்த்தேன். இந்தச் சின்ன வயதிலேயே இந்த இரண்டு பெண்களும் பேரும் புகழும் பெற்று விட்டார்கள் !" என்று அளவில்லாத மகிழ்ச்சியோடு கூறினுர்.

"அது சரி, நீங்கள் பூங்குடிக்கு மறுநாளே தந்தி கொடுத்துவிட்டீர்களே, உங்களுக்கு எப்படி அவ்வளவு சீக்கிரம் தகவல் கிடைத்தது ?" என்று கேட்டாள் நளினி.

"உதவி போலீஸ் கமிஷனர் நம் உத்தண்டராம பிள்ளை இருக்கிருரே, அவர் சனிக்கிழமை காலையிலே எனக்கு போன் பண்ணி, "உங்கள் மாமனுருடைய ஊர் எது?" என்று கேட்டார். "திடீரென்று இப்படிக் கேட்கிருரே, என்ன விசேஷமோ?" என்று நினைத்தேன். 'பூங்குடி' என்று நான் பதில் சொன்னதும், "உங்கள் மகள் பெயர் மாலாதானே ?" என்று கேட்டார். 'ஆம்' என்றேன். 'ஒரு நல்ல செய்தி' என்று ஆரம்பித்து, சங்கிலியாண்டி சரணடைந்ததை அவர் சுருக்கமாகக் கூறினுர். உடனே நான் தந்தி கொடுத்தேன்."


"அம்மா, பூங்குடிக்குத் தந்தி வந்ததும் நீங்கள் சொன்னீர்களே, அது சரிதான்" என்ருள் நீலா.

பேசிக்கொண்டே அவர்கள் வீடுவந்து சேர்ந்தார்கள். வீட்டுக்குள் நுழையும்போதே, டெலிபோன் மணி 'கண கண' என்று ஒலித்துக் கொண்டிருந்தது.

டாக்டர் போனை எடுத்துப் பேசினர். மற்றவர்கள் அருகில் நின்றபடி கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"ஆமாம், டாக்டர் சூரியசேகர்தான் பேசுகிறேன். ஓ, உத்தண்டராம பிள்ளையா ?......நீலா என்பது எங்களுக்கு மிகவும் வேண்டியவர்களுடைய பெண்தான். இரண்டு பேரையும் இப்பொழுதுதான் ரயிலிலிருந்து அழைத்துவந்தேன். உடனே நல்ல சகுனம்போல, டெலிபோன் மணி அடித்தது .. முரளி என்கிற பையன் பூங்குடி கிராமத்திலேயே இருக்கிருன்... ஓ, நீங்களே சாயங்காலம் வருகிறீர்களா ? சந்தோஷம்...... என்ன! அதைவிடச் சந்தோஷமான செய்தியா ? அது என்ன ?...... நேரே வரும்போது சொல்கிறீர்களா ? சரி, தாங்ஸ்" என்று கூறிப் பேச்சை முடித்தார் டாக்டர்.

"யாரது ? உதவி போலீஸ் கமிஷனரா? ஏதோ மிகவும் சந்தோஷமான செய்தி என்று அவர் சொன்ஞரே ! அது என்னவாம் ?" என்று ஆவலாகக் கேட்டாள் நளினி.



# 12. சென்னையில் பொன்மனம்!

"உதவி போலீஸ் கமிஷனர் நாலு மணிக்கு வரப்போகிறார்; நல்ல செய்தி சொல்லப் போகிறார். அவர் வருவதற்கு முன்னாலே, பலபேர் உங்களைப் பார்க்க வரப் போகிறார்கள். அதனாலே மாலா, நீயும் நீலாவும் உடனே போய்க் குளித்து, அழகாய் உடை உடுத்தித் தயாராக இருக்க வேண்டும். உம், மாலா, நீலாவை அழைத்துப் போ" என்றார் டாக்டர் சூரிய சேகர்.

பிறகு மனைவியைப் பார்த்து, "நளினி, குழந்தைகளைப் பலரும் பார்க்க வருவார்கள். அதனாலே நேற்று மாலையே மிட்டாயிலே இரண்டு கிலோ, பிஸ்கட்டிலே ஐந்து கிலோ வாங்கி வந்து விட்டேன். பால்கூட நாலு புட்டி அதிகமாகக் கொண்டு வரச் சொன்னேன்" என்றார்.

நீலா குளித்துவிட்டு வந்ததும் அழகான ஒரு பட்டுப் பாவாடையையும், ஒரு பட்டுச் சட்டையையும் தயாராக வைத்துக்கொண்டு நின்றாள் மாலா.

"நீலா, இதோ இந்தப் பாவாடை, சட்டையைப் போட்டுக்கொள்" என்ருள் மாலா.

"எனக்கு எதற்கு இந்தப் பட்டுப் பாவாடையெல்லாம்? வேண்டாம் மாலா. நான் கொண்டு வந்திருக்கிற பாவாடை, சட்டையையே போட்டுக் கொள்ளுகிறேன்."

"அதெல்லாம் கூடாது இதோ பார், இன்னெரு செட் பட்டுப் பாவாடை, பட்டுச் சட்டை! நாம் இரண்டு பேரும் இன்றைக்குப் பட்டு ஆடை அணிய வேண்டுமாம்! இது என் அப்பாவின் ஆசை. அம்மாவின் ஆசையும் இதுதான். நீ வேண்டாம் என்ருல் எனக்கும் வேண்டாம்."



"மாலா, நீ பட்டு ஆடை உடுத்தலாம், ஆனல், நானே ஏழை..."

"நீலா, இனிமேல் இப்படி யெல்லாம் பேசக் கூடாது. நீயும் நானும் ஒன்று. நமக்குள்ளே வித்தியாசமே கிடையாது. நீ இந்த உடைகளைப் போட்டுக் கொள்ளத்தான் வேண்டும்"

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே, நளினி அங்கு வந்து விட்டாள்.

"நீலா, பேசாமல் வாங்கி அணிந்து கொள். நீயும் மாலாவும் எங்களுக்கு இரட்டைப் பிள்ளைகள் மாதிரி. உங்களுக்குள்ளே வித்தியாசமே கூடாது. டாக்டர் காலையில் மிகவும் கண்டிப்பாகச் சொல்லி யிருக்கிறார்" என்றாள்.

"ஏனம்மா, நாளைக்குப் பள்ளிக்கூடம் திறந்து விடுவார்களே, நீலாவைச் சேர்க்க வேண்டுமே!"

"எல்லாம் உன் அப்பா முன்னதாகவே ஏற்பாடு செய்து பணமும் கட்டிவிட்டார். நாளைக் காலையிலே நான் உங்களோடு வந்து, தலைமை ஆசிரியை யிடம் நீலாவை அறிமுகப்படுத்தப்போகிறேன் ..... அது சரி, நீலா, பட்டு ஆடையை உடுத்திக்கொள். சீக்கிரம் தயாராக வேண்டும்."

நளினி வற்புறுத்திச் சொன்னதும் நீலா பட்டுப் பாவாடையையும் சட்டையையும் அணிந்து கொண் டாள். தலை வாரி, பூச்சூடி இருவரும் டாக்டரின் முன்னால் போய் நின்றதும், "ஆ! நளினி! இந்த இரட்டைக் குழந்தைகளைப் பார்த்தாயா? எவ்வளவு அழகாக இருக்கிறார்கள்!" என்று ஆனந்தம் பொங் கக் கூறி, அவர்கள் இருவரையும் இரு கைகளால் அணைத்துக் கொண்டார்.

டாக்டர் எதிர்பார்த்தபடியே, அண்ணாநகரில் இருக்கிற குழந்தைகள், பெரியவர்கள், இன்னும் வெளியிடத்திலே இருந்தும் பலர் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தார்கள். மாலாவையும் நீலாவை யும் மகிழ்ச்சியோடு பாராட்டினார்கள். மனமார வாழ்த்தினார்கள்.

டாண், டாண், டாண், டாண்.

சரியாக மணி நான்குஅடிப்பதற்கும் தெருவிலே ஹாரன் சப்தம் கேட்பதற்கும் சரியாக இருந்தது. படகு போன்ற பச்சை நிறக் கார் ஒன்று டாக்டர் சூரியசேகரின் பங்களா எதிரிலே வந்துநின்றது. உடனே டாக்டர் சூரியசேகர் வாசலுக்கு விரைந்து வந்தார். காரிலிருந்து இறங்கிய உதவி போலீஸ் கமிஷனர் உத்தண்டராம பிள்ளையை வணங்கி வர வேற்றுப் பங்களாவுக்குள் அழைத்துச் சென்றார். உள்ளே நுழைந்ததும் நளினி, மாலா, நீலா மூவரும் இரு கைகூப்பி அவரை வரவேற்றார்கள். ரவிகூட சல்யூட் அடித்து அவரை வரவேற்றான்?

ரவியின் கன்னத்தில் செல்லமாகத் தட்டிக் கொடுத்துவிட்டு, நீலாவின் அருகிலே சென்றார், உதவி போலீஸ் கமிஷனர். "நீலா, நீயும் மாலாவும் கிராமத்திலே யிருந்த பக்காத் திருடனைப் பிடித்துக் கொடுத்தீர்கள். பட்டணத்திலேயும் பெரிய பெரிய திருடர்கள் இருக்கிறார்கள். உங்களிடத்திலே அவர்களும்கூட மாட்டிக் கொள்வார்கள்'' என்று சிரித்துக்கொண்டே கூறினார். பிறகு, இரு சிறுமி களையும் இருபுறமும் உட்கார வைத்துக்கொண்டு சிற்றுண்டி சாப்பிட்டவாறே பேசினார்:

"டாக்டர், நான் இந்தக் குழந்தைகளை நேரிலே பார்த்துப் பாராட்டுவதோடு, ஒரு சந்தோஷமான செய்தியையும் சொல்லிவிட்டுப் போகலாமென்று தான் வந்தேன். சங்கிலியாண்டி பிடிபடக் காரண மாக இருந்தவர்களுக்கு ரூபாய் ஐயாயிரம் பரிசு

கொடுப்பதென அரசாங்கத்திலே முடிவு எடுத்து விட்டார்கள். பரிசை எப்படிக் கொடுப்பது என்பதும் முடிவாகி விட்டது'' என்று கூறித் தமது பையிலிருந்த ஒரு சிறு டயரியை எடுத்தார். அதிலே ஒரு பக்கத்தைப் புரட்டி, ''கதை எழுதிய நீலாவுக்கு ஆயிரம் ரூபாய்; நாடகமாக்கிய மாலாவுக்குஆயிரம் ரூபாய்; டைரக்ட் செய்த முரளிக்கு ஆயிரம் ரூபாய். மிச்சமுள்ள ரூபாய் இரண்டாயிரத்தை மற்றக் குழந்தைகளுக்குச் சமமாகப் பிரித்துக் கொடுப்பதாக முடிவு செய்தாயிற்று. அத்துடன் ஒரு வேண்டுகோள்'' என்றார்.

''வேண்டுகோளா! அது என்ன?'' என்று கேட்டார் டாக்டர்.

''அடுத்த மாதம் எங்கள் போலீஸ் இலாகாவிலே 'போலீஸ் வாரம்' என்று ஒரு வாரம் கொண்டாடப் போகிறோம். ஒவ்வொரு நாளும் இரவிலே கலை நிகழ்ச்சி நடக்கும். கடைசி நாளிலே-அதாவது ஜூலை 31-ஆம் தேதி 'பொன் மனம்' நாடகத்தைப் பூங்குடியிலே நடத்திய அதே குழந்தைகள் நடத்திக் காட்ட வேண்டும். இந்த ஊரிலே இருக்கிறவர்களும் அதைப் பார்க்க வேண்டாமா?''

''ஓ! நன்றாக நடத்தலாம். ஆனால், நீலா, மாலாவைத் தவிர எல்லாருமே பூங்குடியிலேதான் இருக்கிறார்கள்.''

''அது தெரிந்ததுதானே? அவர்களையெல்லாம் நீங்கள் சென்னைக்கு வரவழையுங்கள். போக வரச் செலவு, சாப்பாட்டுச் செலவு எல்லாவற்றை

யும் நாங்கள் ஏற்றுக் கொள்வோம். தங்குவதற்கும் வசதிசெய்து கொடுப்போம்.''

''போக வரச் செலவு மட்டும் கொடுத்தால் போதும். அவர்கள் இங்கேயே தங்குவார்கள். இங்கேயே சாப்பிடுவார்கள். எனக்கும் இதிலே சந்தோஷம்தானே ?'' என்றார் டாக்டர்.

''சரி, இன்றைக்கே உங்கள் மாமனாருக்கு எழுதிப் போடுங்கள். நாங்களும் அமரபுரம் சப்-இன்ஸ்பெக்டர் மூலமாக பூங்குடியில் உள்ள மாங்குயில் சிறுவர் சங்கத்துக்குத் தகவல் தெரிவிக்கிறோம்.''

உதவி போலீஸ் கமிஷனர் விடைபெற்றுச் சென்ற பிறகு, மாலா மகிழ்ச்சி தாங்காமல் குதிக்கத் தொடங்கி விட்டாள். ''அப்பா, கூடவே நீலாவினுடைய அம்மா, முரளியினுடைய அம்மா, தாத்தா, பாட்டி எல்லாரையும் வரச் சொல்லவேண்டும்.''

மாலா கூறி முடிப்பதற்குள், '' மாலா, நம் சங்கத் தலைவரை மறந்துவிட்டாயா ?'' என்று கேட்டாள் நீலா.

''பருப்பில்லாமல் கல்யாணமா ? உங்கள் தலைமை ஆசிரியர் இல்லாமல் நாடகமா? கட்டாயம் அவரையும்தான் அழைக்க வேண்டும்'' என்றாள் மாலா.

அடுத்த நிமிடமே டாக்டர் சூரியசேகர், பரமசிவம் பிள்ளைக்கு விவரமாகக் கடிதம் எழுதினார்.

* * *

மறுநாள் காலை ஒன்பதரை மணிக்கு கஸ்தூரிபா கல்வி நிலையத்தில் பிரார்த்தனை நடந்தது. பிறகு, தலைமை ஆசிரியை தங்கம்மாள் பேச ஆரம்பித்தார்:

"அருமைமிக்க ஆசிரியைகளே, அன்புமிக்க மாணவிகளே, இன்று ஒரு மகிழ்ச்சியான செய்தியைக் கூறப் போகிறேன். நமது பள்ளி மாணவி மாலாவும், அவளது சிநேகிதி நீலாவும் ஒரு திருடனைப் பிடித்துக் கொடுத்ததாகப் பத்திரிகையில் படித்திருப்பீர்கள். நேற்றுவரை மாலா மட்டுமே நம் பள்ளி மாணவியாக இருந்தாள். இன்று நீலாவும் நம் பள்ளி மாணவியாகிவிட்டாள்! ஆம், இன்று நீலாவும் நம் பள்ளியில் சேர்ந்துவிட்டாள். இப்போது மாலாவும் நீலாவும் உங்கள் முன்னால் வந்து நிற்பார்கள்" என்றதும் மாலா, நீலாவின் கையைப் பிடித்து அழைத்துவந்தாள். இருவரும் தலைமை ஆசிரியையின் இருபுறமும் நின்று எல்லாருக்கும் வணக்கம் செய்தார்கள். உடனே, மற்ற மாணவியர் அனைவரும் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

அன்று மாலை பள்ளிக்கூடம் விட்டு வீடு வந்ததும், வரவேற்பு அறையில் இருந்த ஒருவர், "குழந்தைகளே, உங்களுக்காகத்தான் காத்திருக்கிறேன்" என்றார். அவர் அருகிலே காமிராவுடன் ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

"என்ன சார் வேண்டும்?" என்று கேட்டுக்கொண்டே மாலா அவர் அருகிலே சென்றாள். நீலாவும் கூடவே போனாள்.

அவர் தம் கையில் வைத்திருந்த ஒரு கட்டுப் பத்திரிகைகளை மேஜைமேல் பரப்பினார். "ஆ! இந்த 'சிறுவர் உலகம்' பத்திரிகை எனக்கு மாதா மாதம் தபாலில் வருகிறதே! எனக்கு மிகவும் பிடிக்குமே!" என்றாள் மாலா.

"அப்படியா! மகிழ்ச்சி. இத்தனையும் 'சிறுவர் உலகம்'தான். ஆனால், வெவ்வேறு மொழிகளில் இருக்கிறது. மொத்தம் 13 மொழிகளில் இதை வெளியிடுகிறோம். தமிழ்ப் பதிப்பின் ஆசிரியர் நான்தான்..."

"அடடே, அருமைநாயகம் என்பது நீங்கள் தானா! நீலா, இவர்களுடைய கதைகளையெல்லாம் நான் ஆசை ஆசையாகப் படிப்பேன். இன்றைக்குத்தான் நேரிலே பார்க்கிறோம். இது நம் அதிர்ஷ்டம்தான்!" என்றாள் மாலா.

"உங்கள் இருவரையும் பார்க்கத்தான் நான் வந்திருக்கிறேன். உங்களைப் பேட்டி கண்டு சிறுவர் உலகத்திலே எழுதப் போகிறேன். உங்களுடைய புகைப் படங்களோடு பேட்டி வெளிவர வேண்டும் என்பதுதான் என் ஆசை. ஆனாலும் அவசரமில்லை. உள்ளேபோய்க் கால் முகம் கழுவி, ஏதாவது சாப்பிட்டுவிட்டு வாருங்கள். காத்திருக்கிறோம்" என்றார் அருமைநாயகம்.

மாலை ஆகாரம் முடிந்ததும் பேட்டி ஆரம்பமானது. ஆசிரியர் அருமைநாயகம் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் மாலாவும், நீலாவும் 'டாண், டாண்' என்று பதில் சொன்னார்கள்.

பிறகு, மாலாவையும் நீலாவையும் ஒன்ருக நிற்க வைத்தும் உட்கார வைத்தும் புகைப்படங்கள் எடுத்தார்கள். இருவரும் சேர்ந்து 'சிறுவர் உலகம்' படிப்பது போல ஒரு படம் எடுத்தார்கள். அப்போது டாக்டர் சூரியசேகர் அங்கு வந்துவிட்டார். டாக்டர், நளினி, ரவி ஆகியோரையும் அவர்களுடன் நிற்கவைத்துப் படம் எடுத்தார்கள்.

"போலீஸ் வாரம் கொண்டாடும்போது இவர்களது பேட்டியுடன் 'சிறுவர் உலகம்' வந்துவிடும். தமிழ் நாட்டில் மட்டுமல்ல; பாரத நாடு முழுவதும் நீலா-மாலா புகழ் பரவப் போகிறது, எங்கள் பத்திரிகை மூலமாக!" என்று பெருமையுடன் கூறி விடைபெற்றுச் சென்ருர் அருமைநாயகம்.

போலீஸ் வாரம் ஆரம்பமான மூன்ருவது நாளே பூங்குடியிலிருந்து நாடகத்தில் நடிக்கப்போகும் குழந்தைகளும், தலைமை ஆசிரியரும், நீலாவின் அம்மா மீனுட்சி, முரளியின் அம்மா முத்துலட்சுமி, பரமசிவம் பிள்ளை, பார்வதி அம்மாள் ஆகியோரும் சென்னைக்கு வந்துவிட்டார்கள். டாக்டர் வீடு ஒரே கலகலப்பாக இருந்தது.

சென்னையில் எல்லா முக்கியமான இடங்களையும் சுற்றிப் பார்க்க டாக்டர் ஒரு 'வேன்' ஏற்பாடு செய்திருந்தார். காலை எட்டு மணி முதல் பகல் ஒரு மணிவரை எல்லாரும் நகரைச் சுற்றிப் பார்ப்பார்கள். பிறகு, சாப்பிட்டுவிட்டு மூன்று மணிவரை ஓய்வு. நாலு மணிக்கு நாடக ஒத்திகை ஆரம்பமாகும்.

சென்னையை அவர்கள் முதல் நாள் சுற்றிப் பார்க்கச் சென்றபோது வழியிலே தெரிந்த ஒரு வண்ணச் சுவரொட்டியைக் கண்டார்கள். உடனே "முரளி, அதோ பார்!" என்று மாலா குதூகலத்துடன் காட்டினாள். முரளி சுவரொட்டியில் இருந்ததை வாய்விட்டுப் படித்தான்.

மற்றக் குழந்தைகளும் அதைப் பார்த்தார்கள்; படித்தார்கள்; துள்ளிக் குதித்தார்கள். போகும் வழியிலெல்லாம் இவர்கள் நடிக்கப்போகும் நாடகத்தைப் பற்றிய செய்தியை விளம்பரமாகச் சுவர்களில் ஒட்டியிருந்தார்கள். அதைப் பார்க்கப் பார்க்க அவர்களுக்கு ஒரே ஆனந்தமாக இருந்தது.


நாடகம் நடைபெறும் நாளில், காலை முதல் மாலை நாலு மணிவரை பாலர் அரங்கத்திலே ஒத்திகை நடந்தது. அன்று மாலை ஆறு மணிக்கு மேன்மை தங்கிய கவர்னர் முன்னிலையில் 'பொன் மனம்' நாடகம் தொடங்கியது. நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்ற ஆசையில் குழந்தைகள் மிகவும் கவனமாகவும் திறமையாகவும் நடித்தார்கள். மேலும் காட்சி அமைப்பு, ஒளி, ஒலி ஏற்பாடு, மேக்-அப் எல்லாம் சிறப்பாக இருந்ததால், நாடகம் பூங்குடியில் நடந்ததைவிடப் பலமடங்கு சிறப்பாக அமைந்தது. திருடன் மகளாக நடித்த நீலாவும், திருடனாக நடித்த முரளியும் மிகவும் உருக்கமாக நடித்த காட்சியைக் கண்டு சபையோர் கண்கலங்கி விட்டனர். முன் வரிசையிலிருந்த கவர்னர்கூடக் கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டார்!

நாடகம் முடியப் போகும் சமயம் கவர்னரை மேடைக்கு அழைத்து வந்தார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் நாடகத்தைப் பற்றிய விவரங்களை எடுத்துக் கூறினூர். நடித்த குழந்தைகளையும் அறிமுகப்படுத்தினூர்.

கவர்னர் பேசும்போது, "'நாம் சிறுவர்கள் தானே! நம்மால் என்ன நன்மை செய்யமுடியும்? என்று உதட்டைப் பிதுக்குகிறவர்களுக்கு இந்த நாடகம் ஒரு நல்ல பாடத்தைப் போதிக்கிறது. இந்த நாடகம் அரங்கேறிய தினத்திலே அதிசயப் படும்படியான பலன் கிடைத்துவிட்டது. இந்த நாடகத்தில் பங்கு பெற்ற குழந்தைகளுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்'' என்று கூறிப் பரிசுத் தொகையைக் குழந்தைகளுக்கு வழங்கினூர். ஒவ்வொருவரும் பரிசு பெறும்போது அந்த மண்டபமே அதிரும்படி பொதுமக்கள் கைதட்டித் தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.

நாடகம் முடிந்து எல்லாரும் மகிழ்ச்சியாக வீடு திரும்பினூர்கள். முன்னுல் டாக்டரின் கார் சென்றது. அதைத் தொடர்ந்து 'வேன்' சென்றது. இரண்டிலும் குழந்தைகளும் பெரியவர்களும் நிரம்பியிருந்தனர். சிறிது தூரத்தில் இவர்களைப் பின் தொடர்ந்து வெகு வேகமாக ஒரு பெரிய கார் வந்து கொண்டிருந்தது. அந்தக் காரின் பின் சீட்டில் உட்கார்ந்திருந்தவர், "உம், சீக்கிரம் போ. இன்னும் வேகமாகப் போ'' என்று டிரைவரை அவசரப் படுத்திக் கொண்டிருந்தார்.

⊗



# 13. நாடகம் திரைப் படமானது!

டாக்டரின் கார், 'வான்' இரண்டும் அண்ணு நகரில் உள்ள டாக்டரின் வீட்டின் முன்ஞல் வந்து நின்றன. குழந்தைகள் கும்மாளம் போட்டுக் கொண்டு கீழே இறங்கினுர்கள். பெரியவர்களும் இறங்கினுர்கள். அப்போது அவர்களைத் துரத்தி வந்த காரும் அங்கு வந்து நின்றது. அதிலிருந்து சில்க் ஜிப்பா அணிந்த ஒருவர் இறங்கினுர்.

அவர் டாக்டரின் அருகே வந்தார். "டாக்டர், நாடகம் மிகப் பிரமாதமாக இருந்தது. நாடகம் முடிந்ததும், உங்களைப் பாலர் அரங்கிலே பார்த்துப் பேச நினைத்தேன். ஆனுல், சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நான்தான் குணுளன் பிக்சர்ஸ் சொந்தக்காரர் கோதண்டராமன். உங்களுடன் ஒரு சில நிமிஷங்கள் பேசலாம் என்றுதான் வந்தேன்."

"ஓ, அப்படியா! ஆனுல், குழந்தைகள் மிகவும் பசியாக இருப்பார்கள். அவர்களுடன் நீங்களும் சாப்பிட ஒப்புக்கொண்டால், சாப்பிட்ட பிறகு,

சில நிமிஷங்களென்ன, பல நிமிஷங்கள்கூடப் பேசலாம்'' என்றார் டாக்டர்.

“அப்படியா! சரி, சாப்பிட்டுவிட்டே பேசுவோம்”.

கோதண்டராமனை வீட்டுக்குள் அழைத்துச் சென்று வரவேற்பு அறையில் உட்கார வைத்தார் டாக்டர். குழந்தைகளில் சிலர் வெந்நீரிலும், சிலர் குளிர்ந்த நீரிலும் குளித்தார்கள். பிறகு, சாப்பிட உட்கார்ந்தார்கள். கூடவே, கோதண்டராமனும், டாக்டரும், மற்றப் பெரியவர்களும் உட்கார்ந்தார்கள். பாதாம் அல்வா, வடை, பாயசம், முழு மாம்பழம், வாழைப்பழம், ஐஸ்கிரீம் ஆகியவற்றுடன் விருந்தை ஆனந்தமாக உண்டார்கள்.

பிறகு டாக்டரிடம் தாம் பேச வந்த விஷயத்தை மெதுவாக ஆரம்பித்தார் கோதண்டராமன்.

''நான் புதுவிதமாக ஒரு சினிமா எடுக்கப் போகிறேன்.''

''புது விதமாகவா! அது எப்படி?''

''வேறு ஒரு தயாரிப்பாளராக இருந்தால், இன்று நடந்த நாடகத்தை அப்படியே கொஞ்சம் கூட்டிக் குறைத்துச் சினிமாவாக எடுக்க நினைப்பார். ஆனால், நான் அப்படி எடுக்கப் போவதில்லை. கிராமத்துக்கு உங்கள் பெண் சென்றதிலிருந்து, அங்கே சிறுவர் சங்கம் அமைத்தது, நாடகம் போட்டது, நாடகத்தைப் பார்த்துத் திருடன் சரண் அடைந்தது, போலீஸார் அவனைப் பிடித்துச்

சென்றது, பிறகு சென்னை வந்தது, இங்கும் அந்த நாடகத்தை நடத்திக் கவர்னர் கையால் பரிசு பெற்றது—எல்லாவற்றையும் எடுக்கப் போகிறேன் ...''

மளமளவென்று பேசிக்கொண்டே போனார் கோதண்டராமன்.

''அப்படியானால், பூங்குடிக்கே நீங்கள் போய்ப் படம் எடுப்பீர்களா ?''

''ஆம், அங்கே போய் அங்கு எடுக்க வேண்டிய காட்சிகளை எடுப்போம்.''

''அப்படியானால், நடிகர்கள் ?....''

இதைக் கேட்டதும் கோதண்டராமன் சிரித்து விட்டார். ''என்ன டாக்டர், இந்த நாடகத்தில் நடித்தவர்களேதான் சினிமாவிலும் நடிக்க வேண்டும். இதில் சம்பந்தப்பட்ட மற்றவர்களையும் படம் எடுக்க நினைக்கிறோம். அது பற்றிப் பேசத்தானே நான் வந்தேன்.''

இதைக் கேட்டதும் டாக்டர் தயங்கினார். பிறகு, ''குழந்தைகளுக்குப் படிப்புத்தான் முக்கியம். இப்போதே பத்து நாள் லீவு எடுத்து விட்டார்கள். சினிமாவில் நடிப்பதென்றால்...?''என்று இழுத்தார்.

''கவலைப்படாதீர்கள். நவராத்திரி லீவு வருமே, அப்போது கிராமத்துக்குப் போய் எடுக்கலாம்''

''எதற்கும் நாளைப் பிற்பகல் மூன்று மணிக்கு வாருங்கள். மற்றவர்களைக் கலந்து முடிவு சொல்கிறேன்.''

கோதண்டராமன் விடைபெற்றுச் சென்றதும், தலைமை ஆசிரியரிடமும், குழந்தைகளிடமும், மற்றப் பெரியவர்களிடமும் டாக்டர் விவரத்தைக் கூறினார்.

அதைக் கேட்ட முரளி, துள்ளிக் குதித்துக் கொண்டே, "அடி சக்கை, நம் பூங்குடி கிராமமே சினிமாவிலே நடிக்கப் போகுது!" என்றான். மற்றக் குழந்தைகளும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார்கள்.

அப்போது நீலா, "பெரியவர்கள் பார்த்து எப்படி முடிவு செய்தாலும் சரிதான். ஆனால், ஒன்றைமட்டும் கூறவேண்டும். சினிமா எடுத்தால், நாங்கள் எல்லாரும் படத்திலே தெரிவோம். ஆனால், மாலா நாடகத்திலே நடிக்கவே இல்லையே ! அவளைப் படத்திலே பார்க்கவே முடியாதே!" என்றாள்.

உடனே டாக்டர், "கோதண்டராமன் என்ன சொன்னார் என்பதை உங்களுக்கு நான் சரியாகச் சொல்லவில்லை போலிருக்கிறது. மாலா விடுமுறையில் பூங்குடிக்குச் சென்றது முதல், சென்னைக்கு வந்து பரிசு வாங்கியது வரை படம் எடுக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார். அப்படி எடுத்தால், மாலாவையும் படத்திலே பார்க்கலாம். இங்கே இருக்கிற மற்றவர்களையும்கூடப் பார்க்கலாம்" என்றார்.

"என் அம்மாவைக் கூடவா ?" என்றாள் நீலா.

"கட்டாயம் உன் அம்மாவும் இருப்பார்கள்."

"அப்படியானால் என் அம்மாவும் இருப்பார்கள்" என்று குதித்தான் முரளி.

பூங்குடி கிராமத்துக்கும், அங்குள்ள மக்களுக்கும் விரைவில் திரைப்படம் மூலமாகப் புகழ் கிடைக்கப் போவதை நினைத்து நினைத்துப் பரமசிவம் பிள்ளை மிகவும் பெருமைப்பட்டார். தமது பள்ளியும், பள்ளிக் குழந்தைகளும் தமிழ் தெரிந்த அனைவருக்கும் தெரியப் போகிறார்கள் என்பதை எண்ணித் தலைமை ஆசிரியர் மகிழ்ச்சி அடைந்தார்.

மறு நாள் காலை, எல்லாரும் மகாபலிபுரம், திருக்கழுக்குன்றம் எல்லாம் பார்த்துவிட்டுப் பகல் ஒரு மணிக்குத் திரும்பி வந்தார்கள்.

குறித்த நேரத்தில் கோதண்டராமன் வந்து விட்டார். டாக்டர் சூரியசேகர், குழந்தைகளையும் பெரியவர்களையும் ஒவ்வொருவராக அழைத்து, கோதண்டராமனுக்கு அறிமுகம் செய்து வைத்தார். பிறகு, படம் எடுப்பது பற்றிய விவரங்களைக் கோதண்டராமன் கூறினார்:

"பூங்குடியிலே அதிகமாகப் போனால் பத்து அல்லது பதினைந்து நாட்களில் தேவையான காட்சிகளையெல்லாம் எடுத்து விடலாம். பிறகு, சென்னையிலே சில காட்சிகளை எடுப்போம். அதோடு, நேற்று நீங்கள் பார்த்திருப்பீர்களே, உங்கள் நாடகம் நடக்கும் போது, தமிழக செய்தித் துறையினர் சில காட்சிகளையும், கவர்னர் பரிசு கொடுக்கும் நிகழ்ச்சியையும் சினிமாவாக எடுத்தார்களே, அதையும் அவர்களிடம் கேட்டு வாங்கிச் சேர்த்துக் கொள்வோம். இது சம்பந்தமாக இன்று காலையிலே கூடச் சம்பந்தப்பட்டவர்

களிடம் பேசினேன். இப்படிப்பட்ட படங்களை எடுக்க அரசாங்கமே தாராளமாக உதவுகிறது.''

''பூங்குடியிலே என்னென்ன ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னால், நானும், பரமசிவம் பிள்ளையும் செய்து விடுவோம்'' என்றார் தலைமை ஆசிரியர்.

''உங்கள் உதவி நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேதான் நான் இதிலே தீவிரமாக இறங்குகிறேன்...இந்தப் படத்துக்குக் குழந்தைகள் வைத்த பெயரையே வைக்கப் போகிறேன். 'பொன் மனம்'—அழகான பெயர்! இதிலே நடிக்கிற குழந்தைகள், பெரியவர்கள் எல்லாருக்கும் சேர்த்து ஒரு தொகையை மொத்தமாகக் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்...டாக்டர், நீங்கள் சொல்லுங்கள். எவ்வளவு கொடுக்கலாம்?''

எல்லாரும் தனியாகச் சென்று சிறிது நேரம் பேசினார்கள். பிறகு, டாக்டர் ஒரு தொகையைச் சொன்னார். அவர் சொன்ன தொகையைக் கோதண்டராமன் உடனே ஒப்புக்கொண்டுவிட்டார். - குணாளன் பிக்சர்ஸ், மாங்குயில் சிறுவர் சங்கத்துக்கு ரூபாய் ஐம்பதாயிரம் கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது!

இது நடந்த இரண்டு நாட்களில் 'பொன் மனம்' புதுமையான ஒரு திரைப் படமாக வரப் போகிறது என்ற செய்தி எல்லாப் பத்திரிகைகளிலும் விவரமாக வெளிவந்து விட்டது. பூங்குடியில் உள்ளவர்கள் இந்தச் செய்தியைப் படித்ததும்

எல்லை யில்லா மகிழ்ச்சி அடைந்தார்கள். மாங் குயில் சிறுவர் சங்கக் குழந்தைகளும், அவர்களுடன் சென்னைக்கு வந்த பெரியவர்களும் பூங்குடிக்குத் திரும்பியபோது அவர்களுக்கு அமோகமான வர வேற்பு அளிக்கப்பட்டது. இதே போலத்தான் மாலாவும் நீலாவும் பள்ளிக்குச் சென்ற போது வாயில் காப்பவர் முதல் தலைமை ஆசிரியை வரை எல்லாரும் அவர்களை மகிழ்ச்சியோடு வரவேற் றார்கள்.

"நமது பள்ளிக்கு இவர்களால் மேலும் மேலும் பெருமை சேருகிறது" என்று பெருமையோடு கூறி னார் தலைமை ஆசிரியை. ஆனாலும், நீலாவிடத்திலும் மாலாவிடத்திலும் கொஞ்சமாவது கர்வம் இருக்க வேண்டுமே! துளிக்கூட இல்லை. வழக்கம் போல் எல்லாருடனும் இனிமையாகவே பழகினார்கள்.

நீலாவும் மாலாவும் படிப்பிலும் மிகுந்த அக் கறை காட்டி வந்தார்கள். அதிகாலை ஐந்து மணிக்கே எழுந்து படிக்கத் தொடங்கி விடுவார்கள். நீலாவைப் போல் நாமும் நன்கு படித்து முன்னேற வேண்டும் என்று மாலா ஆசைப்படுவாள். முன் பெல்லாம் கணக்கு, விஞ்ஞானம் இரண்டையும் முகத்தைச் சுளித்துக்கொண்டே படிப்பாள். ஆனால், நீலா வந்த பிறகு, அந்தப் பாடங்களிலும் அவளுக்கு ஆர்வம் ஏற்பட்டது. இருவரும் ஒரு வருக்கொருவர் தெரியாததைக் கேட்டுச் சந்தேகத் தைப் போக்கிக் கொண்டார்கள்.

அன்று காலை, பள்ளிக்கூடம் ஆரம்பமாவதற்குக் கால்மணி நேரம் இருக்கும்போது டாக்டர் சூரிய சேகரின் கார், தலைமை ஆசிரியையின் அறைக்கு எதிரே வந்து நின்றது. காரை ஓட்டிக் கொண்டு வந்த மாலாவின் அம்மா நளினி, மாலா, நீலா மூவரும் காரிலிருந்து இறங்கினார்கள். மாலாவும் நீலாவும் கண்ணாடி போட்ட இரண்டு பெரிய படங்களைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். தலைமை ஆசிரியைக்கு எதிரேயுள்ள சுவரில் அவற்றைச் சாய்த்து வைத்துவிட்டு வணக்கம் செலுத்தினார்கள்.

"நீலாவும் மாலாவும் பள்ளிக்கூடத்திற்காக இரண்டு படங்களை வரைந்திருக்கிறார்கள்......" என்று ஆரம்பித்தாள் நளினி.

உடனே தலைமை ஆசிரியை எழுந்து அந்தப் படங்களின் அருகே வந்து பார்த்தார். ஒரு படத்தில் பொக்கை வாய்ப் புன்னகையுடன் காந்தித் தாத்தா இருந்தார். அவருடைய உருவத்துக்குக் கீழே,

**சத்தியம் பேசுதல் இவர்கொள்கை;**
**தருமம் காத்தல் இவர்கொள்கை;**
**இத்தல மக்கள் யாவர்க்கும்**
**இன்ப சுதந்திரம் இவர்கொள்கை.**

என்று எழுதப்பட்டிருந்தது.

இன்னொரு படத்தில் குழந்தைகளின் நண்பரான நேரு மாமா, அழகான ரோஜாப் பூவைக் கையில் வைத்திருந்தார். அவருடைய உருவத்துக்குக் கீழே,

**மனித ருக்குள் மாணிக்கம்**
**மக்கள் போற்றும் தலைவராம்**
**புனித மான விடுதலை**
**பெற உழைத்த ஜவஹராம்**

என்று எழுதப்பட்டிருந்தது. படங்களும் எழுத்துக்களும் சுற்றி யுள்ள பூ வேலைப்பாடுகளும் மிகவும் அழகாக இருந்தன. கண்ணைக் கவரும் வகையில் வண்ணங்கள் தீட்டப்பட்டிருந்தன.

"ஆஹா! எவ்வளவு நன்றாக இருக்கின்றன! படங்கள் மட்டுமல்ல; பாடல்களும் பொருத்தமாக இருக்கின்றன!" என்று வியந்து பாராட்டினார் தலைமை ஆசிரியை.

"இந்த இரண்டையும் வரைந்தது மாலாதான்" என்றாள் நீலா.

"படங்களுக்கு ஏற்ற பாடல்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்ததே நீலாதான். இப்படி ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு படத்தை வைக்கலாம் என்று யோசனை சொன்னதும் இவள்தான்" என்றாள் மாலா.

"ஒருவருக்குத் திறமை மட்டும் இருந்தால் போதாது. அதை நல்ல காரியத்துக்குப் பயன்படுத்த வேண்டும். அதுதான் சிறப்பு. உண்மையிலேயே ஒரு சிறப்பான செயலை நீங்கள் இருவரும் சேர்ந்து செய்திருக்கிறீர்கள்!" என்று கூறிவிட்டு, நளினியைப் பார்த்து, "நீங்கள் பாக்கியசாலி" என்று மனமாரப் பாராட்டினார்.

வீட்டிலே படிப்புக்கு இடையூறு இல்லாமல், நேரம் கிடைக்கும் போதெல்லாம் நீலாவும் மாலாவும் பள்ளிக்கு வேண்டிய படங்களைத் தயாரித்தார்கள். ஒரே மாதத்தில் அவர்களது பள்ளியில் வகுப்புக்கு ஒரு படம் வீதம் காட்சி அளித்தது. மொத்தத்தில், நீலா அந்தப் பள்ளியில் சேர்ந்ததிலிருந்தே அங்கு ஒரு குதூகலமும், கலகலப்பும் ஏற்பட்டு விட்டன.

திட்டமிட்டபடியே 'பொன் மனம்' திரைப்பட வேலை ஆரம்பமாகியது. படப் பிடிப்பில் கலந்து கொள்ள நளினி, மாலா, நீலா, ரவி நால்வரும் பூங்குடி சென்றார்கள். அவர்கள் அமரபுரத்தில் ரயிலில் வந்து இறங்கிய காட்சி முதலில் படமாக எடுக்கப்பட்டது. தொடர்ந்து படப் பிடிப்பு வேலைகள் நடைபெற்றன. பூங்குடியிலும் அமரபுரத்திலும் எடுக்க வேண்டிய காட்சிகளை யெல்லாம் எடுத்தார்கள்.

மாரியம்மன் கோயில் திறந்தவெளி அரங்கில், மாங்குயில் சிறுவர் சங்கக் குழந்தைகள் 'பொன் மனம்' நாடகத்தை நடத்தினர். நாடகத்தைப் பார்க்க வந்த கூட்டம், முன்பு வந்த போலீஸ்காரர்கள், சப்-இன்ஸ்பெக்டர் சதாசிவம் எல்லாரையுமே படம் எடுத்தார்கள். ஆனால், சங்கிலியாண்டியைத் தான் அங்கு கொண்டுவர முடியவில்லை. அவன் தான் சிறையில் இருக்கிறானே! அவனுக்குப் பதிலாக வேறு ஒருவரை நடிக்கச் செய்து படம் எடுத்தனர். அவரும் மிக அற்புதமாக நடித்தார்.

திரைப் படம் மூன்று மாதங்களில் தயாராகி விட்டது. பொங்கல் விழாவன்று பல இடங்களில் 'பொன் மனம்' திரையிடப்பட்டது. அப்போது அமரபுரத்தில் உள்ள ஆனந்தா தியேட்டரிலும் அப்படத்தைத் திரையிட்டனர். பெரும் கூட்டம் அப்படத்தைப் பார்க்கத் திரண்டு வந்தது. அதற்கு முன்பு அப்படிப்பட்ட ஒரு கூட்டத்தை ஆனந்தா தியேட்டரில் கண்டதே இல்லை!

'பொன் மனம்' வெற்றிப் படமாக அமைந்து பல நாட்கள் ஓடியது. பத்திரிகைகள் எல்லாம் குழந்தைகளின் புகைப்படங்களை வெளியிட்டு அவர்களின் நடிப்பை மிகவும் பாராட்டின. இப்படிப்பட்ட புதுமையான படத்தை எடுத்த குணாளன் பிக்சர்ஸ் கோதண்டராமனையும் புகழ்ந்து எழுதின.

முன்பு ஒப்புக்கொண்டபடி மாங்குயில் சிறுவர் சங்கத்துக்குக் குணாளன் பிக்சர்ஸ் ரூபாய் ஐம்பதாயிரம் கொடுத்தார்கள். அந்தத் தொகையை யார் யாருக்கு எப்படிப் பங்கிட்டுக் கொடுப்பது என்று புரியவில்லை. நீலா, மாலா இருவருக்கும் தலைமை ஆசிரியர் கடிதம் எழுதி அவர்களது யோசனையைக் கேட்டார். "எங்கள் ஊர்ப் பள்ளிக்கூடம் இப்போது கூரைக் கட்டிடத்திலே இருக்கிறது. மழை பெய்தால் ஒழுகும். பெரும் காற்று வந்தால் சொட்டகையே சாய்ந்து விடுமோ என்று நாங்களெல்லாம் பயப்படுவோம். மழை, புயல், தீ எதற்கும் பயப்படாமல் பிள்ளைகள் படிக்க வேண்டுமானால்..."

"இந்த ஐம்பதாயிரத்திலே ஓர் அழகான கட்டடத்தைக் கட்டிவிடலாம் அப்படித்தானே ! ஆஹா! நல்ல யோசனை ! நல்ல யோசனை !" என்று குதித்தாள் மாலா.

டாக்டரிடமும் நளினியிடமும் இந்த யோசனையைத் தெரிவித்தார்கள். அவர்களும் ஆமோதித்தனர்.

அன்றே பூங்குடிக்குக் கடிதம் பறந்தது. இந்த யோசனையை எழுதி, "இது எங்கள் யோசனை. மற்றவர்களது யோசனைகளையும் கேட்டு, நீங்கள் எப்படி முடிவு செய்தாலும் சரி" என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். எல்லாரும் இந்த யோசனையை அப்படியே மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டனர்.

கோடை விடுமுறையில் மாலாவும் நீலாவும் பூங்குடி சென்றபோது புதிய பள்ளிக் கட்டடம் உருவாகிக்கொண்டிருந்தது. அதைக் கண்டு அவர்கள் அடைந்த மகிழ்ச்சியை எவராலும் எடுத்துக் கூற முடியாது!

* * *


நீலா சென்னைக்கு வந்து இரண்டரை ஆண்டுகள் ஓடிவிட்டன. அன்று மாலை நேரம். டாக்டர் சூரியசேகரும் நளினியும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.


"நீலா மிகவும் கெட்டிக்காரி. வழக்கம் போல் எட்டாவது வகுப்பிலும் முதல் இடம் நீலாவுக்குத்தான் ! நம் மாலாவுக்கு இரண்டாவது இடம்!

முன்பெல்லாம் ஆருவது, ஏழாவது இடத்தில்தான் மாலா இருப்பாள். நீலாவுடன் சேர்ந்ததிலிருந்து மாலா எப்படிப் படிக்கிருள்!'' என்ருள் நளினி.

''நீலா வந்ததிலிருந்து படிப்பு மட்டும்தாளு? மாலாவின் பண்புகூட வளருதே! ரவிகூட அவள் சொல்லிக் கொடுத்த பாடல்களை எப்படி அபிநயத் துடன் ஆனந்தமாகப் பாடுகிருன்! அழகாக ஆடுகிருன்.

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே, டெலிபோன் மணி ஒலித்தது. டாக்டர் போனை எடுத்து, ''டாக்டர் சூரியசேகர் பேசு கிறேன்'' என்ருர். அப்போது, நீலாவும் மாலாவும் விரைவில் சோவியத் நாடு செல்லப் போகிருர்கள் என்ற இனிப்பான செய்தியை அவர் எதிர்பார்க்க வில்லை!





# 14. நீலா மாலாவுக்கு நேரு பரிசு !

ஆறு மாதங்களுக்கு முன்பு, கஸ்தூரிபா கல்வி நிலையத்தில் பிரார்த்தனைக் கூட்டம் நடந்த போது, தலைமை ஆசிரியை தங்கம்மாள் ஒரு செய்தியைச் சொன்னார்.

“மாணவிகளே, சோவியத் நாடு, சிறுவர் சிறுமியருக்காக ஒரு கட்டுரைப் போட்டியை அறிவித்திருக்கிறது. 10 முதல் 13 வயது வரையுள்ள குழந்தைகள் இதில் கலந்து கொள்ளலாம். இந்தப் போட்டிக்கு என்ன பெயர் தெரியுமா ? ‘சோவியத் நாடு—நேரு பரிசுப் போட்டி’. இந்தப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் மனிதர்களுக்குள் மாணிக்கமாகத் திகழ்ந்த நேருஜியைப் பற்றியோ அல்லது புதிய ரஷ்யாவை உருவாக்கிய புரட்சி வீரர் லெனினைப் பற்றியோ எழுதலாம். நேருஜியையும் லெனினையும் சேர்த்துக்கூட எழுதலாம். வெள்ளைத் தாளில் இருபத்தைந்து பக்கங்களுக்கு மேற்படா

மல் எழுத வேண்டும். கட்டுரை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி வருகிற செப்டம்பர் பதினைந்து.

"இந்தியா முழுவதும் நடைபெறும் இப்போட்டியில் மிகச் சிறந்த கட்டுரைகளை எழுதிய ஐந்து குழந்தைகளைத் தேர்ந்தெடுப்பார்கள். அந்த ஐவருக்கும் பரிசு உண்டு. என்ன பரிசு தெரியுமா?

"சோவியத் நாட்டுக்கு அழைத்துச் சென்று அங்கு 'ஆர்த்தெக்' என்ற குழந்தைகள் முகாமில் ஒரு மாதம் தங்கியிருக்க ஏற்பாடு செய்வார்கள். அழகிய அந்த முகாமிலே ஆனந்தமாகப் பொழுது போக்கலாம். அந்த முகாம், கருங்கடல் என்று கேள்விப்பட்டிருப்பீர்களே—அதன் கரையில்தான் இருக்கிறது. முயற்சி செய்யுங்கள். நவம்பர் 14ஆம் தேதி நேருஜி பிறந்த நாளில் பரிசு பெற்றவர்களின் பெயர்கள் அறிவிக்கப்படும். கட்டுரையை 'சோவியத் நாடு' நேரு பரிசுக் குழு, புது தில்லி-1' என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும். முழு விலாசமும் என்னிடம் இருக்கிறது. தேவையானவர்கள் பெற்றுக் கொள்ளலாம்."

அன்று வீடு திரும்பும்போது, "நீலா, காலையிலே நம் தலைமை ஆசிரியை சொன்னார்களே, அந்தப் போட்டிக்கு நீ ஒரு கட்டுரை எழுது. பரிசு கிடைக்கும்" என்றாள் மாலா.

"நான்தான் எழுத வேண்டுமா? நீ எழுது."

"நீலா, உனக்குத்தான் என்னைவிட நிறைய விஷயம் தெரிந்திருக்கிறது. பள்ளிக்கூட நூல்

நிலயத்திலே இருக்கிற புத்தகங்களிலே பாதியைப் படித்திருக்கிருய். நீ கட்டுரை எழுதுவது சுலபம். நீதான் எழுத வேண்டும்.''

''சரி, ஒன்று செய். நான் கட்டுரை எழுதிப் பார்க்கிறேன். நன்ருக இருந்தால், அதற்கு நீதான் படம் போட்டுத் தரவேண்டும்......ஆனல், கட்டுரைக்கு மட்டும்தானே பரிசு! ஓவியத்துக்கு இல்லேயே!''

''அதனுல் என்ன? நான் படம் போட்டுத் தருகிறேன். உனக்குப் பரிசு கிடைத்தால், எனக்கும் கிடைத்த மாதிரிதான். நீ பரிசு பெற்று சோவியத் நாட்டுக்குப் போய்வந்தால், எல்லாருக்கும் பெருமை தானே!''

நீலா ஒரு வார காலமாக நேரம் கிடைக்கும் போதெல்லாம் இதைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தாள். ஒரு நாள் இரவு எல்லாரும் ஒன்ருக உட்கார்ந்து சாப்பிடும்போது, ''மாலா, நேருஜியையும் லெனினயும் சேர்த்து ஒரு கட்டுரை எழுதினுல் என்ன ?'' என்று நீலா கேட்டாள்.

உடனே டாக்டர், ''நல்ல யோசனைதான். இருவருமே உலகத் தலேவர்கள்; பெரிய தேசபக்தர்கள்; செயற்கரிய செய்தவர்கள்.. இருவரையும் சேர்த்தே எழுது நீலா'' என்று ஊக்கமூட்டினுர்.

''உன் கட்டுரைக்கு என்ன பெயர் வைப்பாய்?'' என்று கேட்டாள் மாலா.

நீலா சிறிது நேரம் யோசித்தாள். பிறகு சொன்னாள் : "இப்படி வைக்கலாமா ? 'நேரு மாமா-லெனின் மாமா' என்று வைத்தால்...?"

"அருமையான பெயர். அப்படியே வைத்து விடலாம்" என்றாள் நளினி.

நீலா நூல் நிலையத்திலிருந்த நேருஜியைப் பற்றிய புத்தகங்களையும், லெனினைப் பற்றிய புத்த கங்களையும் எடுத்துவந்து தினமும் ஒரு மணி நேர மாவது படிப்பாள். ஆகஸ்ட் முதல் தேதி பிள்ளை யார் சுழி போட்டுக் கட்டுரையை எழுதத் தொடங்கினாள்.




அவள் எழுதிய கட்டுரைக்கு மிகவும் அழகாகப்பத்துப் படங்கள் வரைந் தாள், மாலா. அட்டை யில் நேரு மாமாவும் லெனின் மாமாவும் உட்கார்ந்திருக்கிறார் கள். அவர்களுக்கு நடுவிலே ஒரு சிறுமி நிற்கிறாள். அவள் இருவர் தோள்களி லும் கைபோட்டுக் கொண்டு சிரிக்கிறாள்......இப் படி ஓர் அழகான படம் போட்டிருந்தாள், மாலா.

கட்டுரையையும் படங்களையும் பார்த்த டாக்டர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். பிறகு தமது மனைவி யைப் பார்த்து, 'நளினி, நீலா எவ்வளவு நன்றாக இந்தக் கட்டுரையை எழுதியிருக்கிறாள்! ஓர் இடத் தைப் படித்துக் காட்டுகிறேன், கேள்:

"நேரு மாமாவுக்குக் குழந்தைகள்என்றால் கொள்ளை ஆசை. குழந்தைகளின் மலர்ந்த முகங்களைக் காணும் போதெல்லாம் அவருக்கு மகிழ்ச்சி பொங்கும். 'குழந்தைகளுடன் கூடி இருக்க, குழந்தைகளுடன் கொஞ்சிப் பேச, குழந்தைகளுடன் குதித்து விளையாட எனக்கு மிகவும் ஆசை' என்று அடிக்கடி கூறுவார். அவருடைய பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண் டாட வேண்டும் என்று பலர் விரும்பினார்கள். ஆனால், நேரு மாமா அதற்கு இணங்கவில்லை. தொடர்ந்து வற்புறுத்தி வந்தார்கள். கடைசி யாக அவர் இணங்கினார். என் பிறந்த நாளைக் கொண்டாட வேண்டுமானால், அதைக் குழந் தைகள் தினமாகக் கொண்டாட வேண்டும். அதுதான் என் விருப்பம்' என்றார். நேரு மாமா பிறந்த நவம்பர் 14ஆம் தேதி குழந்தைகள் தின மாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அதை நாம் எல்லாரும் எவ்வளவு குதூகலமாகக் கொண்டாடி வருகிறோம்!

'நேரு மாமாவைப் போலவே லெனின் மாமாவும் குழந்தைகளிடத்தில் மிகுந்த அன்பு வைத்திருந்தார். எதிர்காலத்தில் நாட்டை

நடத்திச் செல்லும் நல்லவர்களாக, வல்லவர்களாக நம் குழந்தைகள் விளங்க வேண்டும். ஆகையால், எவை எவை நல்லவையோ அவை யெல்லாம் குழந்தைகளுக்கு இன்று கிடைக்க வேண்டும்' என்று கூறுவார். மாணவர்களைப் பார்க்கும் போதெல்லாம், 'படிக்கிற வயதிலே நீங்கள் படிப்பில்தான் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் முதல் கடமை கல்வி கற்பது; இரண்டாவது கடமை கல்வி கற்பது; மூன்ருவது கடமை கல்வி கற்பது' என்று அழுத்தமாக அறிவுரை கூறுவார்."

நீலா எழுதிய கட்டுரையில் இந்தப் பகுதியை டாக்டர் படித்துக்காட்டியதும், "ஆஹா! நீலா எவ்வளவு நன்ருக எழுதியிருக்கிருள்! சில பிள்ளைகள் பெரியவர்களை எழுதித் தரச் சொல்லி, அதைத் தாங்களே எழுதியதாகக் கூறிப் பரிசையும் வாங்கி விடுவார்கள். ஆனுல், நம் நீலா யாருடைய உதவியும் இல்லாமல், அவளாகவே புத்தகங்களைப் படித்து, படித்ததைப் பற்றி நன்ருக யோசித்து, அழகாக எழுதியிருக்கிருள்" என்ருள் நளினி.

"நிச்சயம் இந்தக் கட்டுரைக்குப் பரிசு கிடைக்கும். பரிசு கிடைத்ததும், நீலா, நீ என் வாய்க்குச் சர்க்கரை போட வேண்டும்" என்று சிரித்துக்கொண்டே சொன்ருள் மாலா.

இப்படி மாலா, மாலாவினுடைய அப்பா, அம்மா எல்லாரும் பாராட்டிய கட்டுரைக்குத்தான் நேரு பரிசு கிடைத்திருப்பதாக டெலிபோனில்

செய்தி வந்தது. ஆம், சென்னையில் உள்ள சோவியத் தூதரகத்தில் இருந்துதான் டாக்டர் சூரியசேகருக்கு இத்தகவலைத் தெரிவித்தார்கள்.

டெலிபோனில் பேசிய தூதரக அதிகாரி சொன்னார்: "கட்டுரைக்கு மட்டும்தான் பரிசு கொடுப்பதாக இந்த ஆண்டு அறிவித்தோம். ஆனால், நீலா எழுதிய கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்ததோடு, அதற்காக வரைந்த சித்திரங்களும் மிகச் சிறப்பாக இருந்தனவாம். அதனால், பரிசுக் குழுவினர் கட்டுரை எழுதிய நீலாவுக்கும், சித்திரங் கள் வரைந்த மாலாவுக்கும் பரிசு கொடுப்பதென முடிவு செய்திருக்கிறார்கள். இருவரையும் சோவியத் நாட்டிற்கு விமானத்திலே அழைத்துச் செல்லவும் அங்கே ஒரு மாதம் சிறுவர் முகாமிலே தங்க வைக்கவும் ஏற்பாடு செய்கிறோம். இது குறித்து, இன்று தபாலில் நீலாவுக்கும் மாலாவுக்கும் தனித் தனியாகக் கடிதம் எழுதியிருக்கிறோம். நாளைக் காலையில் எல்லாப் பத்திரிகைகளிலும் இச்செய்தி வரும். முன்கூட்டியே உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றுதான் போன் பண்ணினோம்."

"மிகவும் நன்றி" என்று தூதரக அதிகாரிக்கு டாக்டர் நன்றி செலுத்தினார். பிறகு, "நீலா, மாலா, நீலா, மாலா, ஓடி வாருங்கள்" என்று உரக்கக் கூவினார். மாடியில் படித்துக்கொண்டி ருந்த நீலாவும் மாலாவும் படிகளில் தடதடவென்று வேகமாக இறங்கி வந்தார்கள்.

“எங்கே, கை கொடுங்கள்” என்று கூறி நீலாவின் கையை வலது கையாலும், மாலாவின் கையை இடது கையாலும் ஒரே சமயத்தில் பிடித் துக் குலுக்கினர். இருவரும் ஒன்றும் புரியாமல் விழித்தார்கள்.

“நளினி, கொஞ்சம் சர்க்கரை கொண்டு வந்து நீலாவிடம் கொடு. மாலா சொன்னபடியேதான் நடந்து விட்டது. மாலாவின் வாய்க்கு நீலா சர்க்கரை போட வேண்டாமா?” என்றார் டாக்டர்.

“என்ன டாக்டர் சொல்லுகிறீர்கள்?” என்று ஒன்றும் புரியாமல் கேட்டாள் நீலா.

“நீலா, உன் கட்டுரைக்கு நேரு பரிசு கிடைத் திருக்கிறது! உன் கட்டுரைக்கு மட்டுமல்ல; மாலாவின் சித்திரத்துக்கும் பரிசு கிடைத்திருக் கிறது. நீங்கள் இருவருமே சோவியத் நாட்டிற்குச் செல்லப் போகிறீர்கள்!”

“என்னப்பா, உண்மையாகவா?” என்று மாலா கேட்டாள்.

“ஆம், இப்போதுதான் சோவியத் தூதரகத்தி லிருந்து டெலிபோன் வந்தது. நாளைக் காலையில் பத்திரிகைகளிலும் பரிசு பெற்றவர்கள் பெயர்கள் வருமாம். உங்கள் இருவருக்கும் தனித் தனியாகக் கடிதம்கூட எழுதியிருக்கிறார்களாம். நாளைக்குக் கிடைக்கும்” என்றார் டாக்டர்.

இதைக் கேட்ட மாலாவும் நீலாவும் அளவில் லாத மகிழ்ச்சி அடைந்தார்கள். மாலா நீலாவைக்

கட்டிப் பிடித்துக் கொண்டு, "நீலா, பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறும் என்பார்கள். உன் கட்டுரைக்குப் படம் போட்டதால் எனக்கும் பரிசு கிடைத்திருக்கிறது. நானும் உன்னுடன் சோவியத் நாட்டிற்கு வரப் போகிறேன்" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினாள்.

மறுநாள் காலை எல்லாப் பத்திரிகைகளிலும் இச் செய்தி வெளி வந்தது. "வழக்கமாக ஐந்து குழந்தைகளுக்குத்தான் பரிசு கொடுப்பார்கள். ஆனால், இந்த ஆண்டு ஆறு குழந்தைகளுக்குப் பரிசு கொடுப்பதென்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. காரணம், நீலா என்ற சிறுமி எழுதிய கட்டுரையும், அதற்கு மாலா என்ற சிறுமி வரைந்திருக்கும் ஓவியங்களும் ஒன்றை விட்டு ஒன்று பிரிக்க முடியாதபடி அவ்வளவு சிறப்பாக அமைந்துள்ளன. அதனால், இச்சிறுமிகளையும் பிரிக்க வேண்டாம்; சேர்த்தே சோவியத் நாட்டிற்கு அனுப்பி வைக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறார்கள்" என்று பத்திரிகைகளில் விளக்கமாகச் செய்தி வெளி வந்தது.

மத்தியானம் சோவியத் நாடு அலுவலகத்திலிருந்து நீலாவுக்கு ஒரு கடிதமும், மாலாவுக்கு ஒரு கடிதமும் வந்தன. கடிதங்கள் ஆங்கிலத்தில்தான் இருந்தன. மாலாவுடன் ஆறாவது வகுப்பிலிருந்து ஆங்கில மீடியத்தில் நீலாவும் படித்துவந்ததால் ஆங்கிலத்தில் ஓரளவு நன்றாகப் பேசவும், எழுதவும், படித்துப் புரிந்து கொள்ளவும் கற்றுக்கொண்டிருந்

தாள். வகுப்பிலேயே ஆங்கிலத்திலும் முதல் மார்க்கு வாங்கி வந்தாள்.

"மாலா, சோவியத் நாட்டிற்கு நம்முடன் இரண்டு பெண்களும் இரண்டு பையன்களும் வரப் போகிறார்கள். அவர்கள் பெயர், வயது எல்லாம் கூட இந்தக் கடிதத்திலே கொடுத்திருக்கிறார்கள்!" என்றாள் நீலா.

"ஆமாம், நீரஜா, ரேகா...நரேஷ், சந்த்ரேஷ்- நீரஜாவுக்கும் சந்த்ரேஷுக்கும் நம்மைப் போல் பதின்மூன்று வயதுதான். ரேகாவுக்கும் நரேஷுக்கும் ஒரு வயசு குறைச்சல்."

"நம் ஆறு பேரையும் டில்லியிலிருந்து விமானத்திலே சோவியத் நாட்டிற்கு அழைத்துப் போவார்களாம்...டில்லி வரை வந்து, நம்மை வழியனுப்புகிற பெரியவர்களுக்கும் போகவரச் செலவு கொடுப்பார்களாம். ஆளுக்கு ஒருவரை நாம் அழைத்து போகலாமாம்."

"யாரை அழைத்துப் போகலாம்?"

"உன் அப்பாவிடம் கேட்போம். அவர்களே முடிவு செய்யட்டும்" என்று கூறினாள் நீலா. இருவரும் டாக்டரிடம் சென்று கடிதங்களைக் காட்டினார்கள்,

"அடுத்த வருஷம் ஜூன் மாதம் பதினைந்தாம் தேதிதான் டில்லியிலிருந்து நீங்கள் புறப்பட வேண்டும். இன்னும் ஏழு மாதம் இருக்கிறது. அதற்குள்ளே நீங்கள் பல விஷயங்களைத் தெரிந்து

கொள்ள வேண்டும் ..அது சரி, இரண்டு பெரியவர்களை நீங்கள் டில்லிவரை அழைத்து போகலாமே, யாரை அழைத்து போகப் போகிறீர்கள்?'' என்று கேட்டார் டாக்டர்.

''நீங்கள்தான் முடிவு பண்ண வேண்டுமாம். நீலா சொல்கிருள்'' என்ருள் மாலா.

''அப்படியாஞல், நீலா, நீ உன் அம்மாவையும், மாலா, நீ உன் அம்மாவையும் டில்லிவரை அழைத்துபோங்கள்'' என்ருர் டாக்டர்.

''நான் போய் என்ன செய்வது? நீங்கள் போனுலும் இவர்களுக்கு உதவியாயிருக்கும்'' என்ருள் நளினி.

''அப்படியாஞல், நீலாவினுடைய அம்மா, நீ, ரவி, நான் ஆக நால்வரும் இவர்களோடு டில்லி வரை போய் வழியனுப்பி வருவோம். ஆனுல், இரண்டு பேருடைய செலவைத்தான் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். பரவாயில்லை. மேலே ஆகிற செலவை நாமே ஏற்றுக் கொள்வோம்'' என்ருர் டாக்டர்.

''எதற்கும் கோடை விடுமுறை முடிந்துதானே இவர்கள் சோவியத் நாட்டிற்குப் போவார்கள்? நாம் எல்லாரும்தான் கோடை விடுமுறைக்கு வழக்கம்போல் பூங்குடி போவோமே! திரும்பி வரும் போது நீலாவின் அம்மா மீனுட்சியைக் கூட்டி வந்து விடலாம்'' என்ருள் நளினி.

நீலாவும் மாலாவும் நேரு பரிசு பெற்றிருப்பதையும், சோவியத் நாடு செல்லப் போவதையும்

பத்திரிகையின் மூலம் அறிந்த பூங்குடியில் உள்ள பெரியவர்கள், சிறுவர், சிறுமியர் எல்லாரும் நீலாவுக்கும் மாலாவுக்கும் பாராட்டுக் கடிதங்கள் எழுதியிருந்தார்கள். நீலா-மாலா பள்ளிக்கூடத்திலும் அவர்களைப் பாராட்டாதவர்களே இல்லை. தலைமை ஆசிரியை அவர்களைத் தனியாக அழைத்து முதுகிலே தட்டிக்கொடுத்துப் பாராட்டினர்.

நீலா—மாலாவுக்கு நேரு பரிசு கிடைத்த செய்தி வந்து ஒரு வாரம் ஓடிவிட்டது. அன்று இரவு டாக்டர் சூரியசேகர் நீலாவையும் மாலாவையும் அழைத்தார்.


"நாளைக் காலை பத்து மணிக்கு உங்கள் இரண்டு பேரையும் ஒருவருடைய வீட்டுக்கு அழைத்துச் செல்லப் போகிறேன். சோவியத் நாட்டிற்கு நீங்கள் போவதனாலே அவரைப் பார்த்துப் பேசுவது உதவியாயிருக்கும்" என்றார்.

"யாரப்பா அவர்? ரஷ்யாக்காரரா ?" என்று கேட்டாள் மாலா.

"இல்லை."

"அப்படியானால் ரஷ்யத் தூதரகத்திலே வேலை செய்கிறவரா ?"

"அதுவும் இல்லை. அவரைப்பற்றி இப்பொழுது சொல்ல மாட்டேன். நாளைக் காலையில் நீங்களே நேரிலே தெரிந்து கொள்வீர்கள் !"



# 15. சோவியத் நாட்டில் நீலா மாலா !

மறுநாள் காலையில் டாக்டர் சூரியசேகரின் காரில் டாக்டர், நீலா, மாலா மூவரும் புறப்பட்டனர். யார் வீட்டுக்குப் போகிறோம் என்று டாக்டர் சொல்லவில்லை.

டாக்டரின் இடது பக்கத்தில் இருந்த புத்தகத்தை நீலா பார்த்தாள். ''டாக்டர், 'சோவியத் நாட்டில் மூன்று ஆண்டுகள்' என்ற இந்தத் புத்தகத்தை நானும் மாலாவும் படித்திருக்கிறோம். சோவியத் நாட்டைப் பற்றி நிறையத் தெரிந்து கொண்டோம். பேராசிரியர் கனகலிங்கம் மிக நன்றாக எழுதியிருக்கிறார்'' என்றாள்.

''அடடே, நீங்கள் ஏற்கெனவே படித்துவிட்டீர்களா! இப்போது நாம் எங்கே போகிறோம், தெரியுமா? இந்தப் புத்தகத்தை எழுதிய பேராசிரியர் வீட்டுக்குத்தான்! அவர் எனக்கு மிகவும் வேண்டியவர். சோவியத் நாட்டில் மூன்று ஆண்டுகள் இருந்திருக்கிறார். அவருக்கு ரஷ்யமொழி நன்றாகத் தெரியும். சோவியத் நாட்டில் பல மாணவர்களுக்கு

அவர் தமிழ் சொல்லிக் கொடுத்திருக்கிறார். அவரைப் பார்த்துப் பேசினால், அவர் உங்களுக்கு நல்ல நல்ல யோசனையெல்லாம் சொல்லுவார்" என்றார் டாக்டர்.

சிறிது நேரத்தில் மயிலாப்பூரிலுள்ள பேராசிரியர் கனகலிங்கம் வீட்டை அடைந்தார்கள். நீலாவும் மாலாவும் நேரு பரிசு பெற்றிருப்பதை முன்பே அறிந்திருந்த பேராசிரியர் அவர்களை மனமாரப் பாராட்டினார். பிறகு, "ரஷ்யக் குழந்தைகள் இந்தியாவைப் பற்றி நிறைய தெரிந்து கொள்ள ஆசைப் படுவார்கள். நீங்கள் நம் நாட்டைப் பற்றி முடிந்த வரை தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள் ரஷ்யக் குழந்தைகள் கேட்கும் கேள்விகளுக்குத் தெரிந்த வரை பதில் சொல்லுங்கள். தெரியாது போனால், 'தெரியவில்லை' என்று சொல்லி விடுங்கள். தவறாக மட்டும் எதையும் சொல்ல வேண்டாம்" என்று ஆரம்பித்து அந்த நாட்டைப் பற்றியும் மக்களைப் பற்றியும் சுருக்கமாகச் சொன்னார்.

"ஏன் சார், எங்களுக்குத் தமிழில்தான் நன்றாகப் பேசத் தெரியும். ஆங்கிலத்திலும் ஓரளவு பேசுவோம். ரஷ்யக் குழந்தைகளுடன் நாங்கள் எந்த மொழியில் பேசுவது?" என்று கேட்டாள் நீலா.

"நம் தேசத்தைப் போலவே சோவியத் நாட்டிலும் பல மொழிகள் இருக்கின்றன. ஒவ்வொரு பகுதியினரும் வெவ்வேறு மொழி பேசுவர்கள். பள்ளிக்கூடத்தில் அவரவருடைய தாய்மொழிக்குத்

தான் முதல் இடம். இரண்டாவது மொழியாக ரஷ்யமொழி பயில்கிறார்கள். ஆறாவது வகுப்பு முதல் பத்தாவது வகுப்புவரை ஏதாவது ஓர் அயல் நாட்டு மொழியைக் கட்டாயப் பாடமாகக் கற்க வேண்டும். பெரும்பாலான குழந்தைகள் ஆங்கிலம் கற்கிறார்கள். சிலர் ஜெர்மன், பிரெஞ்சு போன்ற மொழிகளைக் கற்கிறார்கள். அதனால், ஆங்கிலம் தெரிந்த குழந்தைகள் பலர் அங்கே இருப்பார்கள்" என்றார் பேராசிரியர்.

பிறகு, "உங்களுக்கு நடனம் ஆடத் தெரியுமா ?" என்று அவர் கேட்டார்.

"சுமாராக ஆடுவார்கள். பள்ளிக்கூட விழாக்களில் இருவரும் சேர்ந்து ஆடியிருக்கிறார்கள். ஆனாலும், நடன ஆசிரியர் வைத்து முறையாகக் கற்றுக் கொள்ளவில்லை" என்று சொன்னார் டாக்டர்.

"நீலா கரக ஆட்டம் நன்றாக ஆடுவாள். நானும் அவளும் குறவன் - குறத்தி டான்ஸ் ஆடிப் பள்ளி விழாவிலே பரிசுகூட வாங்கி யிருக்கிறோம்" என்றாள் மாலா.

"அதையெல்லாம் நீங்கள் குழந்தைகள் முகாமில் ஆடிக் காட்டலாம். ரஷ்யக் குழந்தைகளுக்கு மகிழ்ச்சியாக இருக்கும்... அது சரி. உங்களுக்குப் பாடத் தெரியுமா ?"

"இருவருமே சுமாராகப் பாடுவார்கள். இவர்கள் பள்ளியிலே ஓர் இசை ஆசிரியை இருக்கிறார். அவர்

சொல்லிக் கொடுத்த சில பாடல்களைப் பாடு கிறார்கள்'' என்றார் டாக்டர்.

''அப்புறம் என்ன? இவர்களுக்குப் பாடவும் தெரியும். ஆடவும் தெரியும். ஆடலும் பாடலும் மொழி தெரியாதவர்களைக்கூட எளிதிலே கவர்ந்து விடுமே! இன்னொன்றையும் நான் சொல்ல வேண் டும். ரஷ்ய நாட்டுக் குழந்தைகள் உங்களுக்குச் சிறு சிறு பரிசுகளைக் கொடுப்பார்கள். நீங்களும் பதி லுக்கு ஏதாவது கொடுக்க வேண்டாமா? முடிந் தால் சில பரிசுப் பொருள்களைக் கொண்டுபோவது நல்லது'' என்றார் பேராசிரியர்.

அன்று முதல், பேராசிரியர் சொன்னபடி இந்தி யாவைப் பற்றி நிறையத் தெரிந்து கொண்டார்கள். ரஷ்யாவைப் பற்றியும் அறிந்து கொண்டார்கள். ரஷ்யக் குழந்தைகளுக்குக் கொடுப்பதற்காகப் பல பரிசுப் பொருள்களைச் சேகரித்தார்கள். பளிங்கிலே செய்த தாஜ்மஹால், கருங்கல்லிலே செய்த மகா பலிபுரத் தேர், கண்ணாடியிலே செய்த கபாலீஸ் வரர் கோயில், தந்தத்திலே செய்த யானை, தலைவர் களின் படங்கள் போட்ட தபால் தலைகள், தஞ்சா வூர்ப் பொம்மை போன்ற சில பொம்மைகள், மகாத்மா காந்திக்குப் பிடித்த மூன்று குரங்குகளின் பொம்மை, பைக்குள் அடங்கக் கூடிய அளவிலே திருக்குறளின் ஆங்கில மொழி பெயர்ப்புப் புத்த கம், காந்திஜியின் வாழ்க்கையை எடுத்துக் கூறும் சித்திரக் கதைப் புத்தகத்துடன் இன்னும் சில சிறுவர் புத்தகங்கள்—இப்படிப் பலவற்றையும்

சேகரித்தார்கள். இவற்றுடன் மாலா எழுதிய சில வண்ண ஓவியங்களையும் சோவியத் நாட்டுக்குக் கொண்டு செல்ல நீலா எடுத்து வைத்தாள்.

நீலாவும் மாலாவும் சோவியத் நாடு போவதற்குப் பலவிதமான ஏற்பாடுகளைச் செய்த போதிலும் பள்ளிப் படிப்பிலே எப்போதும் போலவே நல்ல கவனம் செலுத்தி வந்தார்கள். வழக்கம் போல் ஆண்டுத் தேர்விலே நன்ருக எழுதினர்; சிறப்பாகத் தேறினர்.

நீலா, மாலா, நளினி, ரவி நால்வரும் கோடை விடுமுறையைப் பூங்குடியில் குதூகலமாகக் கழித்துவிட்டு, ஜூன் முதல்தேதி சென்னை திரும்பினுர்கள். வரும்போது நீலாவின் அம்மா மீனுட்சியையும் கூடவே கூட்டி வந்துவிட்டார்கள்.

சோவியத் நாடு போவதற்கு ஒரு வாரம் முன்னதாகவே நீலா, மாலா, டாக்டர், நளினி, ரவி, மீனுட்சி அம்மாள் அறுவரும் டில்லி வந்துவிட்டார்கள். டாக்டரின் நெருங்கிய நண்பரான டாக்டர் இந்தர் சிங் என்பவருடைய வீட்டில் தங்கி, அவருடைய காரில் டில்லியில் உள்ள முக்கியமான இடங்களையும், ஆக்ராவிலுள்ள தாஜ்மஹால், கண்ணன் பிறந்த மதுரா போன்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களையும் பார்த்தார்கள்.

ஜூன் 15ஆம் தேதி டில்லியிலிருந்து சோவியத் நாட்டின் தலைநகரான மாஸ்கோவுக்கு நீலாவையும், மாலாவையும், அவர்களுடன் பரிசு பெற்ற நான்கு

குழந்தைகளையும் ஏற்றிச்செல்ல விமானம் தயாராக இருந்தது. டாக்டர், நளினி, மீனாட்சி அம்மாள் மூவரின் பாதங்களை நீலாவும், மாலாவும் தொட்டுக் கும்பிட்டு விடை பெற்றார்கள்.

"பெற்றோரைப் பிரிந்து இவ்வளவு தூரம் செல்கிறார்களே! ஒரு மாத காலம் பிரிந்து இருக்க வேண்டுமே!" என்றெல்லாம் மீனாட்சி அம்மாளும், நளினியும் கவலைப்பட்டார்கள்.

ஆனால், டாக்டர் "இவர்கள் மட்டுமா போகிறார்கள்? கூடவே நான்கு குழந்தைகளும் போகிறார்களே! இவர்களைப் பத்திரமாக அழைத்துச் செல்ல ரஷ்யத் தூதரகத்தைச் சேர்ந்த ஓர் அம்மையாரும் செல்கிறாரே! சின்ன வயதில் இப்படியெல்லாம் வெளிநாடு போய் வந்தால்தான் அவர்களுக்குத் தன்னம்பிக்கை ஏற்படும்" என்று தைரியம் கூறினார்.

டில்லியிலிருந்து மாஸ்கோ நோக்கிப் புறப்பட்டது விமானம். பரிசு பெற்ற ஆறு பேருக்குமே விமானத்தில் செல்வது இதுதான் முதல் தடவை. சுமார் நான்கு மணி நேரம்தான் ஆகியிருக்கும். அப்போது ரஷ்யத் தூதரகத்திலிருந்து வந்த அம்மையார், "இளம் நண்பர்களே, இன்னும் சிறிது நேரத்தில் மாஸ்கோவைக் காணப் போகிறீர்கள். 'மாஸ்க்வா' என்னும் ஆற்றங் கரையில் இந் நகரம் இருப்பதால் இதற்கு 'மாஸ்கோ' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இங்கு இரண்டு நாட்கள்

தங்குவோம். பிறகு ஆர்த்தெக் முகாம் செல்வோம்'' என்றுஅறிவித்தார்.

மாஸ்கோவில் அவர்கள் பல இடங்களைச் சுற்றிப் பார்த்தார்கள். அவர்களின் உள்ளத்தை மிகவும் கவர்ந்தது 'லெனின் மாஸோலியம்' என்பது தான். ஒரு சதுரமான கட்டடத்தின் நடுவே கண்ணாடிப் பேழையில் லெனினுடைய உடல் வைக்கப் பட்டிருக்கிறது. தூங்குவது போல் இருக்கும் லெனின் உருவம் சிறிதுகூடக் கெடாமல் விஞ்ஞான முறையிலே பாதுகாக்கப்படுகிறது.

அதைப் பார்த்ததும், "மாலா, லெனின் இறந்து ஐம்பது ஆண்டுகளுக்குமேல் ஆகிறது. ஆனாலும் அப்படியே பத்திரமாக வைத்திருக்கிறார்களே, இப் படி நம் காந்தித் தாத்தாவின் உடலையும் வைத்திருந் தால், நாமெல்லாம் பார்க்கலாமே!" என்று ஏக்கத் தோடு கூறினாள் நீலா.

இரண்டு நாள் மாஸ்கோவில் தங்கியபின், கருங்கடலின் கரையிலுள்ள ஆர்த்தெக் முகாமுக்கு அவர்களை அழைத்துச் சென்றார்கள். அலை மோதும் கடல், கடற்கரையிலே உயர்ந்த மலைகள், மலைச் சரிவிலே அழகான கட்டடங்கள், சுற்றிலும் பலவித மரங்கள், பலவகைப் பூஞ்செடிகள் இவற்றை யெல்லாம் கண்ட அவர்களுக்கு ஒரே ஆனந்தம்.

அங்கு போய்ச் சேர்ந்த சிறிது நேரத்திலே, அங்கிருந்த ரஷ்யக் குழந்தைகள் எல்லாரும்

அவர்களுக்கு மிகவும் வேண்டியவர்களாகி விட்டார்கள். விதம் விதமான பாட்ஜுகளையும், சோவியத் நாட்டின் அற்புதமான காட்சிகளுடன் கூடிய அஞ்சல் அட்டைகளையும், வண்ண வண்ணத் தபால் தலைகளையும் பல ரஷ்யக் குழந்தைகள் அவர்களுக்குப் பரிசாக அளித்தார்கள்.

ஆர்த்தெக்கில் பல முகாம்கள் இருந்தன. ஒவ்வொரு முகாமிலும் நாற்பது சிறுவர் சிறுமியர் இருந்தனர். அவர்களுக்கு ஆண் லீடர், பெண் லீடர் என்று இரண்டு லீடர்கள் இருந்தார்கள். இந்தியக் குழந்தைகளை அவர்களது முகாம்களுக்கு அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார்கள்.

டில்லியிலிருந்து வந்த சந்த்ரேஷும், நீரஜாவும் ஆறு ரோஜாச் செடிகளைப் பதியன் போட்டுப் பத்திரமாகக் கொண்டு வந்திருந்தார்கள். அன்று மாலை நல்ல ஓர் இடமாகப் பார்த்து, அங்கு ஆறு பேரும் ஆளுக்கு ஒரு செடியாக நட்டார்கள். ரஷ்யக் குழந்தைகள் சுற்றிலும் நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

“நேரு பரிசு பெற்ற நாங்கள், நேருவுக்கு மிகவும் பிடித்தமான ரோஜாச் செடிகளை இங்கு நட்டு வைத்திருக்கிறோம். இச்செடிகள் நன்கு பூத்துப் பல மலர்களைத் தரப் போகின்றன. இங்கு வரும் நண்பர்களுக்கு அந்த மலர்களைப் பார்க்கும் போதெல்லாம் நேரு மாமாவின் நினைவு வரும். அத்துடன் எங்கள் நினைவும் வருமல்லவா?” என்று சிரித்துக்கொண்டே சொன்னாள், நீரஜா.

முகாமில் காலையிலும் மாலையிலும் கட்டாய உடற் பயிற்சி நடக்கும். மற்ற நேரங்களில் ரஷ்ய நண்பர்களுடன் சேர்ந்து மலை ஏறுவார்கள்; நீந்துவார்கள்; விளையாடுவார்கள்; புதிர் போடுவார்கள்; ஒவ்வொருவரது ஊரைப் பற்றியும், மக்களைப் பற்றியும், அவர்களது பழக்க வழக்கங்களைப் பற்றியும் தெரிந்து கொள்வார்கள்.

ரஷ்யக் குழந்தைகளின் தேச பக்தி, ஒழுங்கு, கட்டுப்பாடு, தூய்மை முதலியவற்றைப் பார்க்கும் போது, "நாமும் இப்படி இருக்க வேண்டும். நம் தேசக் குழந்தைகளும் இப்படி இருக்க வேண்டும்" என்று இந்தியக் குழந்தைகள் ஆசைப்படுவார்கள்.

ஆர்த்தெக் முகாமிற்கு வந்த ஐந்தாம்நாள் நீலா மற்ற இந்தியக் குழந்தைகளுடன் காலை உணவு அருந்தச் சாப்பாட்டுக் கூடத்திற்குச் சென்றாள். அப்போது அங்கிருந்த சுமார் நானூறு சிறுவர் சிறுமியர், "நீலா, உனக்கு மகிழ்ச்சியான பிறந்த நாள்" என்று வாழ்த்துக் கூறினார்கள்.

அன்றுதான் நீலாவின் பிறந்த நாள் என்பது அப்போதுதான் நீலாவுக்கே தெரிந்தது. மாலாவும் மற்ற இந்தியக் குழந்தைகளும்கூட அப்போது தான் தெரிந்து கொண்டார்கள். அந்த முகாமிற்கு வரும் ஒவ்வொருவருடைய பெயர், முகவரி, பிறந்த நாள், பிறந்த ஊர் போன்ற விவரங்களை அங்கே உள்ள பதிவுப் புத்தகத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். அன்றுதான் நீலாவின் பிறந்த நாள் என்பதை அப் புத்தகத்திலிருந்துதான் ரஷ்யக்

குழந்தைகள் தெரிந்து கொண்டார்கள்; வாழ்த்தும் தெரிவித்தார்கள்.

சிலர் நீலாவின் கையைப் பிடித்துக் குலுக்கினார்கள்; சிலர் இனிப்பு வழங்கினார்கள்; வேறு சிலர் மலர்களைக் கொடுத்து மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். இப்படி நானூறு பேரும் சேர்ந்து வாழ்த்தியபோது நீலா அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அந்த முகாமில் உள்ள ரஷ்யக் குழந்தைகள் அனைவரையுமே 'இளம் முன்னோடிகள்' என்றுதான் குறிப்பிடுவார்கள். அவர்கள் கழுத்தில் சிவப்பு டை அணிந்திருப்பார்கள். இந்தியக் குழந்தைகளுக்கும் அவர்கள் சிவப்பு டை அணிவித்து, அவர்களையும் கௌரவ இளம் முன்னோடிகளாக்கி விட்டார்கள்.

முகாமில் இருந்தபோது 'இந்திய தினம்' என்று ஒரு நாளைக் கொண்டாடினார்கள். அதையொட்டி ஒரு காட்சி நடந்தது. நான்கு நாட்கள் முன்பே, இந்தியக் குழந்தைகளுக்கு ஏராளமான டிராயிங் தாள்களையும், அட்டைகளையும், வர்ணப் பெட்டிகளையும் கொடுத்திருந்தார்கள். கல்கத்தாவிலிருந்து வந்த நரேஷ், யானை, மயில் போன்ற பல வண்ணப் படங்களை அழகாக வரைந்திருந்தான். மாலாவும் நீலாவின் உதவியுடன் டில்லியில் பார்த்த குதுப்மினார், செங்கோட்டை, ஆக்ராவில் கண்ட தாஜ்மஹால் போன்ற படங்களை அழகாக வரைந்திருந்தாள். 'நேரு மாமா—லெனின் மாமா' புத்தகத்திற்கு அவள் வரைந்திருந்த படங்

களுடன், ஏற்கெனவே அவள் ஊரில் வரைந்திருந்த படங்களையும் காட்சியில் வைத்திருந்தாள்.

கேரளாவிலிருந்து வந்த ரேகா வரைந்திருந்த உழவர், மீனவர், நெசவாளர், கதகளி நடனக் கலைஞர் ஆகியோரின் படங்களையும் ரஷ்யக் குழந்தைகள் கண்டு மகிழ்ந்தனர். அக்காட்சியில் காந்திஜி, நேருஜி, லால்பகதூர் சாஸ்திரி போன்ற தலைவர்களின் படங்களும் வைக்கப் பெற்றிருந்தன. அவற்றுடன் இந்தியக் குழந்தைகள் கொண்டு சென்ற பல கலைப் பொருள்களையும் ரஷ்யக் குழந்தைகள் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தனர்.

அன்று'கோஸ்ட்ரோவையா' என்ற சதுக்கத்தில் உயர்ந்த கம்பத்தில் பட்டொளி வீசிப் பறந்தது இந்தியக் கொடி! இந்தியக் குழந்தைகள் 'ஜனகண மன' கீதம் பாடி முடித்ததும், அவர்களுக்கு ரஷ்யக் குழந்தைகள் வாழ்த்துக் கூறினார்கள். மாலையில் இந்தியக் குழந்தைகளின் கலை நிகழ்ச்சி நடந்தது.

ரேகவின் கதகளி நடனமும், நீலாவின் கரக ஆட்டமும் ரஷ்யக் குழந்தைகளை மிகவும் கவர்ந்து விட்டன. நாய், பூனை, கோழி கத்துவது போல வும், ரயில், ஸ்கூட்டர், ஏரோப்ளேன் வேகமாகச் செல்வது போலவும் நரேஷ் 'மிமிக்ரி' செய்தான். சந்த்ரேஷ் மாஜிக் நிபுணராக வந்து பல மாயா ஜால வித்தைகளைச் செய்து காட்டினான்.

நீரஜா, நேருஜியைப் போல வெள்ளை உடை அணிந்து, தலையில் வெள்ளைத் தொப்பி வைத்து

மேடைக்கு வந்தாள். அவள் தோளில் ஒரு வெள் ளைப் புறு இருந்தது! சமாதானத்துக்கு அறிகுறி யான அந்தப் புறுவைக் கண்டதும், எல்லாருக் கும் ஒரே குதூகலம். அச்சமயம்,, ஒரு ரஷ்யச் சிறுமி மேடைக்கு ஓடி, தன் கையிலிருந்த சிவப்பு டையை நேருவாக நடித்த நீரஜாவின் கழுத்திலே கட்டிவிட்டாள். அப்போது இடைவிடாமல் கை



தட்டி எல்லாரும் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.

"1961ஆம் ஆண்டு நேருஜி இங்கு வந்தபோது அவருக்குச் சிவப்பு டை கட்டியதாகப் புத்தகத்திலே படித்தேன். அது இப்போது என் நினைவுக்கு வந்தது. அதனால்தான் நேரு மாமாவைப் போல் வந்த சகோதரி நீரஜாவுக்கு டை கட்டிவிட்டேன்" என்றாள் அச்சிறுமி.

இந்தியக் குழந்தைகள் தங்களுக்குத் தெரிந்த பாடல்களைத் தனியாகவும், சேர்ந்தும் பாடினார்கள். எல்லாவற்றையும்விட நீலாவும் மாலாவும் ஆடிய குறவன்—குறத்தி நடனத்துக்கு நல்ல வரவேற்பு இருந்தது.

முகாம் முடிவதற்கு முதல் நாள் மாலை, ரஷ்யக் குழந்தைகள் நடனங்கள் ஆடியும், பாடல்கள் பாடியும் எல்லாரையும்—குறிப்பாக இந்தியக் குழந்தைகளை மகிழ்வித்தார்கள்.

முப்பது நாட்களும் முப்பது நிமிஷங்களாக ஓடிவிட்டன. இந்தியக் குழந்தைகள் விடைபெற்றுத் திரும்பும்போது பல ரஷ்யக் குழந்தைகள் அவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்கள். இந்தியக் குழந்தைகளும் தாங்கள் கொண்டுவந்த பரிசுகளை நண்பர்களுக்கு அளித்தார்கள்.

பிரிய மனமில்லாமல் பிரிந்தார்கள்.

**"மகிழ்ச்சியோடு செல்லுங்கள்;**
**மறுபடியும் வாருங்கள்"**

என்று பாடி ரஷ்யக் குழந்தைகள் வழி அனுப்பி ஞர்கள்.

நீலாவும் மாலாவும் டில்லிக்குத் திரும்பி வரு வதற்கு முதல் நாளே டாக்டர் சூரியசேகரும், நீலா வின் அம்மா மீனுட்சியும் டில்லிக்கு வந்துவிட் டார்கள். விமானம் வருவதற்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே விமான நிலையத்தை அடைந் தார்கள்.


விமானம் வரும் சப்தம் கேட்டதுமே, "அதோ நமது நீலா — மாலா வரும் விமானம் வந்து விட்டது!" என்று குழந்தையைப் போலக் குதூ கலத்துடன் கூறினுர் டாக்டர். மீனுட்சி அம்மாளும் ஆவலாக விமானம் இறங்குவதைப் பார்த்துக் கொண்டு நின்ருள்.


விமானத்திலிருந்து பலர் இறங்கினுர்கள். அவர்களின் பின்னுல், பரிசு பெற்ற மற்ற நான்கு குழந்தைகளும் இறங்கினுர்கள். டாக்டரும் மீனுட்சி அம்மாளும், "எங்கே நம் குழந்தைகள்?" என்று ஆவலாகக் கூர்ந்து பார்த்தார்கள். அப் போது மாலா விமானத்தின் உள்ளே இருந்து வருவது தெரிந்தது. "அதோ, மாலா!" என்ருர் டாக்டர்.

நீலா எங்கே? மாலாவும் ரஷ்யத் தூதரகத் தைச் சேர்ந்த அம்மையாரும் நீலாவை அணைத்த படி அழைத்து வருவது தெரிந்தது. நீலாவைப் பார்த்ததும் டாக்டர் திடுக்கிட்டார்!

“என்ன இது! நீலாவின் வலது கண்ணிலே கட்டு! நீலாவுக்கு என்ன நேர்ந்தது?” என்று கதறி விட்டார்.

“என்ன! நீலாவின் கண்ணிலே கட்டா?” என்று துடிதுடித்துப் போனுள் மீனுட்சி அம்மாள்.





## 16. ஒளி தெரிந்தது!

நீலா, மாலாவுடன் திரும்பிவந்த குழந்தைகள் விமானத்தை விட்டு இறங்கியதுமே,

"அதோ, அதோ, எல்லாருக்கும் முன்னால் வருகிறான் சுரேஷ்!"

"அதோ, நம் ரேகா வருகிறாள்!"

"வலது பக்கம் வருகிறான் சந்த்ரேஷ்!"

"சந்த்ரேஷ் பக்கத்திலே வருகிறாள் நீரஜா!"

—இப்படி அந்தக் குழந்தைகளின் உறவினர்கள் மகிழ்ச்சியோடு அவர்களை வரவேற்கத் தயாரானார்கள்.

ஆனால் மீனாட்சி அம்மாளோ, "ஐயோ, நீலாவுக்கும் மாலாவுக்கும் நிறையக் கண் திருஷ்டி பட்டிருக்கும், வீட்டுக்கு வந்ததும் முதல் வேலையாகத் திருஷ்டி சுற்றிப் போட வேண்டுமென்று நினைத்தேனே! கண் திருஷ்டி கழிப்பதற்கு முன்னாலே, நீலாவின் கண்ணுக்கு ஆபத்து வந்துவிட்டதே!" என்று கதறி அழுதாள்.

"அம்மா, அழாதீர்கள். நீலாவுக்கு நல்ல மனசு. அவளுக்கு எந்த ஆபத்தும் வராது. ஒரு வேளை, கண் வலியாக இருந்தாலும் இருக்கலாம். அவசரப்படாதீர்கள். கடவுள் கிருபையாலே எல்லாம் நல்லபடியாக நடக்கும்" என்று ஆறுதல் கூறினார் டாக்டர் சூரியசேகர்.

'மாரியாத்தா, என் நீலாவை நீதான் காப்பாற்ற வேணும்' என்று பூங்குடியில் உள்ள மாரியம்மனை நினைத்து இரு கைகளையும் சேர்த்துக் கும்பிட்டாள் மீனாட்சி அம்மாள்.

இதற்குள், "அதோ, அதோ, ரேணுகா தேவி வருகிறாள்!", "ஆ! பிரபல நட்சத்திரம் ரேணுகா தேவி வருகிறாளே!" என்று விமான நிலையத்தில் கூடியிருந்த சிலர் ஆரவாரத்துடன் கூவினார்கள்.

பல தமிழ்ப் படங்களிலும், சில இந்திப் படங்களிலும் நடித்துப் புகழ்பெற்ற ரேணுகா தேவி, நீலாவுக்கும் மாலாவுக்கும் பின்னால் வந்து கொண்டிருந்தாள். அப்போது அவள் முகத்தில் மலர்ச்சி இல்லை; ஏதோ கவலையுடன் அவள் வருவது தெரிந்தது.

நீலாவும் மாலாவும் நெருங்கி வந்ததும், மீனாட்சி அம்மாள், நீலாவின் அருகிலே ஓடி, 'நீலா, உன்னை நான் 'என் கண்ணே, என் கண்ணே' என்று கூப்பிடுவேனே, இப்போது நீ, உன் கண்ணிலே கட்டுப் போட்டபடி வந்திருக்கிறாயே! என்

னம்மா நடந்தது?'' என்று பதற்றத்துடன் கேட்டாள்.

"ஒன்றுமில்லை, அம்மா. வீட்டுக்குப் போய் சாவதானமாகப் பேசுவோம்'' என்றாள் நீலா. எப்போதும்போல், அவள் சிரித்த முகத்துடனே இருந்தாள்.

அதற்குள் சினிமா நட்சத்திரம் ரேணுகா தேவி, "அம்மா! எல்லாம் என்னால் வந்த தொல்லைதான். என்னை மன்னித்து விடுங்கள்'' என்று கலக்கத்துடன் கூறினாள்.

"என்ன! என்ன நடந்தது?'' என்று கவலையோடு கேட்டாள் மீனாட்சி அம்மாள்.



இதற்குள் ரஷ்யத் தூதரகத்திலிருந்து வந்த இரண்டு அதிகாரிகள் அங்கு வந்துவிட்டார்கள். பரிசு பெற்ற குழந்தைகளை சோவியத் நாட்டிற்கு அழைத்துச் சென்றுரே, தூதரகத்தைச் சேர்ந்த அம்மையார், அவர் அந்த அதிகாரிகளிடம் தனி யாக ஏதோ சொன்ஞர். உடனே அவர்கள் விமான நிலையத்தில் இருந்த ஒரு குளிர் சாதன அறைக்குள் எல்லாரையும் அழைத்துச் சென்ருர்கள்.

அறைக்குள் சென்றதுமே, "மாலா, நீதான் சொல்லேன். என்ன நடந்தது?" என்று கேட்டாள் மீனுட்சி அம்மாள்.

அதற்குள் ரேணுகா தேவி, "அம்மா, நடந்ததை நானே சொல்லுகிறேன். உலகப் பயணம் சென்ற நான், மாஸ்கோவிலிருந்து இந்தக் குழந்தைகளு டன் விமானத்தில் வந்து கொண்டிருந்தேன். வலது பக்கத்தில் நான் உட்கார்ந்து கொண்டிருந் தேன். அதே வரிசையில் இடது பக்கம் நீலாவும் மாலாவும் உட்கார்ந்திருந்தார்கள். நீலாவின் முகம் எங்கோ பார்த்த மாதிரி இருந்தது. 'எங்கே பார்த் தோம்?' என்று யோசித்தேன். அப்போதுதான் எனக்கு ஞாபகம் வந்தது. ஆறு மாதங்களுக்கு முன்பு, சென்னையில் 'பொன் மனம்' என்ற சிறுவர் படத்தைப் பார்த்தேன். அதில் நடித்தவள்தான் நீலா என்பது என் நினைவுக்கு வந்தது. உடனே நீலாவை என் அருகே அழைத்தேன். என் பக்கத்து 'ஸீட்' காலியாக இருந்தது. அதில் நீலாவை உட் காரச் சொல்லி, அவளுடன் பேசிக் கொண்டிருந்

தேன். சிறிது நேரம் சென்றதும், நீலா அவளுடைய இடத்துக்குச் செல்வதற்காக எழுந்தாள். அப்போது சட்டென்று விமானம் சிறிது தூரம் கீழே இறங்கி, பிறகு முன்போல் மேலே பறந்து சென்றது. விமானம் செல்லும் போது, எதிரே ஒரு கழுகு வந்ததாம். அதனால்தான் விமானத்தைச் சிறிது தூரம், கீழே இறக்கியதாகச் சொன்னார்கள். விமானம் சட்டென்று கீழே இறங்கிய போது, எழுந்து நின்ற நீலா என் பக்கமாகச் சாய்ந்தாள். கீழே விழுந்துவிடாதபடி நான் அவளைப் பிடிக்கப் போனேன். அப்போது தவறுதலாக என் விரல் நீலாவின் கண்ணிலே பட்டுவிட்டது. புலி, கரடியைப் போல் நான் நீளமாக வளர்த்திருக்கிறேனே இந்த நகம், இது அவள் கண்ணிலே பட்டுவிட்டது ......"

ரேணுகாதேவி இதைச் சொன்னதும், "என்ன! நகம் பட்டுவிட்டதா ? இந்தக் கூர்மையான நகம் நீலாவின் கண்ணில் பட்டுவிட்டதா !" என்று துடித்தாள், மீனாட்சி அம்மாள்.

உடனே சூரியசேகர், "அம்மா, அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வராதீர்கள். டாக்டர் இந்தர் சிங் வீட்டில்தானே நாம் தங்கியிருக்கிறோம் ? அவர் டில்லியிலேயே பிரபலமான கண் டாக்டர். அவரிடம் காட்டி என்ன செய்யலாம் என்று கேட்போம். எப்படியும் அவர் குணப்படுத்தி விடுவார். உடனே அவரிடம் கொண்டுபோய்க் காட்டுவோம்" என்று கூறினர்.

பிறகு, எல்லாரும் பிரிந்து சென்றுர்கள். அவர்கள் நீலாவிடம் விடை பெறும்போது, அவள் சிரித்தபடியே விடை கொடுத்தாள். "எனக்கு ஒன்றுமில்லை. சரியாகிவிடும்" என்று சொன்னுள். நடிகை ரேணுகா தேவியும், ரஷ்யத் தூதரகத்தைச் சேர்ந்த அம்மையாரும் நீலாவைப் பிரிய மனமில்லாமல் கூடவே வந்தார்கள்.

டாக்டர் இந்தர் சிங், நீலாவின் கண்ணிலே இருந்த கட்டை அவிழ்த்தார். அவிழ்க்கும்போதே, "நீலா, உன் கண்ணில் நகம் பட்டதும் ரத்தம் வந்ததா ?" என்று கேட்டார்.

"இல்லை டாக்டர், நகம் பட்டதும் கண் கலங்கியது; நீர் வழிந்தது; பார்வை மங்கியது. உடனே விமானப் பணிப்பெண்கள் முதல் உதவி செய்து கண்ணைக் கட்டிவிட்டார்கள்."

"சரி, இப்போது நீ உன் இடது கண்ணை மூடிக்கொள்."

நீலா இடது கண்ணை நன்றுக மூடிக் கொண்டாள்.

"வலது கண்ணுல் என்னைப் பார்; தெரிகிறேனு ?"

"இல்லை டாக்டர்."

"இதோ எதிரில் இருக்கிற சுவர் தெரிகிறதா ?"

"இல்லை டாக்டர்."

நீலா பதில் சொல்லச் சொல்ல, "ஐயோ, என் மகளின் ஒரு கண் குருடாகி விட்டதே!" என்று கதறிக் கண்ணீர் விட்டாள் மீனாட்சி அம்மாள்.

டாக்டர் இந்தர் சிங் நீலாவைப் பார்த்து, "நீலா, இதோ இந்த விளக்கு வெளிச்சம் தெரிகிறதா?" என்று கேட்டார்.

"தெரிகிறது டாக்டர்" என்றாள் நீலா.

"வெரிகுட். வெளிச்சம் தெரிகிறதா? அப்படியானால் உள்ளே பார்வை நரம்பு நன்றாக இருக்கிறது! அம்மா, துளிக்கூடக் கவலைப்படாதீர்கள். கருவிழி மட்டும்தான் பாதிக்கப்பட்டிருக்கிறது. நல்லவேளை. வெள்ளை விழியோ, மற்ற உள் உறுப்புகளோ சேதம் அடையவில்லை. ஆகையால், எளிதில் குணப்படுத்திவிடலாம்" என்று தைரியம் கூறினார் டாக்டர் இந்தர் சிங்.

டாக்டர் சூரியசேகர் இதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தார். அப்போது மீனாட்சி அம்மாள், "குணமாக எவ்வளவு நாட்களாகும் ?" என்று கேட்டாள்.

"நன்றாகப் பார்வை தெரிய ஒரு மாதம் ஆகலாம்."

"என்ன! ஒரு மாதமா? அவ்வளவு நாளாகுமா?"

"ஆமாம்மா. கருவிழியில் நகம் பட்டதால் புண் இருக்கிறது. அது ஆறியவுடன் ஆபரேஷன் செய்து .."

"என்ன ! கண்ணிலே ஆபரேஷனா ?"

" சின்ன ஆபரேஷன்தான். ஆபரேஷன் முடிந்ததும் முன்போல் கண் பார்வை வந்துவிடும். இது போல் நான் எத்தனையோ ஆபரேஷன் செய்திருக்கிறேன். நீங்கள் விரும்பினால் இங்கேயே இருந்து குணப்படுத்திக் கொள்ளலாம். சென்னையிலும் இந்த மாதிரி ஆபரேஷன் செய்யக் கூடிய சில கண் டாக்டர்கள் இருக்கிறார்கள்."

டாக்டர் இந்தர் சிங் இப்படிக் கூறியதும், "சென்னையில் இருக்கும் கண் டாக்டர் வேங்கடசாமியை உங்களுக்குத் தெரியுமா ?" என்று கேட்டார் சூரியசேகர்.

"அவரைத் தெரியாமல் இருக்க முடியுமா ? பல மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் சந்தித்திருக்கிறேன் ! இந்தத் துறையில் அவர் பெரிய நிபுணராயிற்றே !" என்றார் இந்தர் சிங்.

உங்களைப் போலவே அவரும் எனக்கு மிகவும் வேண்டியவர். எனக்கு ஊரிலே நிறைய வேலை இருப்பதால், ஒரு மாதம் இங்கே தங்குவது சிரமம். நாளையே சென்னைக்கு விமானத்தில் புறப்பட்டுச் செல்லலாம் என்றிருக்கிறேன்."

டாக்டர் சூரியசேகர் இப்படிச் சொன்னதும், டாக்டர் இந்தர் சிங் தடுத்துச் சொல்லவில்லை. "உங்கள் விருப்பம் போல் செய்யுங்கள்" என்றார்.

நீலாவுக்கு விரைவில் கண் பார்வை தெரிந்து விடும் என்று அறிந்ததும், நடிகை ரேணுகா தேவி மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். டாக்டர் சூரியசேக

ரிடம்,“டாக்டர், நானும் நாளை உங்களுடன் சென்னை வருகிறேன். நீலாவுக்கு வைத்தியம் பார்க்க என்ன செலவானாலும், அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அது என் கடமை. இந்த விபத்தே என்னால் ஏற்பட்டதுதானே!” என்று மனம் உருகிக் கூறினாள்.

“உங்கள் மேல் எந்தக் குற்றமும் இல்லை. அது தற்செயலாக நடந்த விபத்து. சென்னை சென்றதும் உங்கள் வேலையை நீங்கள் கவனியுங்கள். நீலாவின் நிலைமை பற்றி அவ்வப்போது டெலிபோனில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்” என்றார் டாக்டர் சூரியசேகர்.

மறுநாள் விமானத்தில் நீலா, மாலா, டாக்டர் சூரியசேகர், மீனாட்சி அம்மாள், ரேணுகா தேவி ஆகிய ஐவரும் புறப்பட்டுச் சென்னை வந்து சேர்ந்தார்கள்.

‘காலிங் பெல்’ சத்தம் கேட்டதும், மாலாவின் அம்மா நளினி விரைந்துவந்து கதவைத் திறந்தாள். மறுநாள் காலையில் ரயிலில் வருவதாக இருந்தவர்கள், ஒரு நாள் முன்னதாகவே வந்ததைக் கண்டதும், “அடே, இன்றே வந்து விட்டீர்களே!” என்று மகிழ்ச்சி பொங்க வரவேற்றாள்.

டாக்சியிலிருந்து இறங்கிய நீலாவைப் பார்த்ததும், “என்ன நீலா கண்ணிலே கட்டு!” என்று அதிர்ச்சியுடன் கேட்டாள்.

வீட்டுக்குள் சென்றதும், எல்லாவற்றையும் விவரமாக மாலாவும் டாக்டர் சூரியசேகரும் கூறி

ஞர்கள். நடந்ததைக் கேட்டு நளினி மிகவும் வருத்தப்பட்டாள். ஆனல், நீலா சிறிதும் கவலைப்படவில்லை; மகிழ்ச்சியாக இருந்தாள். ரவியைத் தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்சினுள்; அவனுக்கு ரஷ்யாவிலிருந்து கொண்டு வந்த சில பொம்மைகளைக் கொடுத்து விளையாட்டுக் காட்டினுள்.

அன்று மாலை மாலாவும் நீலாவும் தனியாக இருக்கும் போது, "நீலா, உனக்குக் கண் குணமாகிற வரை நானும் பள்ளிக்கூடம் போகமாட்டேன். உன்னுடனேயே இருப்பேன்" என்ருள் மாலா.

"எனக்காக நீ ஏன் பள்ளிக்கூடம் போகாமல் இருக்க வேண்டும்? எப்படியும் ஒரு மாதத்திலே என் கண் குணமாகிவிடும். அப்படிக் குணமாகாமல் என் கண் குருடாகி விட்டால்தான் என்ன? இன்னெரு கண்தான் நன்ருகத் தெரிகிறதே! நான் பூங்குடியில் படிக்கிறபோது, பள்ளிக்கூடத்திலே 'அதிசயப் பெண்மணி' என்ற புத்தகத்தைப் பரிசாகக் கொடுத்தார்கள். அதை எப்போதும் என் பெட்டியிலே பத்திரமாக வைத்திருப்பேன். நீ கூடப் பார்த்திருப்பாயே!"

"ஹெலன் கெல்லர் என்ற அம்மையாரைப் பற்றிய புத்தகம்தானே!"

"ஆமாம், அந்த அம்மையருக்குக் கண் குருடு; காதும் செவிடு. பத்து வயதுவரை வாயும் ஊமையாகவே இருந்ததாம். கடைசிவரை குருடாகவும்,

செவிடாகவும் இருந்த அந்த அம்மையார், கல்லூரி யிலே படித்துப் பட்டம் பெற்ருராம்; நூற்றுக் கணக்கான புத்தகங்களைப் படித்தாராம்; அவரே ஏழு புத்தகங்களை எழுதிஞராம். உலகின் பல பாகங்களுக்கும் சென்று சொற்பொழிவு செய்தா ராம். இந்தச் சென்னைக்குக்கூட ஒரு முறை வந் திருந்தாராம். அவருடைய அதிசய வாழ்க்கை யைத் திரைப்படமாகக்கூட எடுத்திருக்கிருர்களாம். இரண்டு கண்ணும் இல்லாதபோதே அந்தஅம்மாள் பற்பல அற்புதங்களைச் செய்திருக்கிருர்களே, எனக்கு ஒரு கண் போஞல்கூட...''

''நீலா, அப்படியெல்லாம் சொல்லாதே'' என்று குறுக்கிட்டுக் கூறிஞள் மாலா.

மறு நாள் காலை, டாக்டர் வேங்கடசாமி நீலா வின் கண்ணைப் பரிசோதித்தார். புண் ஆறுவ தற்கு மருந்து போட்டுக் கட்டிஞர். 'நிச்சயம் குண மாகிவிடும்' என்று உறுதி கூறிஞர்.

ஒரு நாள் மாலை, டாக்டர் வேங்கடசாமி, டாக்டர் சூரியசேகரிடம், ''இன்று மத்தியானம் ஒருவர் இறந்து விட்டார். அவர் இறப்பதற்கு முன்பு, தான் இறந்ததும் தன் கண் விழிகளை யாருக்காவது தானம் செய்ய வேண்டும் என்று எழுதிக் கொடுத் திருக்கிருர். அவருடைய விழிகளில் ஒன்றை எடுத்துப் பத்திரப்படுத்தி வைக்கச் சொல்லியிருக் கிறேன். நீலாவுக்கு நாளையே அதை வைத்து ஆபரேஷன் செய்துவிடலாம்'' என்ருர்.

டாக்டர் சூரியசேகருக்கு ஒரே மகிழ்ச்சி. அப்போது, கூட இருந்த நளினி டாக்டர் வேங்கடசாமியிடம், "ஏன் டாக்டர், நீலாவின் கண்ணை எடுத்து விட்டு, இறந்தவரின் கண்ணை வைப்பீர்களா ?" என்று கேட்டாள்.

"இறந்தவரின் கண்ணை அப்படியே வைக்க மாட்டோம். நீ லா வி ன் கருவிழிதானே சேதம் அடைந்திருக்கிறது? அதனால், இ ற ந் த வரின் கண்ணிலுள்ள கருவிழியைத் தனியாக எடுப்போம். நீலாவின் கண்ணிலே சேதமடைந்த கருவிழியை அகற்றிவிட்டு, அதற்குப் பதிலாக அந்தக் கருவிழியைப் பொருத்தி விடுவோம். சில நாட்களிலே பார்வை தெரிந்துவிடும்" என்று விளக்கினார்.

மறுநாள் காலை ஆபரேஷன் நடந்தது. "ஆபரேஷன் வெற்றி" என்று மகிழ்ச்சியோடு கூறினார் டாக்டர் வேங்கடசாமி.

* * *

அன்றுதான் கட்டு அவிழ்க்கும் நாள். காலை ஒன்பது மணி இருக்கும். டாக்டர் சூரியசேகர் வீட்டுக்கு டாக்டர் வேங்கடசாமி வந்தார். எல்லாரும் நீலாவைச் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள். நடிகை ரேணுகா தேவியும் தகவல் தெரிந்து அந்தச் சமயம் அங்கே வந்துவிட்டாள்.

"நீலா, இன்னும் சிறிது நேரத்தில் நீ உன் இரண்டு கண்களாலும் நன்றாகப் பார்க்கலாம்.

இதோ கட்டை அவிழ்க்கப் போகிறேன்'' என்று கூறிக்கொண்டே நீலாவின் கண்ணிலிருந்த கட்டை அவிழ்த்தார் டாக்டர் வேங்கடசாமி. பிறகு, இடது கண்ணை நன்ருக மறைத்துவிட்டு, "நீலா, இப்போது எங்களையெல்லாம் தெரிகிறதா?'' என்று கேட்டார்

"ஓ! நன்ருகத் தெரிகிறது. இதோ என் அம்மா. இதோ ரவி. இதோ மாலா'' என்று ஒவ்வொருவராகச் சொன்னுள். அவள் சொல்லச் சொல்ல எல்லாருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

அப்போது, "சார், தபால்!'' என்ற குரல் கேட்டது.

உடனே மாலா ஓடிச் சென்று தபால்காரரிடம் கடிதங்களை வாங்கி வந்தாள். அவற்றில் பெரிய அளவில் ஒரு பத்திரிகை இருந்தது. அதன் மேல் உறையைப் பிரித்து அட்டையைப் பார்த்தாள். "அடே, 'சோவியத் நாடு' பத்திரிகை! நீலா, இடது கண்ணை மூடியபடி இந்த அட்டைப் படத்தைப் பார். இதில் யார் யார் இருக்கிருர்கள்?'' என்று கேட்டாள் மாலா.

"அடடே, நேரு பரிசு பெற்ற நம் ஆறு பேரையும் அட்டையிலே போட்டிருக்கிருர்களே! இதோ மாலா, நீரஜா, ரேகா, நரேஷ், சந்த்ரேஷ்!''

"அது சரி, சுற்றி ஐந்து வட்டங்களிலே நாங்கள் ஐந்து பேரும் இருக்கிறோம். நடுவிலே அழகாகச் சிரித்துக்கொண்டு நிற்பது யார்?''

"அதுவா...? அது வேறு யாரும் இல்லே. உன் அருமைத் தோழி நீலாதான்" என்று கூறி மாலாவைக் கட்டிப் பிடித்துக்கொண்டு கலகல வென்று சிரித்தாள் நீலா. அங்கிருந்த எல்லாரும் அவளுடன் சேர்ந்து சிரித்து மகிழ்ந்தார்கள்!



நீலா, சின்னஞ் சிறு கிராமத்தில் பிறந்த ஓர் ஏழைச் சிறுமி. மாலா, சென்னையிலே புகழுடன் விளங்கும் ஒரு டாக்டரின் மகள். இருவரும் நெருங்கிய தோழிகளாகின்றனர். அவர்களது அன்பினால், பல நன்மைகள் விளைகின்றன. அவர்களது நட்பினால் பல அற்புதங்கள் நிகழ்கின்றன.

குழந்தைக் கவிஞரின் 'பர்மா ரமணி', 'மணிக்கு மணி' போலவே இச்சிறுவர் நாவலும் மிகுந்த சுவையுடையது; பயன் தருவது.

